ஈழமும்
தமிழும் (7)

# சமூகம் வழங்கிய புலமைத்துவ அடையாளங்கள்

(கி.பி. 1900 வரை)







ஞானம் பாலச்சந்திரன்

ஈழமும் தமிழும் (7)



# சமூகம் வழங்கிய புலமைத்துவ அடையாளங்கள்

(கி.பி. 1900 வரை)

ஞானம் பாலச்சந்திரன்

ஞானம் பதிப்பகம்

**ஞானம் வெளியீடு : 45**

SL Rs. 300/-

US $ 3

**ஈழமும் தமிழும் (7) – 'சமூகம் வழங்கிய புலமைத்துவ அடையாளங்கள்'**

ஞானம் பாலச்சந்திரன்

1ஆம் பதிப்பு, செப்டெம்பர். 2017

**Eelamum Thamilum (7) - 'Samuham Valankiya Pulamaithuva Adayalankal'**

Gnanam Balachandran
(balag.lk@gmail.com)

First Edition, Sep. 2017

Designed & Published By: Gnanam Pathippakam, 3B, 46th Lane, Colombo 06, Sri Lanka.
Tel: 0094 11 2586013, Fax: 0094 11 2362862. Email: editor@gnanam.info
Printed by: Kumaran Press (Pvt) Ltd. 39, 36th Lane, Colombo 06, Sri Lanka.

Pages 96 (X + 86)

ISBN 978-955-8354-74-2

PUBLIC DOMAIN You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.



தமிழின் முதற் கலைக்களஞ்சியமான

அபிதான கோசம்

நூலினை எழுதிய

# ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை

(1858–1917)

அவர்களின்

நூற்றாண்டு நினைவாக

இந்நூல்

சமர்ப்பணம்

## அறிஞர் கவனத்துக்கு..

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தையும் அதன் வாயிலாகத் தமிழ்கூறு நல்லுலகின் தமிழ் இலக்கியத்தையும் சீர்மைப்படுத்தும் நோக்குடன் **ஈழமும் தமிழும்** என்னும் தொடர் நூல்களை வெளியிட்டு வருகின்றோம். இந்நூல்களில் மேற்கொள்ளக்கூடிய திருத்தங்களை ஆதாரங்களுடன் அறியத்தருமிடத்து அடுத்துவரும் திருத்திய பதிப்புக்களில் தெரிவித்தவர்களின் பெயர்களுடன் திருத்தங்களையும் உள்ளடக்குவோம்.

நன்றி

**ஞானம் பாலச்சந்திரன்**
3-B, 46th Lane, Colombo - 6, Sri Lanka
balag.lk@gmail.com

# பதிப்புரை

தமிழ் இலக்கிய வரலாற்றிலே சாதாரண குடிமக்கள் சார்ந்து எழுதப்பெற்ற இலக்கியங்கள் தனியடையாளம் பெறுவன. நீதி இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள், பெருங்குடி மக்களை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பெற்ற இலக்கியங்கள் போன்றவை தமிழ் வரலாற்றிலே அதிக பக்கங்களைக் கொண்டுள்ள போதும் **சாதாரண மக்களைப் பாடுபொருளாகக் கொண்டு** எழுதப்பெற்ற இலக்கியங்களும் வரலாற்றில் அதிக கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளமையை அவதானிக்கலாம்.

சாதாரண குடிமக்களைப் பாடுபொருளாகக்கொண்டு பாடப்பெற்ற இலக்கியங் களின் வாயிலாகச் சமூகத்தைப் புரிந்துகொள்ளமுயலும் பல ஆய்வுமுயற்சிகளும் தற்காலத்தில் எம்மிடையே வந்துசேர்ந்துள்ளன. **இது ஒருகோணத்துப் பார்வை.**

முந்தைய காலத்துக் குடிமக்கள், தமிழறிஞர்களையும் அவர்களின் புலமை களையும் தமிழ்சார்ந்த செயற்பாடுகளையும் எவ்வாறு உள்வாங்கிக்கொண்டார்கள்? தம்மைப் பாடிய, தமக்காகப் பாடிய தமிழறிஞர்களுக்கு எத்தகைய அடையாளங்களையும் அங்கீகாரங்களையும் வழங்கினார்கள்? புலமையின் உச்சத்திலிருந்த தமிழறிஞர்களை எத்தகைய அளவுகோல்களைக்கொண்டு மக்கள் புரிந்துகொண்டார்கள்? இத்தகைய கேள்விகளை முன்வைத்து விடைகாண முயல்வது எம்முந்தைய சமூகத்தைப் புரிந்துகொள்வதற்கான **பிறிதொரு கோணத்துப் பார்வையாகும்.**

இத்தகைய முயற்சியின் ஒரு வெளிப்பாடாக, சாதாரண மக்கள் ஈழத்தறிஞர்களுக்கு வழக்கியிருந்த சிறப்புப்பெயர்களையும் பட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு **ஞானம் பாலச்சந்திரன்** எழுதிய **சமூகம் வழங்கிய புலமைத்துவ அடையாளங்கள்** என்கின்ற இந்நூல் வெளிவருகிறது. இந்நூல் **ஈழமும் தமிழும்** என்னும் தொடரில் வெளிவரும் அவரது **ஏழாவது** நூலாகும்.

அரசுகளும், மன்னர்களும், பிரபுக்களும், நிறுவனங்களும் தமிழறிஞர்களுக்கு வழங்கிய பட்டங்கள் ஏராளம் ஏராளம்..!

இந்நூலின் ஆரம்ப அத்தியாயத்தில் காணப்பெறும்

**போர்த்துக்கீசர், மற்றும் ஒல்லாந்தர் காலங்களில் அரசுகளால் கொடுக்கப்பெற்ற பட்டங்களை விலைக்கு வாங்கின பட்டங்களாகவே சமூகம் கணித்துள்ளது.**

என்கின்ற குறிப்பைக் காணும்போது பட்டங்கள் சார்ந்து முந்தைய ஈழத்து மக்கள் கொண்டிருந்த கணிப்பு தெளிவாகின்றது. அத்தகைய சமூகம் தம்மிடையே இருந்த ஆளுமைகளைக் கண்டு, அவர்களை அங்கீகரித்து, சங்கீதச் சுப்பையர், நாடகச்

சுவாமிநாதர், நாடகப் புலவர், பட்டதாரிப் பையன், கணித சிங்கம், சின்னக் காளமேகம் போன்ற பட்டங்களை வழங்கியுள்ளமையைக் காணும்போது எமது புருவங்கள் வியப்பால் உயரத்தான் செய்கின்றன.

ஈழத்தறிஞர்களுக்குச் சமூகம் வழங்கிய சிறப்புப்பெயர்களைக் காணவிழைந்த பாலச்சந்திரன், இதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதற்கு 14ஆம் நூற்றாண்டு தொடங்கி ஈழத்துத் தமிழ் உலகில் காணப்பெற்ற பட்டங்கள் சார்ந்த பார்வையையும் ஆரம்ப அத்தியாயத்தில் முன்வைக்கின்றார்.

ஈழத்துத் தமிழறிஞர்கள் கொண்டிருந்த பட்டங்களின் பின்புலத்தைக் கட்டி யெழுப்பும் ஆரம்ப அத்தியாயமானது, பல சுவையான செய்திகளையும் பதிவுசெய்தமை கவனிக்கத்தக்கது. **மிளகாய்ச் சட்டம்பியார்** என அழைக்கப்பெற்ற முருகேசப் பண்டிதர், **ஆனைக்குட்டிப் புலவர்** என மக்களால் அழைக்கப்பெற்ற சிவசம்புப் புலவர், 1614இல் அற்புத மாதா சிலையைச் செய்த **ஆனைக்குட்டி ஆசாரி** ஆகியோரது செய்திகள் அவற்றில் சிலவாகும்.

புதியதொரு கோணத்தில் எழுதப்பெற்ற இந்நூல் இனிவரும் ஆய்வுகளுக்குத் துணைபுரியும் என நம்புகின்றோம்.

இந்நூலுக்குப் பெருமைசேர்க்கும் வகையில் அணிந்துரை வழங்கிய தகைசார் வாழ்நாட் கல்விப் **பேராசிரியர் சோ. சந்திரசேகரன்** அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

சஞ்சிகைப் பணிக்கும் நூல் பதிப்புப் பணிக்கும் ஆதரவு நல்கிவரும் வாசக அன்பர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றி என்றும் உரியது.

**தி. ஞானசேகரன்**
**'ஞானம்' பதிப்பகம்**
3-B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06, இலங்கை.
editor@gnanam.info

# அணிந்துரை

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வல்லுனரான ஞானம் பாலச்சந்திரன் அண்மைக் காலங்களில் ஈழத்து இலக்கியத்துறைப் பெரியார்கள், அவர்கள் யாத்த நூல்கள், அவர்களின் இலக்கியப்பணி, யாழ்ப்பாணத்தில் உருவான தமிழ்ச்சங்கம் முதலாம் விடயங்களில் ஆழமாக ஆய்வு செய்து ஏராளமாக எழுதி வருகின்றார். அவர் வெளியிட்டுவரும் **ஈழமும் தமிழும்** என்னும் தொடரில் இது **ஏழாவது** நூலாக அமைகிறது. என்னதான் கணினி வல்லுனராக இருந்தாலும் தனது தாய்த்தமிழை மறக்காது, ஏதேனும் காத்திரமான பங்களிப்பைச் செய்யவேண்டும் என்ற உறுதியான இலக்குடன் ஈழத்துப் பழந்தமிழ் இலக்கிய ஆய்வுகளில் ஈடுபட்டு வருவதன் விளைவாக, தற்போது இத்தகைய புத்தாக்க நூலொன்று தமிழ்கூறும் நல்லுலகுக்குக் கிட்டியுள்ளது. இவரைப் போன்ற ஆய்வாளர்களைப் பொதுவாக எம்மத்தியில் காண்பது அரிது என்ற குறிப்புடன் இவ்வணிந்துரையைத் தொடங்குகின்றேன்.

இந்நூலின் உள்ளடக்கத்தில் ஒரு தனிச்சிறப்பும் தனித்துவமும் உண்டு. எவ்வாறாயின் இவ்வாறான ஓர் ஆய்வுத்தலைப்பை அவர் தெரிவுசெய்து தகவல்களைத் திரட்டுவதற்கு அவரது விசாலமான ஆர்வம்மிகுந்த வாசிப்புப் பயிற்சியே காரணமாக இருந்திருக்கவேண்டும். புலமைசார்ந்த நூல்களைக் கருத்தூன்றிப் படிக்கும்போதுதான் இதுவரை நுணுகி ஆராயப்படாத பல கருப்பொருட்களை இனங்காண முடியும். இப்படிப்பட்ட ஆய்வுப்பொருட்கள் **அறிவு இடைவெளி அல்லது ஆய்வு இடைவெளி** (Knowledge / Research Gap) எனச் சொல்லப்படுவதுண்டு. ஒரு விடயம் சார்ந்த நூல்களைப் பரிசீலனை (Literature Review) செய்யும்போது இவ்வாறான ஆய்வு இடைவெளிகளை ஆய்வாளர்கள் இனங்காணுவதுண்டு.

இம்மரபில், நூலாசிரியரும் தமிழ் இலக்கிய, இலக்கண, கணித, சோதிட விற்பன்னர்களுக்கு வழங்கப்பட்ட பட்டங்களையும் அவை சமூகத்தால் வழங்கப் பட்டதற்கான காரணங்களையும் இந்நூலில் ஆராய முற்பட்டுள்ளார். பட்டங்களுக்கான காரணங்களை விளக்குகின்ற போக்கில் அவர், மேற்கண்ட விற்பன்னர்களையும் அவர்தம் அறிவாற்றல்களையும் நூல்களையும் தமிழ் உலகுக்கும் குறிப்பாக இளந்தலைமுறையினருக்கும் மீள் அறிமுகம் செய்கின்றார். தமிழ்கூறும் நல்லுலகினால் நன்கு அறியப்படாத பலரின் இலக்கியப் பங்களிப்புகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மற்றொரு முக்கிய விடயம், தனக்குக் கிடைத்த சான்றாதாரங்களின் மூலப்பிரதி களையும் குறிப்புகளின் இறுதியில் தந்துள்ளார்.

பலருக்குக் கிடைத்த பட்டங்களில் சில சுவாரசியமான அம்சங்களும் உண்டு. தர்க்கம்செய்வதில் கோடரி போன்ற நாக்கைக்கொண்ட தர்க்கக்கோடரி, கோவைத்துறைப் பாடல்களைப் பாடிய கோவைத்துறைச் சுவாமிநாதர், இலக்கணப் பாண்டித்தியம் காரணமாக இலக்கணக் கொத்தர் மற்றும் இலக்கணக் கொட்டன், கணிதப் புலி என இச்சுவாரசியப் பட்டியல் நீண்டு செல்லுகிறது.

தமது இவ்வாய்வை 1900ஆம் ஆண்டுவரை நிறுத்திக்கொண்ட தமது பணியை மேலும் தொடர்வார் என்பது எமது நம்பிக்கை.

**"எமது இளந்தலைமுறையினர் எவ்வளவுதான் நவீன கல்வி, கேள்வி களில் சிறந்து விளங்கினாலும் தமது இலக்கிய, கலாசார, விழுமிய மரபுகளை அறிந்தால் மட்டுமே அவர்கள் தமது சமூகத்தின் உண்மையான உறுப்பினர்களாகப் பொருந்தி வாழமுடியும்"** எனப் பிரஞ்சு சமூகவியலாளரான **எமிலி டேர்க்ஹைம்** (David Émile Durkheim 1858-1917) நூறாண்டுகளுக்கு முன்னரே வலியுறுத்தியிருந்தார். அவரது கூற்று எமது இன்றைய தலைமுறையினருக்கும் பொருந்தும். பாலச்சந்திரனின் இந்நூல் எமது இளந்தலைமுறையினர், எமது மரபுவழி இலக்கிய இலக்கண பாரம்பரியத்தை வளர்த்தவர்களின் சிறப்பை அறிந்துகொள்ளத் துணைபுரிவதுடன், டேர்க்ஹைம் கூறிய சமூகமயமாக்கல் பணியை நிறைவுசெய்வதற்கு சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளது.

பேராசிரியர் **சோ. சந்திரசேகரன்**<br>
கொழும்பு<br>
04–09–2017

# உள்ளடக்கம்

## முன்னீடு


| | | |
|---|---|---|
| 0.0 | ஈழத்துத் தமிழ் அறிஞர்களும் அவர்களுக்குரிய பட்டங்களும் | 01 |


## புலமைத்துவ அடையாளங்கள்


| | | |
|---|---|---|
| 01 | உருட்டன் | 39 |
| 02 | சங்கீதச் சுப்பையர் | 41 |
| 03 | கணித சிங்கம் | 43 |
| 04 | இலக்கணக் கொட்டன் | 46 |
| 05 | இலக்கணக் கொத்தர் | 49 |
| 06 | நாடகப் புலவர் | 51 |
| 07 | கோவைத்துறைச் சுவாமிநாதர் | 53 |
| 08 | நாடகச் சுவாமிநாதர் | 55 |
| 09 | கவிராசர் | 57 |
| 10 | தர்க்ககுடாரதாலுதாரி | 62 |
| 11 | சுத்தாத்துவித சைவசித்தாந்த பிரசாரகர் | 64 |
| 12 | சித்துப் புலவர் | 66 |
| 13 | புலவன் கனகசபை | 67 |
| 14 | பரசமய கோளரி | 69 |
| 15 | ஏகசந்தக்கிராகி | 71 |
| 16 | சின்னத்தம்பி புலவர் | 73 |
| 17 | பட்டதாரிப் பையன் | 75 |
| 18 | சின்னக் காளமேகம் | 77 |
| 19 | கணிதப்புலி - யூகிளிட் | 79 |
| 20 | தோடஞ்ஞர் (Born Critic) | 81 |

0

# ஈழத்துத் தமிழ் அறிஞர்களும் அவர்களுக்குரிய பட்டங்களும்

## 1.0 அறிமுகம்

நாவலர் என்றவுடன் அனைத்துத் தமிழர்களின் மனங்களிலும் **ஆறுமுக நாவலர்** பற்றிய எண்ணம் எழுவது இயல்பானது. **நாவலர்** என்னும் பட்டப்பெயரானது ஈழத்தறிஞர் ஆறுமுக நாவலரையே அடையாளப்படுத்தி நிற்கிறது.

ஆறுமுக நாவலரின் காலத்திலேயே வாழ்ந்த ***சபாபதி*** **நாவலர்** என்கிற ஈழத்து அறிஞர் ஆறுமுக நாவலருடன் மிகுந்த தொடர்புடையவர். ஆறுமுக நாவலருக்குப் பட்டம் வழங்கியது போன்று, பிரசங்கம் செய்யும் திறமையால் ***திருவாவடுதுறை*** ஆதீனத்தினர் **நாவலர்** எனும் பட்டத்தைச் சபாபதி நாவலருக்கும் வழங்கினர். தமிழ்நாட்டின் பல பாகங்களில் பிரசங்கங்கள் செய்த சபாபதி நாவலரின் பிரசங்கத் திறமையைக் குறித்த பல தகவல்கள் உள்ளன. ***பாஸ்கர சேதுபதி*** மகாராஜா அவர்கள், சபாபதி நாவலரை அழைத்து தம்முடன் வைத்துக்கொண்டு அவரின் பிரசங்கங்களைக் கேட்டுள்ளார் என்பது அவற்றுள் குறிப்பிடத்தக்கது.

ஆறுமுக நாவலரால் ஈர்க்கப்பெற்றவரும் அவருடன் தொடர் புடையவரும் ஈழத்து அறிஞருமான ***அம்பலவாண நாவலரும்*** தமது பிரசங்கம் செய்யும் திறமையால் ***திருவாவடுதுறை*** ஆதீனத்தாரால் **நாவலர்** என்னும் பட்டம் பெற்றவர். அம்பலவாணரின் பிரசங்கம் செய்யும் திறமைபற்றிய பல செய்திகள் உள்ளன. இவர் தேவகோட்டையில் பெரியபுராணம் பற்றிச் செய்த பிரசங்கம் நிறைவுற்றதும் அதன் சிறப்பை வியந்து, அம்பலவாண நாவலரை




**நாவலர் – ஆறுமுக நாவலர்**
(**கி.பி.** 1822 - 1879)


யானைமேல் ஏற்றிச்சென்று பன்னீராயிரம் ரூபாய் சன்மானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அம்பலவாண நாவலரை ஆறுமுக **நாவலரின் பாதசேகரர்** எனும் சிறப்புப் பெயரினாலும் குறிப்பிடுவர்.

மேலும், ஆறுமுக நாவலருடன் நேரடித் தொடர்பு கொண்டிராத சிலரும் நாவலர் என்னும் பட்டத்தினைத் தாங்கி ஈழத்திலும் தமிழகத்திலும் வாழ்ந்துள்ளனர். ஈழத்திலே புலோலியைச் சேர்ந்த ***ம. தில்லைநாத நாவலரு***க்கு (கி.பி. *1854-1939*) திருவண்ணாமலை ஆதீனத்தினர் நாவலர் என்னும் பட்டத்தை வழங்கியுள்ளனர். இவர் ***திருவிளையாடற் புராணத்தின் வேதப் பொருளருளிச்செய்த படலத்து***க்கு அகலவுரை செய்துள்ளார். ***திருவள்ளுவர் சமணர் என்னும் கொள்கை மறுப்பு*** என்கிற நூலினையும் எழுதியுள்ளார். தமிழ்நாட்டைச் சேர்ந்த ***குலாம் காதிர் நாவலர்***, ஏறத்தாழ *24* நூல்களை எழுதியுள்ளார். குலாம் காதிர் நாவலர், தமிழகத்தாரால் ***மதுரைத் தமிழ்ச் சங்கத்து நக்கீரர்*** என்று சிறப்பாகக் கூறப்பெற்றவர்.

ஈழத்தைப் பொறுத்தமட்டில் ***நாவலர்*** என்கிற நாமம் பழைமையானது. தெல்லிப்பழையைச் சேர்ந்த ***பூலோகசிங்க முதலியார்*** *17*ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ***திருச்செல்வராசர் காப்பியம்*** என்கிற கத்தோலிக்க காப்பியத்தை ஏறத்தாழ *2000* பாடல்களில் பாடியவர். இவருக்கு ***அருளப்ப நாவலர்*** என்கிற மறுநாமம் இருந்துள்ளமை இவ்விடத்தில் கவனிக்கத்தக்கது.



**நாவலர் –**
**குலாம் காதிர் நாவலர்**



செல்வினுயிர் பெருகுதவச் செல்வரா
யன்கதையைத் தேர்ந்து நுண்ணூற்
றுல்லியமோர்ந் திடும்புலவர் மகிடுங்க
விருத்தத்தாற் சொற்றிட் டானல்
நல்லிசைநா டகமியலின் றமிழ்தெரிநா
வலன்சதுர நாக ரீகன்
தெல்லிநக ரருளப்ப னற்காரைப்
பூலோக சிங்கன் தானே.

**அருளப்ப நாவலர் பாடிய திருச்செல்வராசர் காவியம்**
**பாயிரச் செய்யுள்**

கி.பி.1760களில் மாதகலில் வாழ்ந்த ***கந்தகுலோதுங்க முதலியாரின்*** பௌத்திரனான ***அந்தோனிப்பிள்ளை நாவலர்*** பெரும் புகழ்படைத்த வித்துவானாக இருந்துள்ளார் எனும் பதிவுகள் உள்ளன.

இவ்வாறாக நாவலர் என்கிற பட்டப்பெயருடன் பலர் இருந்துள்ளபோதும் முன்னர் குறித்ததுபோன்று நாவலர் என்கிற பட்டப் பெயரானது ஆறுமுக நாவலரையே குறித்து நிற்பதைக்

காணலாம். ***சமூகத்தோர் வழங்கிய அங்கீகாரமே இதற்குக் காரணமாகும்.*** ஆறுமுக நாவலரைப் பொறுத்தமட்டில் நாவலர் என்று ***திருவாவடு துறை*** ஆதீனத்தினர் வழங்கிய பட்டப்பெயரை சமூகத்தினரும் அங்கீகரித்துக் கொண்டனர்.

ஆறுமுக நாவலர், நாவலர் எனும் பட்டத்துக்கு அடையாள மாக விளங்குவதுபோன்று ஈழத்து மக்கள் மத்தியில் ***பண்டிதமணி*** எனும் பட்டத்துக்கு ***சி. கணபதிப்பிள்ளை*** அவர்கள் அடையாளமாக விளங்கிவருகிறார். சி. கணபதிப்பிள்ளை அவர்கள், *1951*ஆம் ஆண்டு உரையாற்றிய சந்தர்ப்பமொன்றில் அறிஞர்களால் பண்டிதமணி என்கிற பட்டத்தினை வழங்கப்பெற்றார். பண்டிதமணி எனும் பட்டத்தைப் பலர் கொண்டிருப்பினும், சமூகத்தினரின் மனங்களில் பண்டிதமணி என்கிறபோது சி. கணபதிப்பிள்ளையே வலம்வருகின்றார்.

இதனைப்போன்று ஈழத்திலே, ***அருள்வாக்கி*** என்றதும் தெல் தோட்டையைச் சேர்ந்த **அப்துல் காதிர் புலவர்** (கி.பி.*1866-1918*), ***பாகவதர்*** என்றதும் **நல்லை ஆதீன மணிபாகவதர்** (கி.பி.*1918-1981*), ***தங்கத்தாத்தா*** என்றதும் நவாலியைச் சேர்ந்த **சோமசுந்தரப் புலவர்** (கி.பி. *1878-1953*) ஆகியோரைக் குறித்து நிற்பதை உதாரணங்களாகக் கூறலாம்.


உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களால் அங்கீகரித்த பட்டப்பெயர் களில் ஒன்றாக ***தமிழ்த்தூது*** விளங்குகின்றது. தமிழ்த்தூது என்கிற



**தமிழ்த்தாத்தா – உ.வே.சா.**
(**கி.பி.** 1855 - 1842)



**தமிழ்த்தூது – தனிநாயகம் அடிகளார்**
(**கி.பி.** 1913 - 1980)




**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**
(**கி.பி.** 1899 - 1986)



**அருள்வாக்கி – அப்துல் காதிர்**
(**கி.பி.** 1866 - 1918)



**பாகவதர் – நல்லை மணிபாகவதர்**
(**கி.பி.** 1918 - 1981)



**தங்கத்தாத்தா – சோமசுந்தரப் புலவர்**
(**கி.பி.** 1878 - 1953)

கட்டுரைத் தொகுதியை எழுதிய தனிநாயகம் அடிகளார், ***தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார்*** என்று அனைவராலும் அறியப்படுகின்றார். இவ்வாறு உலகளாவிய ரீதியில் **மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயர்** அவர்கள் ***தமிழ்த்தாத்தா*** என்னும் பெயரால் அங்கீகாரம் பெறுகின்றார்.

தமிழ் வரலாற்றிலே தமிழறிஞர்களின் திறமைகளைச் சிறப்பித்து மன்னனோ, ஆதீனமோ, நிறுவனமோ, அமைப்போ, தனிநபரோ பட்டப்பெயர்கள் வழங்கிய ஏராளமான சந்தர்ப்பங்கள்

உள்ளன. இவற்றுக்கு மாறாக, **பண்டிதர், வித்துவான், சதாவதானி** போன்ற திறமைகளை அளவிட்டுப் பெறப்படும் பட்டப்பெயர்களும் உள்ளன.

நிறுவனங்களால் வழங்கப்பெறும் மற்றும் பரீட்சைகளால் பெறப்படும் பட்டப் பெயர்கள் ஒருபுறமிருக்க, ***அறிஞர்களின் திறமை களைக் கணித்து சமூகமே தாமாகக் குறித்த அறிஞர்களுக்குப் பட்டங்கள் வழங்கிய சந்தர்ப்பங்களும் உள்ளன***.

அனேக சந்தர்ப்பங்களில் இவ்வாறாக சமூகம் வழங்கிய பட்டப்பெயர்களின் மதிப்புகள் மற்றைய பட்டப்பெயர்களைவிட ஒருபடி மேலே நிற்கின்றன.

## 2.0 ஈழத்தில் கிடைக்கப்பெறும் அதிபழைய பட்டப்பெயர்கள் :


எமக்கு 1300கள் தொடங்கி **ஈழம் (இலங்கை)** எனும் **பௌதிக** எல்லைப்பரப்பில் எழுந்த நூல்கள் பலவற்றின் முழுவடிவங்களும் கிடைக்கப்பெறுகின்றன. இதற்குமுன்னர் எழுந்ததாகக் கூறப்பெறும் இலக்கியங்கள் உதிரியாகவே எமக்குக் கிடைக்கின்றன. இதனடிப் படையில் இலங்கை எனும் நிலப்பரப்பு / அரசியல் சார்ந்த வரைமுறையிலுள்ள நாட்டின் இலக்கிய வரலாற்றை ஆய்வாளர்கள் கடந்த எட்டு நூற்றாண்டுகளுக்குத் தொடர்ச்சியாக நோக்குவர்.

இருப்பினும், 20 நூற்றாண்டுகளுக்கும் மேற்பட்ட தமிழ் இலக்கியப்பரப்பினுள் 19ஆம் நூற்றாண்டுவரை **ஈழ மண்டலமானது** ஒருபகுதியாகவே கணிக்கப்பெற்றுவந்துள்ளது. 1886ஆம் ஆண்டு மேலைத்தேய கல்விப் பின்னணியில்வந்த ***ஆணல்ட் சதாசிவம்பிள்ளை*** எழுதிய ***தமிழ்ப் பாவலர் சரித்திர தீபகம்*** மற்றும் 1916ஆம் ஆண்டு மரபுவழிக் கல்விப்பின்னணியில்வந்த ***அ. குமாரசுவாமிப் புலவர்*** எழுதிய ***தமிழ்ப் புலவர் சரிதம்*** ஆகிய 'தமிழ்ப் புலவர் சரித நூல்'களில், தமிழ்ப் புலவர்களை ஒரே குழாமாகக் காணும் மரபே வெளிப்பட்டுநிற்பதைத் தெளிவாகக் காணலாம். இருப்பினும் தற்காலத்து அளவீடுகளின்படி ஈழத்துத் தமிழானது ஒரு ***தனிப் பிரிவாகக்*** கணிக்கப்பெற்று வருகின்றது.

ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் கொண்டிருந்த **பட்டங்கள்** பற்றிய தேடலுக்குத் தொடக்கமாக அமைவது மன்னர்கள் கொண்டிருந்த



**ஆணல்ட் சதாசிவம்பிள்ளை**
(**கி.பி.** 1820 - 1896)



**அ. குமாரசுவாமிப் புலவர்**
(**கி.பி.** 1854 - 1922)

பட்டங்களாகும். இறைவனுக்கு வழங்கும் ***நாமாவளிகள்***போன்று மன்னர்களுக்கு வழங்கப்பெற்ற பெயர்களின் வரிசைகளும் காணப் பெறுகின்றன. ***நாமம்*** என்பது பெயரையும் ***ஆவளி*** என்பது வரிசை யையும் குறிப்பது.

ஆரம்பகாலத்தில் ஈழத்தின் வடக்கிலே ***நாகசிற்றரசுகள்*** பல காணப்பெற்றுள்ளபோதும் *8*ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ***உக்கிர சிங்கன்*** மன்னனை யாழ்ப்பாண இராச்சியத்தின் முதலாவது மன்னனாகக் கணிப்பர். இதன்பின்னர் ஏற்பட்ட இடைவெளிகளைத் தொடர்ந்து கி.பி. *13*ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. *1620*இல் போர்த்துக் கேயரின் ஆட்சித் தொடக்கக்காலம்வரை ஈழத்தில் ***யாழ்ப்பாண அரசு*** நிலவி வந்தமைக்கான தெளிவான ஆதாரங்கள் காணப்படுகின்றன. சில வரலாற்று ஆசிரியர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றத்தை கி.பி. *1216*ஆம் ஆண்டாகவும் சில வரலாற்று ஆசிரியர்கள் கி.பி. *1236*ஆம் ஆண்டாகவும் கணித்துள்ளனர்.

யாழ்ப்பாண மன்னர்கள் ***செகராசசேகரன்*** மற்றும் ***பரராசசேகரன்*** என்னும் சிம்மாசனப் பட்டப்பெயர்களைத் தாங்கி வந்துள்ளார்கள். ஈழத்துத் தமிழ் அறிஞர்களுக்கான பட்டப்பெயர்கள் என்று நோக்கும் போது செகராசசேகரன் மற்றும் பரராசசேகரன் ஆகிய இரண்டும் எமக்கு முதலாவதாகக் கிடைக்கும் ***தெளிவான*** ஆதாரங்களாகும்.

| மன்னர் பெயர் | | சிம்மாசனப் பெயர் |
|---|---|---|
| விஜய கூழங்கை | (சக்கரவர்த்தி) | செகராசசேகரன் |
| குலசேகர | (சிங்கையாரியன்) | பரராசசேகரன் |
| குலோத்துங்க | (சிங்கையாரியன்) | செகராசசேகரன் |
| விக்கிரம | (சிங்கையாரியன்) | பரராசசேகரன் |
| வரோதய | (சிங்கையாரியன்) | செகராசசேகரன் |
| மார்த்தாண்ட | (சிங்கையாரியன்) | பரராசசேகரன் |
| குணபூஷண | (சிங்கையாரியன்) | செகராசசேகரன் |
| வரோதய | (சிங்கையாரியன்) | பரராசசேகரன் |
| செயவீர | (சிங்கையாரியன்) | செகராசசேகரன் |
| குணவீர | (சிங்கையாரியன்) | பரராசசேகரன் |
| கனகசூரிய | (சிங்கையாரியன்) | செகராசசேகரன் |
| செண்பசப் பெருமாள் வரவு | | |
| கனகசூரிய சிங்கையாரியன் மீண்டும் | ஆட்சிபீடமமர்தல் | பரராசசேகரன் |
| சங்கிலி - I | | செகராசசேகரன் |
| புவிராஜ பண்டாரம் | | |
| காசி நயினார் | | பரராசசேகரன் |
| பெரியபிள்ளை | | செகராசசேகரன் |
| புவிராஜபண்டாரம் | | பரராசசேகரன் |
| எதிர்மன்ன சிங்கன் | | செகராசசேகரன் |
| சங்கிலிகுமாரன் /சங்கிலி II | | பரராசசேகரன் |

**யாழ்ப்பாண இராச்சியம் – பதிப்பாசிரியர் சி.க.சிற்றம்பலம், 1992,**
**(யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு, பக். XXXV)**



**பரராசசேகரன்**
**(யாழ்ப்பாண மன்னர் காலம்)**

மன்னர்களில் சிலர் தமிழ் அறிஞர்களாகவும் விளங்கியுள்ளார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த ***அந்தகக்கவி வீரராக முதலியார்*** யாழ்ப்பாணம் வந்திருந்தபோது அவரின் புலமையை மெச்சிக் கவிபாடிய பரராசசேகர மன்னன், மற்றும் முச்சங்கங்களுக்குப் பின்னர் அரசினால் பரிபாலிக்கப்பெற்ற தமிழ்ச்சங்கமொன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவி தமிழ் வளர்த்த செகராசசேகர மன்னன் ஆகியோர் ஈழத்துத் தமிழ் அறிஞர்களாக அடையாளம் பெற்றவர்கள். அதேகாலகட்டத்தில் வாழ்ந்த அரசவம்சத்தைச் சேர்ந்த அரகேசரியும் ***இரகுவம்மிசக் காவியம்*** பாடியவர். ***அரசகேசரி*** என்கிற பெயரையும் ஒரு பட்டப்பெயராகத்தான் கணிக்க வேண்டியுள்ளது.

பரராசசேகரன், செகராசசேகரன், அரசகேசரி ஆகியோருக்குக் காலத்தால் முற்பட்டவராக ***சரசோதிமாலை*** என்கிற சோதிடநூல் எழுதிய **தேனுவரைப் பெருமாள்** காணப்பெறுகிறார். ஈழத்தில் எமக்குக் கிடைக்கப்பெறும் முதலாவது முழுமையான நூலாக (கி.பி. 1309-1310) இது அமைகிறது. இவர் ***சரசோதி*** என்பவரின் மைந்தர். இவருக்குப் **பண்டிதர் போசராசர்** என்கிற பட்டம் இருந்தமையை சரசோதிமாலை நூலில் பாயிரத்தின் வாயிலாகக் காணமுடிகிறது.

**சரசோதி மைந்தன் மண்டலமெண்ணுந்**

**தேனுவரைப்பெருமாள் என்றோது**

**பண்டித போசராசன்**

1300களில் **பண்டிதர்** என்கிற பட்டம் எந்த அடிப்படையில் வழங்கப்பெற்றது என்பது தனித்த ஆய்வுக்குரியது. இப்பட்டத்தை அரசு வழங்கியிருக்கலாம் அல்லது புலமைத் தகைமையின் அளவீடாகக் கொடுக்கப்பட்டிருக்கலாம். பிற்காலத்தில் **தட்சண கைலாச புராணம்** என்கிற **கோணேசல புராணம்** பாடிய பண்டிதராசரை, இவரின் காலத்தைச் சேர்ந்த **கவிராஜர்** எனும் புலவர் 'பண்டித ராச சிகாமணி என்னும் நாமத்தெங் குருபெருமான்' என்று பதிவு செய்துள்ளார்.

**பண்டித போசராசர், பரராசசேகரன், செகராசசேகரன், அரசகேசரி** ஆகியோரின் காலத்துக்கு முற்பட்ட காலத்தில், ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் கொண்டிருந்த பட்டங்கள் பற்றிய ஆதாரங்கள் எமக்குக் கிடைக்குமாறில்லை.

பரராசசேகரன், செகராசசேகரன், அரசகேசரி போன்ற பட்டப் பெயர்கள், அவர்களின் தமிழ்ப் புலமையைக் குறித்து வழங்கப்பெற்ற பெயர்கள் அன்று. இருப்பினும் அப்பெயர்களைக் கொண்டிருந்தவர்கள் தமிழ் அறிஞர்களாவும் விளங்கியுள்ளார்கள்.

பண்டித போசராசர் என்கிற பட்டப்பெயர், புலமையின் அடையாளத்தைக் குறித்து வழங்கப்பெற்ற பெயராகும்.

இதன்படி ஈழத்துத் தமிழறிஞர்கள் கொண்டிருந்த பட்டப் பெயர்களை இருபெரும் பிரிவுகளில் அடக்கிப் பார்க்கமுடிகிறது.

1. தமிழ்ப் புலமையைக் குறித்து **வழங்கப்பெறாத** பட்டப்பெயர் களைக் கொண்டிருந்த தமிழறிஞர்கள்

2. தமிழ்ப் புலமையைக் குறித்து **வழங்கப்பெற்ற** பட்டப்பெயர் களைக் கொண்டிருந்த தமிழறிஞர்கள்

## 3.0 தமிழ் புலமையைக் குறித்து வழங்கப்பெறாத பட்டப்பெயர்கள் :

தமிழ்ப் புலமையைக் குறித்து வழங்கப்பெறாத பட்டப்பெயர் களைத் தாங்கிய பல ஈழத்தறிஞர்கள் தமிழ்ப்பணி செய்துள்ளனர். இவர்கள் கொண்டிருந்த பட்டங்களில் பல, அவர்களின் நாளாந்த முதன்மைப் பணியை அடையாளம் காண்பிப்பதாகவோ அல்லது அவர்கள் செய்த தொழிலைக் குறித்தனவாகவோ அமைந்திருந்தன.

**தம்பிரான்** என்பது இறைவனைக் குறிக்கும் பெயராகும். சைவ சமயத்தில் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தம்பிரான் தோழர் என இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. பழங்காலத்தில் மதத்துறவியாக அங்கீகாரம் பெறுவதற்கு தம்பிரான் பட்டம் பெறவேண்டிய முறைமையும் இருந்துள்ளது.

தம்பிரான் பட்டமானது சமயம் சார்ந்து வழங்கப்பெற்ற பட்டப் பெயராகினும், தம்பிரான் என்னும் பட்டம் பெற்றிருந்த சில ஈழத்து அறிஞர்கள் தமிழ்ப்பணி புரிந்துள்ளனர்.

ஈழத்தை போர்த்துக்கேயர் அரசாண்ட காலத்தில் யாழ்ப்பாணத்து திருநெல்வேலியில் பிறந்த **ஞானப்பிரகாசர்** எனும் தமிழறிஞர் தமிழகம் சென்று **தம்பிரான்** பட்டம் பெற்று மடத்து சுவாமியாகியுள்ளார். இவர் ***சிவஞான சித்தியார் உரை, தீட்சாலட்சணம், தத்துவ வியாபார விவரணம், அவஸ்தா நிரூபணம், மகாவாக்கிய சங்கிரணம்*** ஆகிய தமிழ் நூல்களைச் செய்துள்ளார் என்னும் பதிவுள்ளது.

தமிழில் மாத்திரமன்றி, ***பௌஷ்கராம விருத்தி உரை, வடமொழி சிவஞானபோதத்துக்கான உரை, சித்தாந்தசிகாமணி, பிரமாண தீபிகை, சிவஞான போதவிருத்தி, பிராசாத தீபிகை, அஞ்ஞான விவேசனம், சிவயோக சாரம், சிவயோகரத்தினம், சிவாகமாதி மான்மிய சங்கிரகம், ஓமாந்திரி கற்பம்*** ஆகிய வடமொழி நூல்களையும் ஞானப்பிரகாச சுவாமி எழுதியுள்ளார் என்று கூறுவர்.



**ஞானப்பிரகாசத் தம்பிரான்**
(17ஆம் **நூற்றாண்டு**)

யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாசரை ***தேசிகர்*** என்றும் ***முனிவர்*** என்றும் சில பதிவுகள் குறிப்பிடுகின்றன. ஈழத்தில் முதன்முதலாக பஞ்சாங்கம் கணித்த (கி.பி. 1667-1668) இராமலிங்க ஐயரை, ***இராமலிங்க முனிவர்*** எனவும் பதியப்பட்டுள்ளது.

தம்பிரான் பட்டம் பெற்றவர்களில் யாழ்ப்பாண அளவெட்டியைச் சேர்ந்த ***வியாக்கிரத புராணம்*** பாடிய ***வைத்தியநாத தம்பிரானும்,*** பெரிய புராணத்துக்கு முதலாவதாக உரையெழுதிய ***ஆறுமுகத் தம்பிரானும்*** குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

அளவெட்டியைச் சேர்ந்த புகழ்பெற்ற புலவன் கனகசபைப் புலவரின் மாமனாரான சுப்பிரமணியத் தம்பிரான் ஈழத்தில் இருக்கும் போதே தம்பிரான் பட்டம் பெற்றவர். பிற்காலத்தில் சிதம்பரத்தில் வாழ்ந்தவர். ***சுப்பிரமணிய தம்பிரான்,*** தசவாயு, தசநாடிகளைப் பற்றி பத்துப்பாக்கள் பாடியுள்ளதாகப் பதிவுள்ளது.

தமிழ் நாட்டைச் சேர்ந்த ***கனகசபாபதி*** என்பவர் ஈழத்துடன் பெரும் தொடர்புகொண்டவர். ***கனகசபாபதி யோகி, கலைஞானி, பண்டார சந்நிதி*** ஆகிய சிறப்புப்பெயர்களையும் இவர் கொண்டிருந்தார். இவர் பெற்றிருந்த தம்பிரான் பட்டமும் இவரின் கைகள் ஓர் சம்பவத்தில் கூழாகிவிட்டதன் காரணமாகவும் ***கூழங்கைத் தம்பிரான்*** என அழைக்கப் பெற்றவர். கை உறுப்பில் காணப்பெற்ற குறையினைக் குறித்து கனகசபாபதி அவர்கள் கூழங்கை என்று அழைக்கப் பெற்றுள்ளார்.

உறுப்பில் காணப்படும் குறையினைக் குறித்து புலவர்களுக்கு அடைமொழிகளை வழங்கிய வழக்கம் சங்க காலம் தொட்டு இருந்து வருகின்றது.

சங்க காலத்தில் வாழ்ந்த ***பெருந்தலைச் சாத்தனார், ஐயூர் முடவனார், திப்புத் தோளார், நரிவெரூஉத் தலையார், நெட்டிமையார், பரூஉமோவாய்ப்பதுமன், பெருந்தோட் குறுஞ்சாத்தான், பேரெயில் முறுவலார்*** போன்றோர் அவர்களிடம் காணப்பெற்ற உறுப்புகளில் உள்ள குறைபாட்டைக்குறித்து அழைக்கப்பெற்றோர்.

ஈழத்திலும் இவ்வாறான பதிவுகள் உள்ளன. ஈழத்தில் பன்னாலையில் வாழ்ந்த ***சிவானந்தையர்*** அவர்களுக்குத் தலையின்


முன்பக்கத்தில் உயரமான புடைப்பு இருந்ததன் காரணமாக ***மிடாத் தலையர்*** என அழைக்கப்பெற்றுள்ளார். மட்டக்களப்பில் வாழ்ந்த **வேலாப் போடியாரின்** தலை மொட்டை விழுந்திருந்ததன் காரணமாக **மொட்டை வேலாப் போடியார்** என அழைக்கப்பெற்றுள்ளார். மன்னாரில் வாழ்ந்த ***சரிபுத்தீன்*** புலவரின் உடல் ஊனத்தைக் குறித்து **நொண்டிப் புலவர்** என சமூகத்தினர் அழைத்துள்ளனர். கற்பிட்டியில் வாழ்ந்த ***செய்கு அலாவுதீன்*** (கி.பி. *1890-1938*) புலவர், இளமையிலேயே தமது கண் பார்வையை இழந்தவர். இதனால் இவரை ***அந்தகப் புலவர்*** என்றும் ***கடாட்சக் கவி*** என்றும் மக்கள் அழைத்துவந்தனர்.

உறுப்பிலுள்ள குறைகளைக் குறித்து சமூகத்தினர் வழங்கிய பெயர்களில் சில இங்கு சுட்டிக்காட்டப்பெற்றுள்ளன. இவைபற்றிய விரிவான தேடல்கள் இந்நூலிலே மேற்கொள்ளப்பெறவில்லை.

தம்பிரான் பட்டத்தைப் போன்று ***தேசிகர்*** பட்டமும் குரு மரபின ருக்கு வழங்கப்பெற்று வந்துள்ள பட்டமாகும். ஈழத்தில் கரணவாய் ஊரில் வாழ்ந்த ***நமச்சிவாய தேசிகர்*** குறிப்பிடத்தக்கவர். இவர் ***சந்திரசேகர பண்டிதர்*** நல்லூர் கந்தசுவாமிமேல் பாடிய ***கிள்ளைவிடுதூது*** நூல் ஒன்றை பதிப்பித்துள்ளதாக அறியமுடிகிறது. நமச்சிவாய தேசிகரின் தமையனாரான ***திருஞானசம்பந்த தேசிகரும்*** வேதாரணி ஈஸ்வரர்மீது **கோவை** ஒன்று பாடியுள்ளதாகத் தெரிகின்றது. திருஞானசம்பந்த தேசிகரின் மகனான ***செவ்வந்திநாத தேசிகர்***, சிறந்த தமிழ்ப் புலமை வாய்ந்தவர். பல பிரசங்கங்கள் செய்துள்ளதுடன் ***தமிழ் மொழி ஆராய்ச்சி*** என்னும் நூலையையும் இயற்றியுள்ளார்.

***தேசிகர்*** என்னும்போது ***அழகுசுந்தரம்*** எனும் இயற்பெயரைக் கொண்ட ***சி.வை. தாமோதரம்பிள்ளை***யின் மகனாக ***பிரான்சிஸ் கிங்ஸ்பெரி*** முக்கியமானவர் ஆகிறார். பல்கலைக்கழகச் சூழலில் தேசிகர் என்றதும் கொழும்புப் பல்கழைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியிருந்த ***அழகுசுந்தரம் தேசிகர்***தான் ஞாபகத்தில் வருவார்.

***தேசிகர்*** என்னும் பட்டத்தைத் தமது பெயருடன் கத்தோலிக்கர் கொள்ளத்தொடக்கியதை *19*ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் வாழ்ந்த பிற சமயத்து அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ***முத்துக்குமாரக் கவிராயர்*** அவர்கள், தேசிகர் எனத் தமை அழைத்துக்கொண்ட கத்தோலிக்கரை கண்டித்துப் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.



**தேசிகர் – அழகுசுந்தரம் தேசிகர்**
(**கி.பி.** 1873 - 1941)

தேசிகருக்குரிய ஆசார அனுட்டானங்களைக் கடைப்பிடியாது, காலைக்கடனை முடித்து, நீர்கொண்டு அடி கழுவாமல் துடைக்கும் வழக்கத்தினைக் கொண்டிருந்த வெள்ளைக்காரப் பாதிரிமார்களைக் கடுமையாகக் கண்டித்துப் பின்வருமாறு முத்துக்குமார கவிராயர் பாடுகிறார்.

மாசாட மலத்தை விடுத்துக் குதத்திடை
மண்ணிட்டு நீர்கொண்டு சௌசஞ் செய்யாதவர்
**தேசிகராம்** பரிசுத்தருமாம் இனிச்
செப்புவதேதடி ஞானப்பெண்ணே

***முனிவர், பாதிரியார், அடிகளார், சுவாமி*** என்னும் பட்டத்தைக் கொண்டிருந்த சமய குருமார்களும் தமிழ்த்தொண்டாற்றியுள்ளனர்.

ஈழத்தில் முதன்முதலாக பஞ்சாங்கம் கணித்த (கி.பி. 1667-1668) 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இராமலிங்க ஐயரை, **இராமலிங்க முனிவர்** எனவும் இலக்கியப் பதிவுகள் கூறுகின்றன.

18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புதிய ஏற்பாட்டினை முதன்முதலாக முழுமையாக மொழிபெயர்த்த (கி.பி. 1759) **மெல்ஹொ பாதிரியார்**, முன்னோடியான சில தமிழ்த் தொண்டுகள் ஆற்றியுள்ளார். சூடாமணி நிகண்டினுள் புதிய பாடல்களை இயற்றிச் சேர்த்தவர் இவர்.



**சா. ஞானப்பிரகாச சுவாமி**
(**கி.பி.** 1875 - 1947)

*19*ஆம் நூற்றாண்டில் பிறந்த, நல்லூரைச் சேர்ந்த ***சா. ஞானப்பிரகாச சுவாமி,*** தமிழ் ஒலியியல் அகராதிக்கு வித்திட்டவர். *20*ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ***தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார்*** தமிழுக்கான உலகளாவிய தூதராக இருந்தவர்.

பட்டங்களைத் தாங்கித் தமிழுக்கு தொண்டாற்றிய அறிஞர் களுக்கு உதாரணங்களாக இவர்களைக் குறிப்பிடலாம்.

ஈழத்தை ஐரோப்பியர் ஆட்சிசெய்த காலத்தில் அரச நிர்வாகத்தில் இருந்தோருக்கு அவர்கள் பல பதவிகளையும், அப்பதவி சார்ந்த பட்டங்களையும் வழங்கியிருந்தனர். அத்தகைய பட்டங்களைப் பெற்றிருந்த சிலர், தமிழறிஞர்களாகவும் இருந்துள்ளனர்.

***முதலியார்*** என்னும் பட்டம் தாங்கிய பல ஈழத்தவர்கள் தமிழ்ப் பணி புரிந்துள்ளார்கள். வி. சின்னத்தம்பிப் புலவரின் தந்தையாரான ***வில்வராய முதலியார்*** ஒல்லாந்தர் அரசாட்சிக் காலத்தில் தேசவளமை என்கிற பிரமாணத்தைச் செய்ததுடன் தமிழறிஞராகவும் கவி பாடும் வல்லமையுள்ளவராகவும் இருந்துள்ளார்.

இருபாலையைச் சேர்ந்த ***நெல்லைநாத முதலியார்*** மற்றும் அவரின் மைந்தரான ***சேனாதிராய முதலியார்*** ஆகியோர் குறிப்பிடத்தக்கோர் ஆவர். இவர்களுக்குக் காணப்பெற்ற ஞாபகசக்தி காரணமாக எதனையும் ஒருமுறை கேட்டவுடனேயே மனதில் நிறுத்திக்கொள்வர். இதனால் இவர்களை ***ஏகசந்தக்கிராகி*** என சமூகத்தினர் அழைத்தனர்.



**நெல்லைநாத முதலியார்**
(18**ஆம்** **நூற்றாண்டு**)

எழுதுமட்டுவாளில் வாழ்ந்த **மாப்பாண முதலியார்**, **சோமகேசரி** நாடகம் மற்றும் **பரிமளகாச நாடகம்** ஆகிய நாடகங்களை இயற்றியவர். இவற்றுடன் ***விரதநிச்சயம், ஆசௌசவிதி*** ஆகிய நூல்களையும் குறவஞ்சி ஒன்றையும் இயற்றியுள்ளதாக அறியமுடிகின்றது. இவருக்கு **இருமரபுந்துய்ய குலசேகரப் புதுநல்ல மாப்பாண முதலியார்** என்னும் பட்டப்பெயரும் இருந்துள்ளது.

இவர்களைப் போன்று, உடுப்பிட்டியைச் சேர்ந்த ***குமார சுவாமி முதலியார்,*** மாதோட்டத்தைச் சேர்ந்த **குமாரசிங்க முதலியார்**, தெல்லிப்பழையைச் சேர்ந்த ***குமாரகுலசிங்க முதலியார்,*** தெல்லிப் பழையைச் சேர்ந்த ***பூலோகசிங்க முதலியார்,*** கொக்குவிலைச் சேர்ந்த ***சபாரத்தின முதலியார்*** ஆகியோரும் அரசசேவையின் காரணமாக முதலியார் தொழிற்பட்டம் பெற்றிருந்தாலும் தமிழ்ப்பணி ஆற்றிய தமிழறிஞர்களில் சிலர் ஆவர்.

முதலியார் பட்டம்பெற்ற சிலருக்கு ***இராசவாசல் முதலியார்*** என்கிற சிறப்புப் பட்டமும் அரசாங்கத்தால் வழங்கப்பெற்றுள்ளது. நல்லூரைச் சேர்ந்த ***இராசவாசல் முதலியார் சிற். கைலாசபிள்ளை,*** மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அங்கத்தவராக இருந்துள்ளதுடன், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தால் நடாத்தப்பெற்ற பரீட்சைகளுக்கு பரீட்சகராகவும் இருந்துள்ளார்.

முன்னர் குறிப்பிடப்பெற்ற கொக்குவிலைச் சேர்ந்த **சபாரத்தின முதலியாரும் இராசவாசல் முதலியார்** பட்டம் பெற்றவர். பல பிரசங்கங்களைச் செய்துள்ள சபாரத்தின முதலியார், **சீவான்ம பேதம், ஈஸ்வர நிச்சயம், பிரபஞ்ச விசாரம்** ஆகிய நூல்களையும் சில மொழிபெயர்ப்பு நூல்களையும் எழுதியுள்ளார்.

முதலியார் பட்டங்களில் இராசவாசல் முதலியார் போன்று இன்னமும் சில சிறப்புப் பட்டங்கள் இருந்துள்ளன. ஆறுமுக நாவலரின் பாட்டனாரான **சோ. பரமாநந்தருக்கு** **இலங்கைக் காவல முதலியார்** என்கிற சிறப்புப் பட்டம் இருந்துள்ளமை கவனிக்கத்தக்கது. ஒல்லாந்தர் காலத்தில் பெரும் வித்துவானாய் வாழ்ந்தவரும் கொஞ்சொலி எனும் சங்கத்தின் தலைவருமாய் இருந்தவருமான **ஆதிநாராயண கணேசையர்** அவர்களை **பிராமண முதலியார்** என்று அனைவரும் அழைத்துள்ளார்கள்.

ஆறுமுக நாவலரின் தந்தையாரான **ப. கந்தப்பிள்ளை** அவர்கள், அரசாங்கத்தில் **ஆராய்ச்சி** உத்தியோகத்தில் இருந்ததால் சமூகத்தினரால் **ஆராய்ச்சிக் கந்தர்** என்று அழைக்கப்பட்டுள்ளார். சிறந்த தமிழறிஞரான ஆராய்ச்சிக் கந்தர் 21 நாடகங்கள்வரை இயற்றியுள்ளார். சில வைத்திய நூல்களுக்கு உரை எழுதியுள்ளதுடன் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். 18 வருடங்களாக அரசாங்கத்திடம் ஆராய்ச்சி உத்தியோகத்தில் பணிபுரிந்த இவர் **ஆங்கிலம், போர்த்துக்கீஸ், டச்சு** (ஒல்லாந்து) ஆகிய மொழிகளும் தெரிந்தவர்.

போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் ஈழத்தை ஆட்சிசெய்த காலத்தில், ஈழத்துத் தமிழறிஞர்கள் தமிழகம்சென்று தஞ்சை மன்னரிடம் தமது புலமையைக் காட்டிப் பட்டம்பெற்ற சந்தர்ப்பங்களும் பதிவாகியுள்ளன. மாதகல் பகுதியைச் சேர்ந்த **கந்தகுலோத்துங்க முதலியார்** கி.பி.1760களில் வாழ்ந்தவர். இவரின் மகனான **சீமான் கணக்கர்** என்பவர், தஞ்சை அரசிடம் தமது புலமையைக் காட்டி **கவீச்சுரன்** என்கிற பட்டத்தையும் அனேக விருதுசின்னங்களையும் பெற்றுள்ளார். இவரின் மகனும் **அந்தோனிப்பிள்ளை நாவலர்,** என்ற **நாவலர்** பட்டத்தைத் தாங்கிய பெரும் புகழ்படைத்த வித்துவான் ஆவார்.

கந்ததுலோத்துங்க முதலியார்.—இவர் பறங்கியர்காலவிறுதியில் மாதகற்பதியில் விளங்கியவர். காரைக்கால் கார்காத்தவேளாள மரபினர். இவரது சந்ததி எவ்வளவு பெருக்கமும் செல்வாக்கும் பெற்றிருந்ததெனில் "காவோலையைக் கிளப்பக்கிளப்பக் கந்தன் கிளைகிளையாய்வரும்" என ஓர் பேச்சு இன்றைக்கும் நடக்கின்றது. இவர் பௌத்திரனை இரத்தினசிங்கமுதலியார், இராசநாயகமுதலியார், அந்தோனிப்பிள்ளை நாவலர் அக்காலத்திற் பெரும்புகழ்படைத்த வித்துவான். இவர் பிறப்பு 1760 வரையிலிருக்கலாம். இவர் புத்திரர் சீமான்கணக்கர் வடதேசஞ்சென்று தஞ்சாவூர் அரசனால் கவீச்சுரன் எனும்பட்டமும் அநேக விருதுசின்னங்களும் பெற்றுமீண்டார். இவர்க்குப் பௌத்திர முறையினரான சீமாவுடையாரும் கீர்த்திபெற்ற ஓர் தமிழ்வித்துவான். நாடகத்தமிழ் இவர்க்கு அதிகபயிற்சி போலும். இவர்செய்த நூல்களுள் ஞானசவுந்தரி நாடகம் ஒன்று. இவரியற்றிய அநேக தனிப்பாடல்கள் மாதகலில் முதுமொழிபோல இன்றைக்கும் வழங்குகின்றன. யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரித் தமிழ்ப்பண்டிதராயிருக்கின்ற சுபவாக்கியம்பிள்ளை இன்பகவிப்புலவர் இச்சீமாவுடையாரின் சகோதரன் தோமிசுப்பிள்ளையுடையாரின் பௌத்திரன்.

**யாழ்ப்பாண வைபவ கௌமுதி – க. வேலுப்பிள்ளை, 1918, (பக்.** 163-164**)**

யாழ்ப்பாண மன்னர் காலத்திலே ***ராயன், அதிராயன், முதலி*** எனும் பட்டங்கள் வழங்கப்பெற்றன எனவும் அவற்றுக்கு உரிய மதிப்புக் காணப்பட்டதாகவும் அறியமுடிகிறது. போர்த்துக்கீசர், மற்றும் ஒல்லாந்தர் காலங்களில் அரசுகளால் கொடுக்கப்பெற்ற பட்டங்களை ***விலைக்கு வாங்கின பட்டங்களாகவே*** சமூகம் கணித்துள்ளது.

இருப்பினும் ஆங்கிலேயர் காலத்தில் இந்நிலை மாறி அரசு பட்டங்கள் மீண்டும் மதிப்பு பெறத்தொடங்கியுள்ளன. ஆங்கிலேயர் வழங்கிய பட்டங்களை பாத்திரம் அறிந்து வழங்கிய பட்டங்களாகவே சமூகம் கணித்துள்ளது.

அராலியைச் சேர்ந்த ***நா. விஸ்வநாத சாஸ்திரிக்கு*** அவரின் சோதிடத்தின் திறமையை மதித்து ***இராசாவின் கணிதர்*** என்கிற பட்டத்தை பிரித்தானிய - இலங்கை அரசு வழங்கியிருந்தது. இவர் செய்த சோதிடத் தொழில் நிமித்தம் இவருக்கு இராசாவின் கணிதர் என்கிற பட்டம் வழங்கப்பெற்றாலும் விஸ்வநாத சாஸ்திரி ஒரு

"தமிழரசர் காலத்திலே வேளாளருக்கு ராயன் அதிராயன் முதலி என்னும் வரிசைப்பட்டப்பெயர் சூட்டப்பட்டன. பறங்கிக்காரர் காலத்திலே ராயன் அதிராயன் என்னும் பட்டங்களைக் கொடுக்கின் ராசாவென்றெண்ணப் படுவார்களெனத்தள்ளித் தங்கள் பாஷைக்குரிய தொன் எனபதை முதலியென்பதோடு சேர்த்துச் சிலருக்குச்சூட்டினார்கள். பின்னர் அப்பட்டங்களை விலைக்குப் பலசாதிகளுக்கும் விற்று அதனாற் பொருளீட்டினார்கள். ஒல்லாந்தரும் அவ்வாறே பட்டங்களை விற்றுப் பொருளீட்டினர்."

இப்போது நம் ஆங்கிலவரசினர் கல்வியாலும் பரோபகாரத்தினாலும் இராச விசுவாசத்தினாலும் நல்லொழுக்கத்தினாலும் சிறந்தவர்களுக்கு நைட்பட்டம், சி.எம்.ஜி. பட்டம், அதிகாரப் பட்டம், இராசவாயில் முதலியார்ப்பட்டம், முதலியார்ப்பட்டம், சமாதான நீதிபதிப்பட்டம்முதலியனசூட்டிவருகின்றார்கள். இப்பட்டங்கள் பறங்கிக்காரரும் ஒல்லாந்தரும்விற்ற விலைப்பட்டங்கள்போன்றனவல்ல. பாத்திரமறிந்தளிக்கும் பட்டங்களாம். நைட்பட்டம் அதிராயன் என்னும் பட்டத்துக்குச் சமமானது. சி. எம். ஜி. பட்டம் ராயன் என்பதற்கு நிகரானது. நம்மவருள்ளே நைட்பட்டம் பெற்றவர் சேர் குமாரசுவாமி, சேர் அருணாசலந்துரை, சேர் அ. கனகசபை என்பவர்களாம். சி. எம். ஜி. பட்டம்பெற்றவர் கௌரவ பொ. இராமநாதன். அதிகாரப்பட்டம்பெற்றவர் யாழ்ப்பாணம் தலைமை மணியம் தம்பாபிள்ளை. முதலியார்ப்பட்டம்பெற்றவர்கள் சவிரிமுத்துமுதலியார், கெல்லிப்பழை கனகரத்தினமுதலியார், பார் குமாரகுலசிங்கமுதலியார், கல்லக் முருகேசபிள்ளைமுதலியார், Dr. Strong அரசர்கோன்முதலியார், உயரப்புலம் சின்னையா முதலியார், இலங்கைநாயகமுதலியார், ம. முத்துக்குமாரசுவாமி முதலியார், இராமலிங்க முதலியார், நாகலிங்கமுதலியார் முதலியோர்.

முதலியார்ப் பட்டத்தோடு சமாதானநீதிபதிப் பட்டம்பெற்றிருப்பவர் S.சபாரத்தினமுதலியார், இ. கந்தையா முதலியார் சிறுப்பர் அ. நாகநாதமுதலியார் முதலியோர். இந்தியாவிற் பஞ்சம்புகுந்தபோது அதன் நிவிர்த்திக்காகப் பெரும் பொருள் சேகரித்தனுப்பிய பரோபகாரசீலராகிய இந் நாகநாதமுதலியார் கௌரவ தண்டாதிகாரபட்டமும்பெற்று விளங்கிய கோப்பாய் மயில்வாகனந்துரை J–P க்கு மருகர். இராசவாயில் முதலியார்ப்பட்டம்பெற்றவர் K. குமாரகுலசிங்கம், இளந்தலையசிங்க ரகுநாதர், சிற் கைலாசபிள்ளை முதலியோர். J. P. பட்டம்பெற்றவர் அ. மயில்வாகனம், பிறக்றர் சங்கரப்பிள்ளை, ஆ. கதிரவேல், சிறுப்பர் க. ஞானசேகரம், க. நமசிவாயம், ஞா. சண்முகம் முதலியோர்.

**யாழ்ப்பாண வைபவ கௌமுதி – க. வேலுப்பிள்ளை, 1918, (பக்.** 320-321**)**

தலைசிறந்த கணித விற்பன்னர். கிரஹணங்கள் கணிப்பதில் வல்லபர். பழங்காலத்தில் கணிதம், சோதிடம், மருத்துவம் ஆகிய துறைகளும் தமிழ்த்துறைகளாகவே கணிக்கப்பெற்றன என்பது கவனத்துக்குரியது.

ஆசியாவில் பிறந்து பிரித்தானிய அரசாங்கத்தினரால் முதன்முதலில் **சேர்** பட்டம் பெற்றவர் என்ற பெருமைக்குரியவர் முத்துக்குமார சுவாமி. தமிழிலுள்ள செல்வங்களை மேலைத்தேயங் களுக்கு எடுத்துச்சென்றோரில் ***சேர் முத்துக்குமார சுவாமி*** முக்கியத்து வம் வகிக்கின்றார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ***முத்துகுமாரசுவாமி*** பிரித்தானிய இலங்கையின் முதலாவது சட்டவாக்கப் பேரவையில் தமிழ் மக்களின் பிரதிநிதியாகப் பதவி வகித்துச் சேவை புரிந்தவர். இவரின் தந்தை ***கேட் முதலியார் ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி*** சட்டவாக்கப் பேரவையின் முதலாவது தமிழ்ப் பிரதிநிதியாக இருந்தவர். ***ஆங்கிலப் பேச்சுத் திறமைக்கும் நடிப்புத் திறமைக்கும்*** முத்துக்குமாரசுவாமிக்கு **சேர்** பட்டம் வழங்கப்பட்டுள்ளதாகப் பதியப்பெற்றுள்ளது.

*1863*இல் ***அரிச்சந்திர நாடகத்தை*** இவர் ஆங்கிலத்துக்கு மொழி பெயர்த்து பிரித்தானியாவில் மேடையேற்றியுள்ளார். பல மேடைப் பேச்சுக்கள் மேற்கொண்டதுடன் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சேர் முத்துக் குமாரசுவாமியின் புதல்வர் ***கலாயோகி ஆனந்த குமாரசுவாமி*** ஆவார்.



**சேர் முத்துக்குமாரசுவாமி**
(**கி.பி.**1833 - 1879)



**சேர் பொன் இராமநாதன்**
(**கி.பி.**1851 - 1930)



**சேர் பொன் அருணாசலம்**
(**கி.பி.**1853 - 1924)

***சேர்*** பட்டத்தைத் தாங்கிய ***பொன்னம்பலம் இராமநாதன்***, மற்றும் ***பொன்னம்பலம் அருணாசலம்*** ஆகியோர் தேசியத் தலைவர்களாகக் கணிக்கப்பெற்றாலும் இவர்கள் ஆற்றிய சமயச் சொற்பொழிவுகளும் எழுதிய நூல்களும் தமிழறிஞர் பட்டடியலிலும் இவர்களைச் சேர்த்துக்கொள்ளக் காரணமாகின்றன.

*1895*ஆம் ஆண்டு ***சி. வை. தாமோதரம்பிள்ளை***யின் சேவையைப் பாராட்டி ***ராவ் பகதூர்*** என்கிற பட்டத்தைப் பிரித்தானிய - இந்திய அரசு வழங்கியிருந்தது. ***ராவ்*** என்னும் சொல் ***இளவரசர்*** என்பதையும்



**ராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை**
(**கி.பி.**1832 - 1901)

பகதூர் என்னும் சொல் மாண்புக்குரியவர் என்னும் பொருளையும் குறிக்கின்றன. பி. எல். பட்டம் பெற்று நீதிபதியாகச் செயலாற்றிய சி. வை. தாமோதரம்பிள்ளை ஓய்வுபெற்று ஆறு வருடங்களுக்குப் பின்னரே இப்பட்டத்தை அரசு வழங்கியது. சி.வை. தாமோதரம்பிள்ளை நீதிபதியாகவும், தமிழறிஞராகவும் வழங்கிய சிறந்த சேவையின் அங்கீகாரமாக இது கொள்ளப்படுகின்றது.

கற்பிட்டியைச் சேர்ந்த அரசாங்கத்தில் பணிபுரிந்த தமிழறிஞர் காசிச்செட்டியை, ***சீமான் காசிச்செட்டி*** எனப் பொதுவாக அழைத்தமை யையும் இங்கு குறிப்பிடுவது பொருந்தும்.

ஆசிரியர் பணிபுரிந்த பலர், ***சட்டம்பியார்*** என்னும் பட்டத்தினைக் கொண்டு அழைக்கப்பெற்றனர். அராலியைச் சேர்ந்த ***சண்முகச் சட்டம் பியார்,*** *18ஆம்* நூற்றாண்டில் குறிப்பிடத்தக்க ஒரு தமிழ் ஆசிரியர். வட்டுக்கோட்டை மிஷனரியில் கல்வி கற்பித்துள்ளார். தமது இறுதிக் காலம்வரை பல மாணவர்களுக்கு பாடம் கற்பித்த சண்முகச் சட்டம் பியார், நூல் ஏதும் இயற்றியதற்கான பதிவுகள் இல்லை. இருப்பினும் பல தனிப் பாடல்களை இயற்றியுள்ளாார் என அறியமுடிகின்றது.

***உபாத்தியாயர்,*** பட்டத்தைக் கொண்டு அழைக்கப்பெற்ற சுழிபுரத்தைச் சேர்ந்த ***திருஞானசம்பந்த உபாத்தியாயரும்,*** கி.பி. *1882இல்* ***ஆறுமுக நாவலர் சரித்திரம்*** எழுதிய ***கனகரத்தின உபாத்தியாயரும்*** இவ்வடிப்படையில் கணிக்கத்தக்கோர் ஆவர்.

இதேபோன்று ***வைத்தியர், சோதிடர், பத்திராதிபர்*** போன்ற தொழில்சார்ந்த பட்டப்பெயர்களைக் கொண்டிருந்த பலரும் ஈழத்தில் தமிழ்த்தொண்டு ஆற்றியுள்ளதைக் காணலாம். ஊரெழுவைச் சேர்ந்த ***சைவ உதயபானு பத்திராதிபர் சரவணமுத்துப்பிள்ளை, பாலியர்நேசன் பத்திராதிபர் உ. சின்னத்தம்பி*** ஆகியோரை பத்திராதிபர் பட்டத்தைத் தாங்கி வாழ்ந்தவர்களுக்கு உதாரணங்களாகக் கூறலாம்.


இதுவரை இங்கு குறிப்பிடப்பெற்ற பட்டங்கள் அனைத்தும் ஈழத்தவருக்கு தமிழ் குறித்து ***வழங்கப்பெறாத*** பட்டங்களில் ***ஒருசிலவாகும்***. இதனை முழுமையான பட்டியலாகக் கருத இயலாது. தமிழ் குறித்து வழங்கப்பெறாத பட்டங்களைக் கொண்டிருந்த தமிழறிஞர்கள் பற்றிய விபரங்கள் விரிவாக தனித்து ஆராயப்பட வேண்டிய புலங்களில் ஒன்றாக விரிவதை இந்நூலில் மேற்கொண்டுள்ள தேடலின் வாயிலாக உறுதியாகக் கூறலாம்.

## 4.0 தமிழ் புலமையைக் குறித்து வழுங்கப்பெற்ற பட்டப்பெயர்கள் :

அனேகமாக அனைத்துத் தமிழறிஞர்களும் ஏதோவொரு பட்டப்பெயரைத் தாங்கியே வரலாற்றில் வாழ்ந்துவருகின்றனர். ஒருவருடைய பட்டப்பெயர் கண்டறிய முடியாத சந்தர்ப்பங்களில் புலவர் பட்டமோ வித்துவான் பட்டமோ அவர்களின் பெயர்களுடன் ஒட்டிக்கொண்டு வலம்வருவதைக் காணலாம்.

ஒருவரின் தமிழ்ப் புலமையைக்குறித்து பட்டப்பெயர்கள் **வழுங்கப்பெற்ற** சந்தர்ப்பங்களைத் தமிழ் வரலாற்றிலே ஏராளமாகக் காணமுடியும். ***புலவர், பண்டிதர், வித்துவான், வித்துவசிரோமணி, இயற்றமிழ் போதகாசிரியர், உரையாசிரியர், இலக்கண வித்தகர்*** போன்ற பட்டங்களைக் கொண்ட பல தமிழறிஞர்களை அடையாளம் காணமுடிகிறது.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பண்டிதர் பரீட்சையில் சித்தி யடைந்ததால் ***சுவாமி விபுலாநந்தர்***, ***பண்டிதர்*** எனும் பட்டத்தைப் பெற்றுள்ளார். வல்வையைச் சேர்ந்த ***நா. ஏகாம்பரம்*** கொண்டிருந்த ***அட்டாவதானி*** பட்டம், புலோலியைச் சேர்ந்த ***நா. கதிரைவேற்பிள்ளை*** கொண்டிருந்த ***சதாவதானி*** பட்டம் ஆகியனவும் இவ்வகையைச் சேர்ந்தவையே.



**பண்டிதர் – விபுலாநந்த சுவாமிகள்**
(**கி.பி.** 1892 - 1947)



***சதாவதானி – நா. கதிரைவேற்பிள்ளை***
(**கி.பி.** 1871 - 1907)

இவ்வாறாக பரீட்சையில் தேறிய பின்னரோ, அல்லது பரந்த அங்கீகாரங்களின் அடிப்படையிலோ மாத்திரம் பட்டங்களை அனைத்துத் தமிழறிஞர்களும் பெற்றிருந்தனர் என்று அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. பல தமிழறிஞர்களுக்குக் காணப்பெறுகின்ற பட்டங்கள் எவ்வடிப்படையில் வழங்கப்பெற்றன? யாரால் வழங்கப் பெற்றன? எச்சந்தர்ப்பத்தில் வழங்கப்பெற்றுள்ளன என்பவற்றில் சீர்மையைக் காணமுடியாதுள்ளது.

***சி.வை. தாமோதரம்பிள்ளை*** எழுதிய ***சைவமகத்துவம்*** எனும் நூலுக்கு மாறாக ***அருளப்பமுதலியார், சைவமகத்துவதிக்காரம்*** என்னும் கண்டன நூல் எழுதியுள்ளார். இந்நூலுக்கு எதிராக ***வல்வை வைத்தியலிங்கம்*** அவர்கள், ***சைவமகத்துவதிக்கார நிக்கிரகம்*** என்னும் கண்டன நூலை எழுதியுள்ளார். இதனால் சி.வை. தாமோதரம் பிள்ளையும் பிற அறிஞர்களும் சேர்ந்து வல்வை வைத்தியலிங்கம் பிள்ளைக்கு **இயற்றமிழ் போதகாசிரியர்** எனும் பட்டத்தை வழங்கியதாகப் பதிவுகள் உள்ளன.

இவ்வாறாக உடுப்பிட்டி ***சிவசம்புப் புலவருக்கு,*** ***புலவர்*** என்னும் பட்டத்தை ***ஆறுமுக நாவலர்*** வழங்கியதாகப் பதிவுகள் உள்ளன. மட்டுவிலைச் சேர்ந்த **வேற்பிள்ளை** அவர்கள், வாதவூர்ப் புராணத்துக்கு எழுதிய விரிவுரையைக் கண்டு, அவரின் உரையின் திறத்தையும்

> அக்காலத்திலே சென்னையிலிருந்த ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள் எழுதிய சைவமகத்துவம் என்னும் நூலுக்கு மாறாக ஸ்ரீ அருளப்பமுதலியார் எழுதிய சைவமகத்துவதிக்காரம் என்னும் கண்டனத்திற்கு எதிராக இவர் சைவமகத்துவதிக்கார நிக்கிரகம் என ஒரு கண்டனமெழுதி முதலியார் வாயை அடக்கினார். அதனால் தாமோதரம்பிள்ளையவர்களும் சென்னையிலுள்ள மற்றும் அறிஞர்களும் இவரைப்போற்றி இவர்க்கு இயற்றமிழ்ப் போதகாசிரியர் என்னும் பட்டப்பெயரை அளித்தனர் என்ப

**ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் – சி.கணேசையர், 1939, (பக்.81)**



**இயற்றமிழ் போதகாசிரியர்**
***ச. வைத்தியலிங்கம்பிள்ளை***
(***கி.பி.***1843 - 1901)

அறிவின் திறத்தையும் வியந்து ***உரையாசிரியர்*** என்கிற பட்டத்தை ***பொன்னம்பலப்பிள்ளை*** வழங்கியதாகப் பதிவுகள் உள்ளன.

சமயங்களை எதிர்த்து கண்டனங்கள் பரவலாகச் செய்யப்பட்ட காலங்களில் இச்செயற்பாடுகள் செய்தோரைக் குறித்தும் சில பட்டங்கள் வழங்கப்பெற்றுள்ளதைக் காணலாம்.

***காசிவாசி செந்திநாத ஐயருக்கு***, சென்னையிலிருந்த ***இந்துலகுலேக சங்கம்*** வழங்கிய ***கிறிஸ்துமத கானன குடாரி*** என்கிற பட்டம், ***காசிவாசி செந்திநாத ஐயரின்*** தலைமையில்கீழ் புலோலியைச் சேர்ந்த ***நா. கதிரைவேற்பிள்ளை*** பெற்றுக்கொண்ட ***மாயாவாத தும்சகோளரி*** என்கிற பட்டம் ஆகியனவற்றை இவற்றுக்கு உதாரணங்களாக முன்வைக்கலாம். ***குடாரி*** என்பது கோடரியையும் ***கோளரி*** என்பது ஆண்சிங்கத்தையும் குறிக்கின்றது.

இவ்வாறாக ஈழத்துத் தமிழறிஞர்கள் கொண்டிருந்த பல நூற்றுக்கணக்கான பட்டங்களைப் பதிவுகளில் காணமுடிகிறது. சில அறிஞர்கள் பத்துக்கும் மேற்பட்ட பட்டங்களையும் மேலும் சில அறிஞர்கள் இருபதுக்கும் மேற்பட்ட பட்டங்களையும் கொண்டுள்ளார்கள். 20ஆம் நூற்றாண்டு தொடங்கியபின் இப்பட்டியல்கள் மேலும் நீண்டுசெல்வதைக் காணமுடிகின்றது.



**கிறிஸ்துமத கானன குடாரி**
**காசிவாசி செந்திநாத ஐயர்**
(**கி.பி.** 1848 - 1924)



**உரையாசிரியர்**
**ம. க. வேற்பிள்ளை**
(**கி.பி.** 1848 - 1930)

உதாரணத்துக்கு பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்க் கீர்த்தனைகளை எழுதியவரும், வரன்முறையாக முத்தமிழும் பயின்றவருமான இணுவிலைச் சேர்ந்த ***வீரமணி ஐயர்*** அவர்கள், ***இயலிசை வாரிதி, சாகித்திய சிரோமணி, நாட்டிய சாகித்திய கலாவேந்தன், கவிமாமணி, சாகித்திய சாகரம், சாகித்திய மாமணி, கலாரத்தினா, சிருஷ்டி ஞாயிறு, அருட்கலை வாரிதி, கலாபூஷணம், மகாவித்துவான், சம்பாதீஸ்வரர், ஞானக் கவிமணி, கௌரவ முதுகலைமாணி, முத்தமிழ்க் கலாநிதி, லலிதகலா அபிஞ்ய, அருளிசை வித்தகர்*** என்கிற பட்டங்களைக் கொண்டிருந்ததாக அறியமுடிகிறது.



**வீரமணி ஐயர்**
(**கி.பி.** 1931 - 2003)

இவ்வடிப்படையில் நோக்கும்போது அறிஞர்களின் திறமைகளைக் கணித்து ***சமூகமே தாமாகக்*** குறித்த அறிஞர்களுக்கு ***வழங்கிய*** பட்டப்பெயர்களின் மதிப்புகள் மற்றைய பட்டப்பெயர்களைவிட மதிப்பிலே ஒருபடி மேலே நிற்பதைக் காணமுடிகின்றது.

தமிழறிஞர்களுக்கு சமூகம் தாமாகவே வழங்கிய பட்டப் பெயர்களில் அனேகமானவை அவர்களின் ***சிறப்பைக்கண்டு*** வழங்கிய ***காரணப் பெயர்களாக*** அமைந்துள்ளன.

***முருககேசப் பண்டிதரையும்*** அவரின் மாணவரான ***அ. குமாரசுவாமிப் புலவரையும்*** ஒருசேர ***தோடஞ்ஞர்*** எனும் சிறப்புப்பெயரால் அறிஞர் உலகம் அழைப்பது வழக்கம். தோடஞ்ஞர் என்றால் பிறரின் குற்றங்களை அறிபவர், பிழைகளை - தோஷங்களைக் கண்டு பிடிப்பவர் எனப் பொருளாகும். தோஷம் என்பது தமிழில் தோடம் என்றாயிற்று.

***அ. குமாரசுவாமிப் புலவர்*** கொண்டிருந்த ***புலவர்*** என்னும் பட்டத்தை ***வித்துவசிரோமணி சி. கணேசையர்***, சிலாகித்துக் கூறியுள்ளார். மற்றைய புலவர்களுக்கு புலவர் என்பது காரணப்பெயராகும், ஆனால் அ. குமாரசுவாமிப் புலவருக்கு புலவர் என்பது இயற்கையாகவே அமைந்த **இடுகுறிப்பெயராகும்** என்கிறார்.

பாரேறு சுன்னைக் குமாரசுவாமிப் புலவனுக்கே
ஏரே **இடுகுறி**யாகிப் புலவரெனும் பெயர்தான்
பாரேறு மற்றைப் புலவருக்குக் **காரணப் பண்புறலாற்**
சீரே இடுகுறி காரணமாகித் திகழ்ந்ததுவே

சங்க காலம்தொட்டு தமக்கிருந்த சிறப்பால் காரணப்பெயர் கொண்ட பல புலவர்களை நாம் காணமுடிகின்றது. வியாசர் பாடிய பாரதத்தைத் தமிழில் பாடியமையால் ***பாரதம் பாடிய பெருந் தேவனார்*** எனவும், மடலேறுதல் எனும் துறையைச் சிறப்பித்துப் பாடியமையால் ***மடல் பாடிய மாதங்கீரனார்*** எனவும், பாடிய செய்யுள்கள் சித்திரம்போன்று காட்சியை விரிக்கவல்ல சிறப்பைக் கொண்டிருந்ததால் ***பெருஞ்சித்திரனார்*** எனவும் சங்ககாலத்தில் புலவர்கள் காரணப்பெயர்கொண்டு அழைக்கப்பெற்றதை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

குறித்த **சொற்தொடர்களை** தமது படைப்புக்களில் பயன்படுத்தியதால் அச்சொற்தொடர்கொண்டு அறிஞர்களைச் சிறப்பித்து அழைத்த சந்தர்ப்பங்களும் உள்ளன. சங்கப் புலவர்களில் 'வண்ணப் புறவின் செங்கால் சேவல்' என புறாவினை வண்ணப்புறா என்று பாராட்டிய சிறப்புநோக்கி கந்தரத்தனார் என்கிற புலவர், **வண்ணப்புறாக் கந்தரத்தனார்** என அழைக்கப்பெற்றார். மகளிர் கண்களுக்கு உவமைகூறும் சிறப்புவாய்ந்த கண்களை உடைய மான்குட்டியை, விழிகட்பேதை எனப் பாடியதால், பெருங்கண்ணனார் என்கிற புலவர், **விழிக்கண் பேதைப் பெருங்கண்ணனார்** என அழைக்கப் பெற்றுள்ளார்.

ஈழத்தில் *18ஆம்* நூற்றாண்டில் வாழ்ந்த அநந்த சுப்பையரை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அநந்த சுப்பையரின் பெயர், **ஸ்ரீதாச பிரம்மம்.** இவரின் ஆசிரியரான **கூழங்கைத் தம்பிரான்** இவரின் நூலொன்றுக்கு உரைச் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளதாகப் பதிவுள்ளது. இவர் பல கீர்த்தனைகளையும், பதங்களையும் பாடியதோடு மட்டுமல்லாது *1575* பாடல்களில் அமைந்த **அத்வைதசார அனுபூதி விளக்கம்,** *4555* பாக்களுடைய **நவராத்திரி மான்மியம்,** *400* பாக்களில் அமைந்த **பாகவத புராண சாரம்,** *30* பாக்களில் அமைந்த **திருவிராமீச நிரோட்டக அந்தாதி** ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார் என்னும் குறிப்புகள் உள்ளன. இவர் பாடிய அனேக பதங்கள் ஒவ்வொன்றும் 'அநந்த சுப்பையன்' என்றே முடிவுறும். வரலாற்றில் ஸ்ரீதாச பிரம்பம் என்னும் இவருடைய பெயர் மறைந்து **அநந்த சுப்பையன்** என்கிற பெயர் நிலைத்துவிட்டது. அத்துடன் இவர் பாடிய கீர்த்தனைகள் பலவற்றின் இறுதியில் இவருடைய பெயரின் ஒருபகுதியான **தாசன்** என்னும் பெயர் இடம்பெற்றுள்ளதையும் காணமுடிகின்றது.

இவ்வகையான காரணப்பெயர்கள் சில சந்தர்ப்பங்களில் தமிழ் அறிஞர்களின் புலமையைக் குறிக்காது, அவர்களின் **நடை, உடை, பாவனையைக்** குறித்தும் அமைந்துவிடுகின்றன.

**சீத்தலைச் சாத்தனாரை** இவ்வகைக் காரணப்பெயர் கொண்டவராகச் செவிவழிக்கதைகள் பதிவுசெய்துள்ளன. குற்றம்கொண்ட கவிதைகளைப் படிக்க நேர்ந்தால் தமது தலையில் தாமே




**சீத்தலைச் சாத்தனார் காரணப்பெயரை வெளிப்படுத்தும் உருவப்படம்**

குட்டிக்கொள்வார் என்றும், கையில் எழுத்தாணி இருக்கும் சந்தர்ப்பமொன்றில் அவ்வெழுத்தாணி கொண்டே தமது தலையில் குட்டியதால் தலையில் சீழ் படிந்து சீ(ழ்)த்தலைச் சாத்தனார் ஆனார் என்றும் கர்ணபரம்பரைக் கதைகள் உள்ளன.

இத்தகையை நடை, உடை, பாவனைகளைக் குறித்து சமூகத்தினர் வழங்கிய பெயர்களை ஈழத்திலும் காணமுடிகின்றது.

**முருகேசப் பண்டிதர்** உணவு உட்கொள்ளும்போது அரைத்த மிளகாய்த்திரள் ஒன்றை உட்கொள்வாராம். மேலும் இவர் தலை முழுகும்போது மிளகாய் அரைத்து தலைக்குத் தப்பி முழுகுகின்ற வழக்கத்தை உடையவர். இதனால் முருகேசப் பண்டிதரை அவரின் மாணவர்கள் ***மிளகாய்ச் சட்டம்பியார்*** என்று அழைப்பது வழக்கம். இவருக்கு **இலக்கணக் கொட்டன், தோடஞ்ஞர்** போன்ற புலமைத்துவம் நோக்கிய சிறப்புப்பெயர்களும் உள்ளன.

> பண்டிதர் தோற்றத்தாற் கரியவர் உருவத்தாற் சிறிது குறுகிய பருகிய உடலமைப்புடையவர் அவ்வுருடைய சரீர பௌதிக நிலைமைக்குக் காரமான உணவு அதிகம் வேண்டியிருந்தது. அவர் சாப்பிடும்போது அரைத்த மிளகாய்த்திரள் ஒன்றைத் தின்னும் வழக்குடையவர். தலை முழுகும்போது மிளகாய் அரைத்துத் தலைக்குத் தப்பி முழுகுவரென்றும் அக்காரணம் பற்றி அவரை அவர் மாணாக்கர் "மிளகாய்ச் சட்டம்பியார்" என்று அழைப்பது வழக்கம் என்றும் கூறுவர்.

**முருகேசப் பண்டிதர் பிரபந்தத் திரட்டு –**

**கு. முத்துக்குமாரசுவாமிபிள்ளை தொகுத்தது, 1956, (பக்.** xxii-xxii)

ஈழத்திலே அதிகூடிய பிரபந்தங்கள் இயற்றிய உடுப்பிட்டி ***சிவசம்புப் புலவரு***க்கும் இத்தகைய நாமமொன்றை சமூகம் வழங்கியுள்ளது. சிவசம்புப் புலவர் ஆறடிக்கும் மேற்பட்ட உயரமுள்ளவராய் கவர்ச்சிகரமான தோற்றத்துடன், தலைப்பாகை, கடுக்கன் அணிந்து கம்பீரமாக நடப்பவராம். நல்ல திடகாத்திரமாய் இருந்த சிவசம்புப் புலவர், சபைகளுக்குள் நுழைந்தவுடன் **ஆனைக் குட்டிப் புலவர்** வருகின்றார் என்று சிலர் நகைச்சுவையாகக் கூறுவார்களாம்.

கிழக்கு மாகாணத்தில் செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த ***சின்னவப் புலவரை*** (கி.பி. 1877-1962) மக்கள் ***வெத்திலைக்காரப் புலவர்*** எனப் பொதுவாக அழைத்துள்ளனர்.

> புலவர் அவர்கள் ஆறடிக்கு மேற்பட்ட உயரத்தவராய்க் கவர்ச்சிகர மான தோற்றத்தவராய்த் தலையில் தலைப்பாகையும், நெற்றியில் நீறும் சந்தனமும் பூசிக் காதில் கடுக்கனிட்டுக் கம்பீரமாக நடப் பவராம். தினமும் நல்ல உணவையே உண்பவராதலால் நல்ல திடகாத்திரராயிருந்தாராம். அவர் சபைகளிற் புகுந்தால் ஆனைக் குட்டிப் புலவர் வருகிறார் என்று சிலர் நகைச்சுவையாகக் குறிப் பிடுவதும் வழக்கமாம்.

**செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் – பாகம் 1 –**

**க. சி. குலரத்தினம், 1989, (பக்.** 194-195)

கிழக்கில் ஆரயம்பற்றைச் சேர்ந்த ***சி. குமாரசுவாமி*** (கி.பி. 1889-1947) அவர்கள், **ஆயுர்வேதக் கருவூலம், உருத்திராக்க மான்மியம்** ஆகிய நூல்களை எழுதியவர். விபுலாநந்த அடிகள், இவரிடம் சமஸ்கிருதம் கற்றுள்ளார். எந்நேரமும் சிவசின்னங்களுடன் குமாரசுவாமி தோற்ற மளித்ததால் அந்தணர் மரபில் வராதவிடத்தும் இவரை ***குமாரசாமி ஐயர்*** என மக்கள் அழைத்து அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.

மாந்தையைச் சேர்ந்த ***அந்தோனிப்பிள்ளை*** (கி.பி. 1870-1938) எனும் புலவரை ***சீனிப்புலவர்*** என்று மக்கள் அழைத்ததையும் இங்கு குறிப்பிடலாம்.

இங்கு குறிப்பிட்ட ***ஆனைக்குட்டிப் புலவர், மிளகாய்ச் சட்டம்பியார், வெத்திலைக்காரப் புலவர், சீனிப் புலவர்*** ஆகியன நடை, உடை, பாவனை குறித்து வழங்கிய பெயர்கள் என்றபோதும் ***புலவர், தமிழ் சட்டம்பியார்*** என்கிற புலமைத்துவ அடையாளங்களுடன் இணைந்து நிற்பது கவனிக்கத்தக்கது. இவற்றின் வாயிலாக ஈழத்துமக்கள் எத்துணை நுட்பமாக புலமைத்துவங்களுக்கு அங்கீகாரங்களை வழங்கியுள்ளனர் என்பதைக் காணலாம்.

நடை, உடை, பாவனை என்பதற்கு அடுத்து அறிஞர்கள் பிறப்பின் அடிப்படையிலும் சமூகத்தினர் பெயர்கள்கொண்டு அழைத்ததைக் காணமுடிகிறது.

உதாரணமாக யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையைச் சேர்ந்த **கனகி புராணம்** பாடிய **சுப்பையர்** என்பவர் **நட்டுவச் சுப்பையர்** என்று வழமையாக அழைக்கப்பெற்றார். இருப்பினும் இவர் தமது பரம்பரைத் தொழிலான நட்டுவாங்கத்தைப் பயின்றிருக்கவில்லை. ஆகவே சமூகம் வழங்கிய இத்தகைய பட்டத்தைப் ***புலமையின் அங்கீகாரமாக ஏற்கமுடியாது***. இருப்பினும் காரைநகரைச் சேர்ந்த சங்கீதத்தில் புலமைபெற்ற சுப்பையரை சமூகம் ***சங்கீதச் சுப்பையர்*** என்று அழைத்துள்ளது. இத்தகைய பட்டத்தை புலமையின் அங்கீகாரமாக ஏற்றுக்கொள்ளலாம்.

சமூகம் வழங்கிய பட்டங்களைக் கணிப்பதிலும் பல சிக்கல்கள் உள்ளன. சமூகத்தின் பரப்பு யாது? பட்டத்தினை ஒரு குறித்த சமூகம் வழங்கியுள்ளதா? அல்லது பரந்தளவில்

ஏற்றுக்கொள்ளப் பெற்றுள்ளதா? எதற்காக குறித்த பட்டத்தை சமூகம் வழங்கியுள்ளது? வாழும்பொழுதே வழங்கப்பெற்றதா அல்லது இயற்கை எய்தியபின்னர் வழங்கப்பெற்றதா? என்பவற்றைத் தற்பொழுது காலங்கடந்து கணிப்பதில் மிகுந்த சிரமங்கள் உள்ளன.

17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த **பூலோகசிங்க முதலியார்** ***திருச்செல்வர் காவியம்*** பாடியுள்ளார். ***அருளப்ப நாவலர்*** என்னும் மறுபெயர் கொண்ட இவரைக் ***காவியப்புலவர்*** என்று இவருடைய பிற்காலச் சந்ததியினர் அழைத்தாகப் பதிவுள்ளது. ஆக, பிற்காலத்தில் தம்மூதாதையரைக் கௌரவிக்கும் முகமாக இப்பெயர் வழங்கப்பெற்றிருக்க வேண்டு மென்றும் இப்பெயரைப் பரந்த சமூகத்தினர் பயன்படுத்தியிருக்க வில்லை என்றும் ஊகித்தறியலாம். காவியம் பாடியுள்ளபோதும் அருளப்ப நாவலருடன் இணைந்துள்ள காவியப் புலவர் எனும் பட்டத்தினை பரந்துபட்ட ஆய்வுகள் செய்யாமல் சமூகம் வழங்கிய அங்கீகாரப் பட்டியலில் சேர்த்துக்கொள்வதில் தயக்கங்கள் உள்ளன.


> பூலோகசிங்கமுதலியாரின் அடி இன்றைக்கும் தெல்லிப்பழையில் பத்தாவத்தை எனும் குறிச்சியில் அழியாதிருக்கிறது. பிற்சந்ததியாருள் இவர் பெரிய பூலோகசிங்கமுதலியாரென்றும் காவியப்புலவரென்றும் அழைக்கப்படுவர்.

**யாழ்ப்பாண வைபவ கௌமுதி – க. வேலுப்பிள்ளை**
**1918, (பக்.** 160)

***பிலிப் டி மெல்ஹொ*** (கி.பி. 1723-1790) அவர்கள் ஈழத்தின் வடக்குப் பகுதிக்கு அமைச்சராக நியமிக்கப்பெற்று யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்தவர். ***கூழங்கைத் தம்பிரானுடன்*** பழக்கமுடையவர். 1759ஆம் ஆண்டு முதன்முதலாக புதிய ஏற்பாடு முழுவதையும் தமிழில் மொழிபெயர்த்தவர். இந்த பைபிளானது கொழும்பில் அச்சேறியுள்ளது.

பெரும் தமிழறிஞரான இவர், 18ஆம் நூற்றாண்டில் மிகச்சிறந்த பிரசங்கியாகவும் விளங்கியுள்ளார். இவரின் அதிசிறந்த பிரசங்கத் திறமையால் இவரை ***சபாசிங்கம்*** என்று ***சிறப்பிக்கலாம்*** என ***ஆணல்ட் சதாசிவம்பிள்ளை*** தாம் எழுதிய புலவர் சரித

நூலிலே பதிவுசெய்துள்ளார். இந்தப்பெயரை சமூகம் வழங்கிய அங்கீகாரப் பட்டியலில் ஏற்றுக்கொள்வதில் தயக்கங்கள் உள்ளன. முதலாவதாக 'சபாசிங்கம் எனப் பெயரிடலாம்' என்ற பதிவின் வாயிலாக அவ்வாறு அதுவரை அழைக்கப்பெறவில்லை என்பது தெளிவாகின்றது. அடுத்து மெல்ஹொ பாதிரியார் இறந்து ஏறத்தாழ நூறு ஆண்டுகளின் பின்னரே இப்பெயர் முன்வைக்கப்பெற்றுள்ளது.



இலங்கைச் சுதேசக் கிறிஸ்தவர்களுள் முதன் முதல் ஆசாரியபிஷேகஞ் செய்யப்பட்ட இப்புலவர் அதி வாசாலப் பிரசங்கியாதலால் இவர்க்குச் சபாசிங்கம் எனப் பெயரிடலாம். இறக்கும்போது இவர்க்கு வயசு அறுபத்தேழு.

**பாவலர் சரித்திர தீபகம் – ஆ. சதாசிவம்பிள்ளை (1886) , (பக் – 214)**

இவ்வாறு, அறிவுலகமானது தம்முடைய காலத்துக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த ஈழத்துத் தமிழறிஞர்களை அவர்கள் செய்த பணியின் காரணமாகச் சிறப்புப் பெயர்களைப் பிற்காலத்தில் வழங்கிவந்துள்ளது.

*1841*ஆம் ஆண்டு பிரசுரிக்கத் தொடங்கிய ***உதயதாரகை*** பத்திரிகையின் ஆசிரியரான **மாட்டின் ஹென்றி**யை, **ஈழத்தின் முதலாவது பத்திராபதிபர்** என்றும், ***சி. வை. தாமோதரம்பிள்ளை***யை ***தமிழ்தந்த தாமோதரனார்*** என்றும், தொல்காப்பியத்துக்கு குறிப்புகள் எழுதிய ***சி. கணேசையரை*** **தொல்காப்பியக்கடல்** என்றும், முத்தமிழுக்கும் பணிசெய்த ***விபுலாநந்தரை*** ***முத்தமிழ் வித்தகர்*** என்றும் பிற்காலத்து ஆய்வுலகமும் அறிவுலகமும் அழைக்கத் தொடங்கியமையை உதாரணங்களாகக் கூறலாம். குறித்த அறிஞர்கள் இயற்கை எய்திய பின்னர் வழங்கப்பெற்ற இத்தகைய சிறப்புப் பட்டங்களை, சமூகம் வழங்கிய பட்டங்களின் பட்டியலில் சேர்ப்பதில் சிக்கல்கள் வெளிப்படுவதைக் கண்டுகொள்ளலாம்.

சில சந்தர்ப்பங்களில் சமூகம் வழங்கிய அங்கீகாரப் பட்டங்களின் அடிப்படைக் காரணங்களைத் துணிவதிலும் சிரமங்கள் வெளிப்படுகின்றன.



**தொல்காப்பியக்கடல்**
**சி. கணேசையர்**
(**கி.பி.** 1878 - 1958)

*1614*ஆம் ஆண்டளவில் போர்த்துக்கேச துறவியார் ஒருவர் இந்தியாவின் கோவா-கொச்சின் பிரதேசத்திலிருந்து மரக்குற்றியொன்றை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்துள்ளார். இந்த மரக்குற்றியைக் கொண்டு மாதா சிலையினை யாழ்ப்பாணத்து ஆசாரியார் ஒருவரைச் செய்யும்படி பணித்துள்ளார். ஆசாரியார், தமது வீட்டில் வைத்து சிலை செய்யத் தொடங்கியுள்ளார். இதன்போது பற்பல அற்புத நிகழ்வுகள் அண்டிய பிரதேசங்களில் நிகழ்ந்ததை ஆசாரியாரும் மக்களும் கண்டனர். இதன் காரணமாக **அற்புத மாதா** என்னும் பெயரினை இந்த மாதா சிலை பெற்றுக்கொண்டது. இந்தச் சிலையானது தற்பொழுது கோவாவில் வைக்கப்பெற்றுள்ளது.

புகழ்பெற்ற இந்தச் சிலையைச் செய்த தமிழ்க் கலைஞரின் பெயர் **ஆனைக்குட்டி ஆசாரி** ஆகும். இங்கு **ஆனைக்குட்டி** என்பது இயற்பெயராக இருக்க வாய்ப்பில்லை. இது சமூகம் வழங்கிய பெயராதல்வேண்டும். இருப்பினும் ஆசாரியாரின் உடலமைப்பு காரணமாக ஆனைக்குட்டி என்று சமூகம் அழைத்துள்ளதா? அல்லது யானைச் சிலைகளை செய்வதில் கைதேர்ந்து இருந்ததன் காரணமாக இப்பெயர் வழங்கப்பெற்றதா? என்பதைத் தற்காலத்தில் துணியமுடியாதுள்ளது.



**கி.பி. 1600களில் கோவாவில் இருந்து கொண்டுவரப்பெற்ற மரக்குற்றிகொண்டு யாழ்ப்பாணத்து ஆனைக்குட்டி ஆசாரியால் செதுக்கப்பெற்ற மாதாவின் சிலை. தற்பொழுது இந்தியாவின் கோவாவில் உள்ளது.**

Father Fray Francisco had come from Cochin bringing with him a log on which he had begun to carve an image of his patron, Saint Antonio. He now decided to convert it into an image of the Lady of Victory, and entrusted it to an artist named Anakutti for the purpose.

Notes on Jaffna - John H. Martyn

**1923, (பக்.** 138)

1750களில் மாதோட்டத்திலுள்ள பச்சைக்குளத்தைச் சேர்ந்த **லோரென்ஸ் புலவர்**, கிறிஸ்தவம் சார்ந்து பல பிரபந்தங்களைப் பாடியுள்ளார். இவர் புத்தளத்தைச் சேர்ந்த **அல்லாப்பிச்சை அண்ணாவியார்** என்கிற இஸ்லாமியப் புலவருடன் வாதத்தில் ஈடுபட்டுள்ளார் எனும் பதிவுகள் உள்ளன. இருப்பினும் அல்லாப்பிச்சை அண்ணாவியார் என்கிற பட்டத்தைப்பற்றிய விபரங்களை அறியும் வாய்ப்பில்லை. இப்பட்டம் சமூகம் வழங்கிய அடையாளமாக இருத்தல்வேண்டும்.

நாடகத்துறையிலே நடிகர்கள் தாங்கிய வேடங்களால் அவர்களை சமூகம் அழைத்துவந்துள்ளது. இவற்றுக்கான அளவுகோலானது தனியாக வரையறைசெய்யப்பெற்று தேடலும் ஆய்வும் செய்யவேண்டிய பகுதியாகவுள்ளது. **விசுவாமித்திரர் தம்பு, சந்திரமதி சின்னையா, இயமன் முருகேசு, வேடன் சின்னத்தம்பி** ஆகியன ஒருசில உதாரணங்களாகப் பதியப்பெற்றுள்ளன. சந்திரமதி சின்னையா அவர்கள் பெண் வேடம் தாங்கியுள்ளமையையும் காண முடிகின்றது.

> தரமான நடிகர் சிலரின் பெயர்களோடு அவரவர் நடித்த பாத்திரங்களின் பெயரும் சேர்ந்து வழங்கியமை பாரம்பரியத்திலும் தொடர்ந்து வழங்கலாயின. விசுவாமித்திரர் தம்பு, சந்திரமதி சின்னையா, இயமன் முருகேசு, வேடன் சின்னத்தம்பி முதலிய பெயர்கள் இன்றும் ஒலிக்கின்றன. பெண்கள் மேடையேறாத அக்காலத்தில் நடையுடை பாவனை சாயல் குரல் எல்லாம் அமையப் பெண் வேடந் தாங்கியவர்களின் நடிப்புத் திறமையும் பெரும் புகழீட்டியது. ஊர்கள் தோறும் உருவான நாடகசபைகள், மன்றங்கள் அதிகமாயிருந்தன.

**செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் – பாகம் 1 –**
**க. சி. குலரத்தினம், 1989, (பக். 8)**

சமூகம் வழங்கிய அங்கீகாரப் பட்டங்கள் பெறுமதி வாய்ந்தனவாகவும் சமூகத்தின் பார்வையை எடுத்து இயம்புவனவாகவும் உள்ளபோதும் இங்கு குறிப்பிட்ட காரணங்களுக்கு அமைய இப்பட்டங்களைச் சரிவரக் கண்டறிவது மிகுந்த சிரமமான பணியாகும். சமூகம் வழங்கிய பட்டத்தை, அப்பட்டம் குறித்த அறிஞரின் புலமைச் செயற்பாடுகளை முன்நிறுத்தியே அளவிடவேண்டியுள்ளது.

இது ஓர் ஆரம்பத் தேடலாகையால் இந்நூலில் கி.பி. *1922*ஆம் ஆண்டுவரை (சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரின் காலம்வரை) கிடைக்கப்பெறும் பட்டங்களே நிரற்படுத்தப்பெற்றுள்ளன.

## 5.0 இந்நூலின் நோக்கம் :

- *1922*ஆம் ஆண்டுவரை ஈழத்துத் தமிழ் அறிஞர்களுக்குச் சமூகம் வழங்கியிருந்த புலமைத்துவ அடையாளங்களைப் பற்றிய **ஓர் அறிமுகத் தேடலை** மேற்கொள்வதே இந்நூலின் **பிரதான நோக்கமாகும்.**

- இந்நோக்கத்தின்வழி, சமூகம் வழங்கிய புலமைத்துவ அடை யாளங்களான பட்டங்களைத் தேடித் **தொகுக்கும் முயற்சி** இந் நூலில் மேற்கொள்ளப்பெற்றுள்ளது. எத்தொகுப்பு முயற்சியும் முழுமையடைவதில்லை எனும் விதிக்கமைய இந்நூலிலே தரப்பெற்றுள்ள *20* பதிவுகளையும் **ஓர் ஆரம்பப் பட்டியலாக** மாத்திரமே கொள்ளலாம். தவறவிடப்பெற்ற பட்டங்களை இத்துறை சார்ந்து மேலும் ஆய்வுசெய்வோர் கவனத்தில் கொள்ளவும்.

- இந்நூலிலே கி.பி. *1922*ஆம் ஆண்டுவரையிலான காலப்பகுதி மாத்திரமே உள்ளடக்கப்பெற்றுள்ளதால், கவிஞர் **மஹா லிங்கசிவம்** (கி.பி. *1891-1941*) கொண்டிருந்த **குருகவி**, கல்லடி **வேலுப்பிள்ளை** (கி.பி. *1860-1944*) கொண்டிருந்த **கண்டனப் புலி,** நாவலாசிரியர் **த. நாகமுத்துவுக்கு** (கி.பி. *1868-1932*)



**கண்டனப் புலி – க. வேலுப்பிள்ளை**
(**கி.பி.** 1860 - 1944)



**குருகவி – ம. வே. மகாலிங்கசிவம்**
(**கி.பி.** 1891 - 1941)

சமூகம் வழங்கியிருந்த ***வசிட்டர்***, வண்ணார்பண்ணை ***வெ. முத்துக்குமாரசுவாமி தம்பிரானுக்கு*** (கி.பி. 1885-1949) வழங்கப் பெற்றிருந்த ***இலக்கணச்சுவாமி***, போன்ற சமூகத்தால் வழங்கப் பெற்ற பட்டங்கள் உட்பட இன்னும் பல பிற்காலப் பட்டங்களும் இப்பட்டியலில் உள்ளடக்கப்பெறவில்லை.

- சமூகம் வழங்கிய அடையாளங்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் நோக்குடன் அப்பட்டங்கள் தாங்கிய அறிஞர்கள் பற்றிய சிறு விபரங்களும் இந்நூலிலே உள்ளடக்கப்பெற்றுள்ளன. இக்குறிப்புகளை அவர்களின் முழுமையான வாழ்க்கைக் குறிப்பாகவோ அல்லது வாழ்க்கை வரலாறாகவோ கொள்ளல் இயலாது.
- பலகாலம் தேடியும் இத்துறை சார்ந்த முயற்சிகளைத் தமிழ் உலகில் காணல் அரிதாய் அமைந்தது. இந்நிலையில் பல குறைகளைக் கொண்டிருக்கத்தக்க இந்நூல் இனிவரும் தேடல்களுக்கும் ஆய்வுகளுக்கும் உதவியாக அமையலாம் என்னும் நோக்கத்துடன் நூலுருவம் கொடுக்கப்பெற்றுள்ளது.

# 1 உருட்டன்

**மா. காசிநாதர்** (Stansbury Kasinathar)
**வண்ணார்பண்ணை கிழக்கு**
**19ஆம் நூற்றாண்டு**

வண்ணார்பண்ணை கிழக்கில் வசித்த **மாப்பாணர்** என்பவரின் புதல்வர் காசிநாதர். இவர் 1823இல் தொடங்கப்பெற்ற வட்டுக்கோட்டை மிஷனரியில் கல்விகற்று அரங்கேறியவர். இந்த மிஷனரியானது ஐரோப்பிய பல்கலைக்கழகங்களுக்கு ஒப்பானது என்னும் கணிப்பு முன்வைக்கப்பெற்றதை வரலாற்று ஆசிரியர் அறிவர். காசிநாதருக்கு ***ஸ்டான்ஸ்பெரி காசிநாதர்*** (Stansbury Kasinathar) என்னும் கத்தோலிக்கப் பெயரும் உண்டு.

காசிநாதர் இலக்கிய, இலக்கணங்களில் தேர்ச்சி பெற்றவர். புலமைமிக்க இவர் பத்தாயிரம் பாடல்களுக்கு மேற்பட்ட கம்பராமாயண காவியத்தைச் சுருக்கமாகப் பாடியவர். விரிந்து கிடக்கும் கம்பராமாயணக் கடலை தம் கூர்மதியால் மதித்து சுருக்கித் திரட்டிய இந்நூலுக்கு **இராமாயணச் சுருக்கம்** என்று பெயரிட்டார். இருப்பினும், இந்நூலானது மானிப்பாய் அச்சு இயந்திரசாலையில் அச்சேற்றும் முயற்சி நிறைவேறும் முன்னதாகவே இயற்கை எய்தினார்.

இலக்கிய இலக்கணத்தில் புலமையுடைய இவர், வாதம் செய்வதிலும் பிரசித்தி பெற்றவர். இவர் வாதில் ஈடுபடும்போது தமது வாதத்திறமையால் ***எதிராளியை உருட்டிப் பறக்கடித்து*** விடுவார்.

**உருட்டல்** என்னும் சொல்லுக்கு ***விரைவாயடித்தல், வெல்லல்***

ஆகிய பொருள்களை **நா. கதிரைவேற்பிள்ளை**யின் தமிழ் மொழி அகராதி தருவது கவனிப்புக்குரியது. இதேபோன்று தமிழ் **லெக்ஸிகன்** அகராதியானது **விளையாட்டில் வெல்லுதல்** மற்றும் **சப்தஜாலத்தால் மருட்டுதல்** ஆகிய பொருள்களையும் தருவதைக் காணலாம். யாழ்ப்பாண அகராதி **வெல்லல்** எனும் பொருளையும் தருகின்றது.

உருட்டல் எனும் சொல்லுக்கு அகராதிகள் தந்துள்ள மேற்குறித்த பொருள்கள் யாவும் வாதிடும் திறமையைச் சுட்டிக் காட்டுவதற்கும் பொருந்துவதைக் காணலாம்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த காசிநாதர், வாதுப் போரில் எதிராளியை உருட்டிப் பறக்கடிக்கும் தீரராதலால் இவரை **உருட்டன்** என்று யாவரும் அழைத்தனர்.

காசிநாதர் வளர்த்துக்கொண்ட வாதுசெய்யும் திறனானது உருட்டன் எனும் சிறப்புப் பெயர் பெறுவதற்கு காரணமாயிற்று.

❍ ❍ ❍

**ஆதாரம்**

காசிநாதர்.—**Stansbury Kasinathar.**

வண்ணார்பண்ணை கிழக்குப்பகுதியில் வாசஞ்செய்த மாப்பாணர் என்பவர்க்குப் புத்திரராகிய இவர் அமரிக்க மிஷனைச் சார்ந்த வட்டுநகர்ச் சாஸ்திரசாலையிலே கல்வி கற்று அரங்கேறியவர். இலக்கண இலக்கியங்களிலே பயின்று, வாதுசெய்வாரை உருட்டிப்பறக்கடிக்கும் தீரராதலில் "உருட்டன்" என்று யாவராலும் அழைக்கப்பட்டவர்.

**பாவலர் சரித்திர தீபகம் (1886), பக்** – 268
**ஆ. சதாசிவம்பிள்ளை**

# 2 சங்கீதச் சுப்பையர்

**மே. சுப்பையர்**
**காரைநகர்**
**18ஆம் நூற்றாண்டு**

மேருகிரி ஐயர் என்பவர் இந்தியாவின் கோதாவரி நதிக் கரையிலுள்ள ஓர் ஊரைச் சேர்ந்தவர். இவர் கி.பி 1770ஆம் ஆண்டு காரைதீவில் (காரைநகர்) வந்து குடியேறியவர். இவரின் மூத்த புதல்வர் ***சுப்பையர்*** ஆவார். சுப்பையரின் தாயார் காரைநகரைச் சேர்ந்தவர்.

சுப்பையர், தமது தந்தையைப் போன்று தமிழ், ஆரியம், தெலுங்கு ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றவர். இவர், ***நல்லை நாயக நான்மணிமாலை, காரைக் குறவஞ்சி*** ஆகிய இரண்டு நூல் களை இயற்றியுள்ளார் என அறியமுடிகின்றது.

பல மொழிகளில் புலமையுடைய இவர், சங்கீத சாஸ்த்திரத் திலும் மிகவும் புலமையுடையவராக விளங்கியுள்ளார். இவர் ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் பல சங்கீதக் கச்சேரிகள் செய்துள்ளார். சங்கீத முயற்சிகள் சார்ந்து தமிழ்நாட்டுக்கு அனேக தடவைகள் சென்று வந்துள்ளார் என்கிற பதிவும் உள்ளது.

சுப்பையரிடம் காணப்பெற்ற சங்கீதத் திறமையானது, ***சங்கீதச் சுப்பையர்*** என்னும் சிறப்புப் பெயரால் சமூகத்தினர் அவரை அழைப் பதற்குக் காரணமாயிற்று. ஈழத்து இசை வரலாற்றில் அதிக பதிவுகள் காணக்கிடைக்காத எமக்கு, *18ஆம்* நூற்றாண்டில் வாழ்ந்த சங்கீதச் சுப்பையர் சார்ந்த பதிவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

❍ ❍ ❍

# ஆதாரம்

சுப்பையர்.—**Chuppiar.**

வைதீகப் பிராமணராகிய இவரது முன்னோர்கள் இந்தியாவிலே கோதாவரி நதித் தீரத்திலுள்ள ஒரு நாட்டிலே குடியிருந்தவர்கள். இவரது பிதாவாகிய மேருகிரி ஐயர் அந்நாட்டில் நிகழ்ந்த கலககாரணத்தால் ௧௭௦௦ம் ௵ வரையில் நாகபட்டணத்தில் உருவேறிக் கோவளத்துறையிலே இறங்கிக் காரைதீவிலிருந்த பிராமணருடன் சம்பந்தம் கலந்தவர். அவர்க்கு மூத்த மைந்தனாகிய இவர் தமது தந்தையைப் போலவே தெலுங்கு, ஆரியம், தமிழ்களில் வல்லவர். சங்கீதசாஸ்திரத்திலே மிக்க பாண்டித்திய முடையவராய் வடதேசத்துக்குப் போக்குவரவு செய்து சங்கீதச் சுப்பையர் என்று வழக்கமாய் அழைக்கப்பட்டார். நல்லைநாயக நான்மணிமாலை, காரைக்குறவஞ்சி என்னும் இரண்டு பாடல்கள் இவரால் இயற்றப்பட்டன. இவர் காலம் கி. பி. ௧௭௯௫ம் ௵.

**பாவலர் சரித்திர தீபகம் (1886), பக் –** *266*

**ஆ. சதாசிவம்பிள்ளை**

# 3 கணித சிங்கம்

**நா. விஸ்வநாத சாஸ்திரி**
**வட்டுக்கோட்டை**
**கி.பி. 1756 – 1845**

வட்டுக்கோட்டை அராலி என்னும் ஊரைச் சேர்ந்த ***நாராயண சாஸ்திரி***யாரின் இரண்டாவது மகனாக ***விஸ்வநாத சாஸ்திரி*** 1756ஆம் ஆண்டு பிறந்தவர். இலக்கண இலக்கியங்களில் மட்டுமல்லாது சோதிட சாஸ்திரத்திலும் புலமையுடையவராக விஸ்வநாத சாஸ்திரி விளங்கியுள்ளார்.

இவரின் சோதிடத் திறமை உலக மட்டத்தில் பரவியிருந்தது. நான்காம் ஜோர்ஜ் மன்னருக்கு சோதிடம் கணித்ததால் ***இராசாவின் கணிதர்*** (Almanac Marker for His Majesty) என்னும் அரச பட்டம் இவருக்கு வழங்கப் பெற்றிருந்தது.

விஸ்வநாத சாஸ்திரியர் ஒரு புலமைமிக்க சோதிட மரபின் வழிவந்தவர். இலங்கையில் பணிபுரிந்த *Sir James Emerson Tennent* என்பவரால் 1850ஆம் ஆண்டு எழுதப்பெற்ற *Christianity in Ceylon* என்னும் நூலில் விஸ்வநாத சாஸ்திரி பற்றிய பின்வரும் பதிவுள்ளது.

> Batticotta was till lately the residence of Vesuvenathen, the most celebrated of the astronomers of Ceylon, inasmuch as he concentrated in his own person the accumulated science of his ancestors, who for nine generations had been cultivators of the same study.

*Sir James Emerson Tennent, (1850) Christianity in Ceylon,* **(பக். 139)**

இதன்படி ஒன்பது தலைமுறையினருக்கு மேலாக ஈழத்திலே சோதிடம் கணித்துவந்த பரம்பரை ஒன்று உள்ளது என்பது புலனாகிறது. அப்பரம்பரையில் ஒருவராக விஸ்வநாத சாஸ்திரியார் வழிவந்துள்ளார். ஈழத்திலே காணப்பெறுகின்ற அனைத்துப் புலமைத்துவ மரபுகளையும் ஒப்பிட்டு நோக்குகையில் நீண்டதொரு ஆவணப்படுத்தப்பெற்ற புலமைத்துவ மரபாக இந்தச் சோதிட புலமைத்துவ மரபு விளங்குகின்றது.

இந்த நீண்ட புலமைத்துவ மரபில் பல ஆளுமையாளர்கள் இருந்துள்ளனர். தற்பொழுது ஈழத்திலே சோதிடத்தின் இரு கிளைகளாக விளங்குகின்ற கொக்குவில் வாக்கிய பஞ்சாங்க மரபும், மட்டுவில் திருக்கணித பஞ்சாங்க மரபும் இங்கு குறிப்பிட்ட புலமைத்துவ மரபிலிருந்து கிளைவிட்ட இரு பிரிவுகளாகும்.

வட்டுக்கோட்டை மிசனரியிலிருந்து இரண்டு மைல் தொலைவில் வசித்த விஸ்வநாத சாஸ்திரி *1845*ஆம் ஆண்டு இயற்கை எய்தும்வரை பஞ்சாங்கம் கணித்துள்ளார் என்று தெரிகிறது. மேலும் வட்டுக்கோட்டை மிசனரி ***பேராசிரியர் பூர்*** (Rev.Dr.Poor) அவர்களுடன் *1828*ஆம் ஆண்டு சந்திர கிரகணம் கணிக்கும் போட்டியில் ஈடுபட்ட நிகழ்வு பிரபல்யம் வாய்ந்தது.

விஸ்வநாத சாஸ்திரி, ***வாக்கிய கரண கிரகணம்*** என்னும் கிரகணம் கணிக்கும் கணித நூலை *1788*ஆம் ஆண்டு வசனநடையில் எழுதியவர். இந்நூல் மட்டுமல்லாது ***வண்ணக்குறவஞ்சி, மாவைக் குறவஞ்சி, நகுலமலைக் குறவஞ்சி, கிள்ளைவிடுதூது, மயூரகிரி புராணத்துக்குரிய தெய்வநாயகி திருமணச் சருக்கம்*** ஆகியவற்றையும் இயற்றியுள்ளார்.

சோதிடத்தின் கணிதப் பகுதியில் மிகவும் புலமையுடைய நா.விஸ்வநாத சாஸ்திரியை ***கணித சிங்கம்*** என்றுதான் சமூக மக்கள் அடையாளப்படுத்தியுள்ளனர். ***சிங்கம்*** என்னும் சொல்லுக்கு ***உயர்ந்தோன்*** எனும் பொருளை ***நா. கதிரைவேற்பிள்ளை***யின் தமிழ் மொழி அகராதி தருவது கவனிப்புக்குரியது.

நான்காம் ஜோர்ஜ் மன்னர் வழங்கிய இராசாவின் கணிதர் என்னும் பட்டத்தை விடவும் மக்கள் வழங்கிய கணித சிங்கம் என்னும் அடையாளம் விஸ்வநாத சாஸ்திரிக்கு மகுடமாக விளங்குகின்றது.

❍ ❍ ❍

## ஆதாரம்

நாராயண ஐயர்—**Narayana Ayar.**

ஈடராசையர் புத்திரராகும் இவர் <u>கணித சிங்கம்</u> எனப் பேர்பெற்ற விசுவநாத சாத்திரியார்க்குத் தந்தையார். இவர் வட்டுக்கோட்டைத் தெற்கு அராலியில் வசித்தவர். கணித சிந்தாமணி எனும் நூலை இவர் இயற்றினர்.

***பாவலர் சரித்திர தீபகம் (1886), பக்** – 198*

***ஆ. சதாசிவம்பிள்ளை***

# 4 இலக்கணக் கொட்டன்

**பூ. முருகேச பண்டிதர்**

**சுன்னாகம்**

**கி.பி. 1829 – 1900**

**குறிப்பு: பூ.முருகேச பண்டிதரின் அடையாளமான இலக்கணக் கொட்டன் என்னும் பெயரும் வ.குமாரசுவாமிப் புலவரின் அடையாளமான இலக்கணக் கொத்தர் என்னும் பெயரும் வெவ்வேறானவை.**

சுன்னாகத்தில் வாழ்ந்த **பூதப்பிள்ளை (பூதத்தம்பி)** என்பவருக்கு மகனாக ***முருகேச பண்டிதர்*** பிறந்தார். ***சிவசம்பு புலவரிடமும் சங்கர பண்டிதரிடமும்*** இவர் கல்வி கற்றவர். முருகேச பண்டிதர், யாழ்ப்பாணம், சிதம்பரம், கும்பகோணம், சென்னை, திருப்பற்றூர் ஆகிய இடங் களில் தமிழ் உபாத்தியாயராக இருந்து பலருக்குக் கற்பித்தவர். ***சரவணமுத்துப் புலவர், ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, அ.குமாரசுவாமிப் புலவர்*** போன்றோர் முருகேச பண்டிதரின் மாணவர்களுள் சிலராவர்.

முருகேச பண்டிதர் பாரதம், இராமாயணம், கந்தபுராணம், சேதுபுராணம் முதலிய இலக்கியங்களிலும் தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலக் காரிகை, அகப்பொருள் முதலிய இலக் கணங்களிலும் வல்லுநர்.

இவர் நிரம்பிய கல்வியறிவு இல்லாதோர் செய்த நூலு ரைகளில் உள்ள குற்றங்களை எடுத்துக்காட்டி வாதம் புரியும் வழக்கமுடையவர். பத்திரிகைகளில் வாத விசயமாக பல கடிதங்களை எழுதியவர். ஆறுமுக நாவலரையும் பிறரையும்

வெல்லும் நோக்குடன் கத்தோலிக்க வித்துவான் ***அருளப்ப முதலியார்*** செய்த ***அலங்கார பஞ்சகம்*** என்னும் நூலிலே குற்றங்காட்டி, ***அலங்கார பஞ்சக சண்டமாருதம்*** எனக் கண்டனம் ஒன்றை வரைந்தவர்.

இவ்வாறான கண்டனங்களுக்கு இவரது இலக்கண சாமர்த்தியம் பெரிதும் பயன்பட்டது. இவருடைய இலக்கண சாமர்த்தியம் காரணமாக முருகேச பண்டிதரை அனைவரும் **இலக்கணக் கொட்டன்** என்று அழைத்தனர்.

***கொட்டன்*** என்னும் சொல்லுக்கு **பருத்தவன்** என்னும் பொருளை ***யாழ்ப்பாண அகராதி, நா. கதிரைவேற்பிள்ளை***யின் ***தமிழ் மொழி அகராதி***, ***தமிழ் லெக்ஸிகன்*** ஆகிய அகராதிகள் தருவதைக் காணலாம். இலக்கணத்தில் 'பருத்திருந்த' முருககேச பண்டிதரைச் சமூகமானது இலக்கணக் கொட்டனென்று சரியாக அடையாளப்படுத்தியிருந்தது.

***உ.வே. சாமிநாத ஐயர்*** பதிப்பித்த சீவகசிந்தாமணி நூலிலே காணப்பெற்ற வழுக்களைச் சுட்டிக்காட்டி ***சீவகசிந்தாமணி வழுப்பிரகணம்*** எனும் கண்டனத்தையும் அதைத் தொடர்ந்த வாதத்துக்கு அழைக்கும் விளம்பரத்தையும் இவர் கி.பி. *1888*இல் வெளியிட்டார். இதுசார்ந்து வாதுசெய்ய எவரும் முன்வரவில்லை. ஆனால், சீவகசிந்தாமணி இரண்டாம் பதிப்பில் வழுக்கள் திருத்தப்பட்டிருந்தன என்கிற பதிவுகள் காணப்பெறுகின்றன.

முருகேசப் பண்டிதர், பிறரின் குற்றங்களைக் கண்டு திருத்துவதற்கு வழிசெய்வதால் **தோடஞ்ஞர்** என அறிவுலகத்தால் அழைக்கப்பெற்றார். தோஷம் (தோடம்) களைபவர் இவர் என்பது பொருள். இவர், முழுகும்போது மிளகாய் அரைத்து தலையில் வைத்து முழுகுவதால் ***மிளகாய்ச் சட்டம்பியார்*** எனவும் மாணவர்களால் அழைக்கப்பெற்றுள்ளார்.

***மயிலணிச் சிலேடை வெண்பா, மயிலணி ஊஞ்சல், மயிலணி பதிகம், சந்திரசேகர விநாயகர் ஊஞ்சல், குடந்தை வெண்பா, நீதிநூறு, பதார்த்த தீபிகை*** ஆகிய பிரபந்தங்களையும் முருகேச பண்டிதர் இயற்றியவர். இவற்றுடன் பல தனிநிலைக் கவிகளும் பாடியுள்ளார்.

❍ ❍ ❍

## ஆதாரம்

இவர் இலக்கணத்திற் பெரிதும் சாமர்த்தியம் வாய்ந்தவர். அதனால் 'இலக்கணக் கொட்டன்' என்று அழைக்கப்படுவர்.

யாழ்ப்பாணத்திலும், இந்தியாவிலே சிதம்பரம், கும்பகோணம், சென்னை, திருப்பற்றூர் முதலிய இடங்களிலும் தமிழாசிரியராக இருந்தவர்.

ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் (1939), பக் – 77
வித்துவசிரோமணி சி. கணேசையர்

## இலக்கணக்கொட்டர்

முருகேசபண்டிதர் தமது இளமைக் காலத்தில் அவ்வூர் வாசியாகிய சிவசங்கர பண்டிதரிடம் சித்தாந்த தருக்க சாஸ்திரங்களை முறையே கற்றார். அவ்வாறு கற்றமையோடமையாது மேலும் மேலும் கற்கவேண்டும் என்னும் அவா மேலீட்டினால் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரை அடைந்து பஞ்சலக்கணங்களையும், பாரதம், இராமாயணம் முதலிய நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுத்தேறினார். அவருடைய பஞ்சலக்கணத் தேர்ச்சியையும் கவியியற்றுந் திறமையையும் யாவரும் மெச்சுவாராயினர். புன்னை வித்துவ சிரோமணி கணேசையரவர்கள் முருகேச பண்டிதருடைய இலக்கண அறிவை வியந்து 'எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி யென்னு மிலக்கணங்கள் பழுத்துள நாவினன்' என்று புகழ்ந்திருக்கின்றனர். பேசும்போதும் எழுதும் போதும் பண்டிதரவர்கள் இலக்கண வழுக்கள் விரவாத வசனநடையைக் கையாளும் வழக்குடையர். பிறர் எழுதும் நூல்களைத் துருவித் துருவி ஆராய்ந்து அவற்றிற் காணப்படும் இலக்கண வழுக்களைப் பத்திரிகைகள் மூலம் எழுதி வெளிப்படுத்தியும் வந்தனர். அவருடைய இலக்கண வன்மையை நன்கறிந்த எல்லோரும் அவரை 'இலக்கணக் கொட்டர்' என்று கூறினர்.

முருகேசப் பண்டிதர் பிரபந்தத் திரட்டு – கு. முத்துக்குமாரசுவாமிபிள்ளை தொகுத்தது, 1956, (பக். xi)

# 5 இலக்கணக் கொத்தர்

**வ. குமாரசாமிப் புலவர்**

**புலோலி**

**19ஆம் நூற்றாண்டு**

**குறிப்பு: பூ.முருகேச பண்டிதரின் அடையாளமான இலக்கணக் கொட்டன் என்னும் பெயரும் வ.குமாரசுவாமிப் புலவரின் அடையாளமான இலக்கணக் கொத்தர் என்னும் பெயரும் வெவ்வேறானவை.**

புலோலியில் வசித்த ***வல்லிபுரநாதப் பிள்ளை***க்கு மகனாக ***வ.குமாரசுவாமிப்*** புலவர் பிறந்தார். இவர் உடுப்பிட்டி ***சிவசம்புப் புலவரிடமும்*** வித்துவசிரோமணி ***பொன்னம்பலபிள்ளை***யிடமும் கற்றவர்.

வ.குமாரசுவாமிப் புலவர் இளமைக் காலம்தொட்டு தமிழிலுள்ள பஞ்ச இலக்கணங்கள்மீது அதிக நாட்டம் உடையவர். தமிழ் இலக்கணங்கள் கற்று, பெரும் பாண்டித்தியம் பெற்றவர். இவர் தமிழிலக்கணத்திற் சிறந்த பாண்டித்தியம் உடையவர் என்பதை இவரது திருத்தி ***அச்சிட்ட நன்னூல் காண்டிகை உரை***யினால் அறியலாம்.

வ.குமாரசுவாமிப் புலவர், சிறுபிள்ளைகளோடும் கல்வி அறிவற்ற மக்களோடும் உரையாடும் போதுகூட இலக்கணப் பிழைகளின்றியே உரையாடுவார். எவராவது இலக்கண வழுக்களோடு உரையாடினால் மிகுந்த வருத்தம் கொள்வார். அத்தோடு அவ்வாறு இலக்கண வழுக்களோடு உரையாடுபவர்களைக் கண்டிக்கவும் செய்வார்.

இவ்வாறாக இலக்கணத்தில் பற்றும் பாண்டித்தியமும்

உடைய வ.குமாரசுவாமிப் புலவரை **இலக்கணக் கொத்தர்** என்று பலரும் கூறுவர். **கொத்து** என்னும் சொல்லானது **திரள்** என்னும் பொருளில் நிற்க, இலக்கணக் கொத்தர் என்னும் பெயர்ச்சொல் வ.குமாரசுவாமிப் புலவருக்குப் பொருந்தி வருவதைக் காணலாம். **இலக்கணக் கொத்து** என்னும் ஓர் இலக்கண நூலும் உள்ளது.

இவர், தமிழ் இலக்கியங்களுக்குள்ளே வில்லிபுத்தூர் ஆழ்வாரின் பாரதத்தில் மிகுந்த பயிற்சி உடையவர். அப்பாரதத்தின் **சூதுபோர்ச் சருக்கம்** முதலிய சில சருக்கங்களுக்கு **உரையும்** எழுதியுள்ளார்.

வ.குமாரசுவாமிப் புலவர், தமிழ்மொழிப் பயிற்சி மட்டுமன்றி வடமொழியிலும் சிறந்து விளங்கினார். இவர் வடமொழி சாரஸ்வத வியாகரணத்தில் சிறந்த பாண்டித்தியம் உடையவர் என்பர். இப்புலவர் வண்ணார்பண்ணையிலுள்ள இந்துக்கல்லூரியில் சிலவருடம் தமிழ்ப் பண்டிதராக பணியாற்றியும் உள்ளார்.

❍ ❍ ❍

**ஆதாரம்**

இவர் சிறுபிள்ளைகளோடும் கல்வியறிவற்ற சனங்களோடும் பேசுங்காலும் இலக்கண வழுவின்றியே பேசுவார். இலக்கண வழுவுடைய தமிழ்ப் பிரயோகங்களைக் கேட்குந்தோறும் மிக மனம் வருந்துவதோடமையாது பேசுபவர்களையும் கண்டிக்குந் தன்மையுடையவர். அதனால் இவரை 'இலக்கணக்கொத்தர்' எனப் பலருங் கூறுவதுண்டு. 'இலக்கணக்கொத்து' என்பது ஒரு இலக்கண நூல்.

**ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் (1939), பக் – 177**
**வித்துவசிரோமணி சி. கணேசையர்**

# 6 நாடகப் புலவர்

**இ. நாகேச ஐயர்**
**வட்டுக்கோட்டை**
**19ஆம் நூற்றாண்டு**

வட்டுக்கோட்டையில் வசித்த ***இராமசாமி ஐயர்*** என்பவருக்கும் ***கிருஷ்ண அம்மாள்*** என்பவருக்கும் மகனாக ***நாகேச ஐயர்*** பிறந்தார். இராமசாமி ஐயர், பல கீர்த்தனங்களும் விருத்தங்களும் பாடியதோடு மட்டுமல்லாது ***அல்லிநாடகம்*** என்னும் நாடகத்தையும் இயற்றியவர். இந்த அல்லிநாடகமானது மகாபாரத அருச்சுனனின் மனைவியான அல்லிராணியின் சரித்திரத்தை அடிப்படையாகக் கொண்டது.

நாடகம் இயற்றும் புலமையானது தந்தைவழி நாகேச ஐயருக்கும் கடத்தப்பெற்றுள்ளது. நாகேச ஐயர், தமது தந்தையாரை இளவயதிலேயே இழந்தபோதும் கல்வியாளர்களிடம் கற்று சிறந்த புலமைபெற்று விளங்கினார். நாகேச ஐயரும் தமது தந்தையாரைப் போன்று மகாபாரதக் காவியத்துக்குள் தமது நாடகக் கருக்களை அமைத்துக்கொண்டார். இவர் பாடிய இரண்டு நாடகங்களுள் ஒன்று ***அருச்சுனன் நாடகம்*** மற்றையது ***சுபத்திரை நாடகம்***.

அருச்சுனன் நாடகத்தில் *150* தருக்களும், *30* விருத்தங்களும், *5* வெண்பாக்களும், *20* வண்ணத்தருக்களும், *20* பல்லவித் தருக்களும், *30* கொச்சங்களும் இன்னும் சில பாவகைகளும் உள்ளடக்கப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

புகழ்பெற்ற வட்டுக்கோட்டை வித்துவான் ***கணபதி ஐயரின்*** பெண்வழிப் பேரனும், ***சரவணபவ ஐயரின்*** ஆண்வழிப் பேரனுமாகிய

நாகேச ஐயரின் நாடகம் பாடும் திறமையானது சமூகத்தினரால் அவர் வாழும் காலத்திலேயே அங்கீகாரம் பெற்றிருந்தது. ஆதலால் நாகேச ஐயரைப் பலரும் **நாடகப் புலவர்** என்று அழைத்தனர். புலமையால் கிடைக்கப்பெற்ற இந்தச் சிறப்புப் பெயருடன் மக்கள் இவரை **நாகமுத்தையர்** என்றும் அழைத்தனர்.

நாடகங்கள் இயற்றுவதில் புகழ்பெற்றிருந்த நாகேச ஐயர், ***அடைக்கலங்கோவை*** என்னும் *100* கட்டளைக் கலித்துறைகள் அடங்கிய கோவை ஒன்றையும் பாடியுள்ளார். அத்துடன் **இராமேசர் வெண்பா** என்னும் *100* பாக்கள் உள்ள நூலையும் இயற்றியுள்ளார். இவற்றுக்கும் மேலாகச் சாதஸ்காந்தத்தின் அரும்பொருட் துணிவுகளை ***துவாதசபாகம்*** என்னும் நூலாகவும், விஷ வைத்திய சாரங்களைத் திரட்டி ***அமுதநுணுக்கம்*** என்னும் நூலாகவும் இயற்றியுள்ளார் என்று அறியமுடிகின்றது.

நாடகப் புலவர் என்னும் நாகேச ஐயரின் மகனான ***சிவசுப்பிரமணிய ஐயரும்*** வாழையடி வாழையாக சிறந்த புலமைத்துவம் உடையவராக விளங்கினார் என்பது வரலாறு.

❍ ❍ ❍

## ஆதாரம்

இராமசாமி ஐயர்,— **Ramasami Ayer.**

வேத வேதாந்த கணித சாத்திரங்களிற் பாண்டித்தியம் பெற்று விளங்கியிராநின்ற இப்புலவரேறு, யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைத் தமக்குச் சென்னபூமியாய்க் கொண்டவர். நாடகப் புலவர் எனப் பிரசித்தம் பெற்ற நாகேசையர்க்குத் தந்தையார். இவர்க்குத் தந்தையார் சுப்பிரமணிய ஐயர். இவர் கதிரைமலைக் கந்தசாமிபேரிற் பற்பல கீர்த்தனங்கள், விருத்தங்கள் சொற்றூரன்றி, மதுரைக்குச்சமீபமான பூழி என்னும் மணலிபுரத்தில் இருந்து சிற்றரசு புரிந்த சித்திரவாகன் எனும் பாண்டியராசன் மகளும், பாண்டவரில் நடுப்பிறந்தோனான அருச்சுனன் மனைவியுமாகிய அல்லியின் சரித்திரத்தை நாடகமாய்ப் பாடினர். அதற்கு அல்லிநாடகம் என்று பெயர். இவர் இற்றைக்கு எழுபது எண்பது வருடங்களின் முன் இருந்தவர்.

**பாவலர் சரித்திர தீபகம் (1886), பக் –** *38*
**ஆ. சதாசிவம்பிள்ளை**

# 7 கோவைத்துறை சுவாமிநாதர்

**அ. சுவாமிநாதர்**

**மானிப்பாய்**

**கி.பி. 1765 – 1824**

**குறிப்பு: அ. சுவாமிநாதருக்கு நாடகச் சுவாமிநாதர் என்னும் பிறிதொரு சிறப்புப் பெயரும் உண்டு.**

அருணாசலம் என்பவருக்கு மகனாய்ப் பிறந்த **சுவாமிநாதர்**, 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் மானிப்பாயில் வாழ்ந்தவர். இவருடைய தம்பியின் பெயர் **முத்துச்சாமிப்பிள்ளை**.

சுவாமிநாதர் தம்முடைய இளவயதில் மானிப்பாய் வேரகப் பிள்ளையார் கோயிலில் கந்தபுராணம் வாசித்துக்கொண்டிருந்தபோது ஒருதருணம் இராகத்தினைத் தவறிப் படித்துவிட்டார். அச்சந்தர்ப்பத்தில் கந்தப்புராணத்துக்கு அர்த்தம் சொல்லிக்கொண்டிருந்தவர் சுவாமி நாதரை சற்றே இழிவாகக் கூறிவிட்டார். இதனால் ஓர்மம்கொண்ட சுவாமிநாதர் தம்மூரைவிட்டு தமிழ்நாடுசென்று அங்கே சங்கீதம் முறையாகப் பயிலத்தொடங்கினார்.

சங்கீத சாஸ்த்திரத்தில் மிகவும் தேர்ச்சிபெற்ற சுவாமிநாதர், ஈழத்துக்குத் திரும்பிவந்து "இராகப் பரீட்சைக்கு இருப்பிடம் சுவாமிநாதர்தான்" என்னும் அளவுக்கு பெரும்புகழ் நாட்டியுள்ளார். மேலும், "மானிப்பாய் ஊர்தான் அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலேயே சங்கீத இராகங்களைச் சிறப்புற இசைப்போர் வாழுமிடம்" என்னும் புகழை எட்டுத் திசையும் பரவிடச் செய்துள்ளார். சுவாமிநாதரின் முன்னால் மிகவும் தேர்ச்சிபெற்ற நட்டுவ விற்பன்னர்களும்,

வாத்தியக்காரர்களும், வாத்தியம் இசைக்க அஞ்சும் அளவிற்கு சங்கீதத்தில் மிகுந்த தேர்ச்சியை அவர் பெற்றிருந்தார்.

சுவாமிநாதரின் குரல் கோகிலத்தின் குரல்போன்று மிகவும் இனிமையானது. இதனால் இவர் பாடும்போது விரும்பிக் கேட்பதற்கு பெரியோரும் சிறியோரும் விரும்பி வருவர் என்னும் பதிவுள்ளது. குறிப்பாக, கேட்போர் செவிகள் விருந்து அருந்தச் சந்தமும் இன்பமுமாய்க் ***கோவைத்துறை***யை சுவாமிநாதர் படிப்பாராம். இதன் காரணமாக ***கோவைத்துறைச் சுவாமிநாதர்*** என்னும் சிறப்புப் பெயரை சமூகம் அவருக்கு வழங்கியிருந்தது.

தமிழிலக்கியத்தில் கோவை என்பது *96* வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று. திருக்கோவையார் மற்றும் பாண்டிக் கோவை ஆகிய நூல்கள் ஆரம்பத்தில் எழுந்த நூல்கள் ஆகும். இவற்றைத் தொடர்ந்து பல கோவை நூல்கள் தமிழில் எழுந்துள்ளன. ஈழத்திலும் சில கோவை நூல்கள் பாடப்பெற்றுள்ளன. சுவாமிநாதர் எக்கோவைத்துறைப் பாடல்களைக் குறிப்பாக பாடியுள்ளார் என்னும் பதிவுகள் கிடைக்கப்பெறவில்லை.

சங்கீதத்துடன், நாடகத்திலும் சுவாமிநாதர் சிறந்துவிளங்கி யுள்ளார். இதனால் இவருக்கு ***நாடகச் சுவாமிநாதர்*** என்னும் பிறிதொரு சிறப்புப்பெயரையும் சமூகம் வழங்கியிருந்தது. இதுபற்றி இந் நூலில் நாடகச் சுவாமிநாதர் என்னும் குறிப்பில் காண்க.

❍ ❍ ❍

# 8 நாடகச் சுவாமிநாதர்

**அ. சுவாமிநாதர்**

**மானிப்பாய்**

**கி.பி. 1765 – 1824**

**குறிப்பு: அ. சுவாமிநாதருக்கு கோவைத்துறைச் சுவாமிநாதர் என்னும் பிறிதொரு சிறப்புப் பெயரும் உண்டு.**

மானிப்பாயைச் சேர்ந்த அருணாசலத்தின் புதல்வர் சுவாமிநாதர் இசைத்துறையில் வல்லவர். கோவைத்துறைப் பாடல்களை இனிமையான இசையுடன் பாடுவதால், **கோவைத்துறை சுவாமிநாதர்** என்று மக்கள் அவரை அழைத்தனர்.

இசையுடன் மட்டுமல்லாது நாடகத்திலும் சுவாமிநாதர் சிறந்து விளங்கினார். இவர், **இராம நாடகம்** மற்றும் **தருமபுத்திர நாடகம்** ஆகிய நாடகங்களைப் பாடியுள்ளார். இவற்றுள் தருமபுத்திர நாடகம் முழுவதும் பழமொழிகளின் விளக்கமாகவே அமைந்துள்ளது.

சுவாமிநாதர் வாழும் காலத்திலும் பிற்காலத்திலும் இவரால் படிக்கப்பெற்ற நாடகங்களே நடிகர்களால் நடிக்கப்பெற்று வந்துள்ளன. இவ்விரு நாடகங்களையும் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் படித்து ஆடியுள்ளனர். நாட்டு நாடகங்கள் மற்றும் விலாசங்களுக்குள் இவர் பாடிய மேற்குறித்த இரண்டு நாடகங்களுக்கு மேலானவை இல்லை என்கிற பதிவுகள் காணப்பெறுகின்றன. இவருடைய பாடல்கள் பளபளப்புச் சந்தமும் இன்பமும் கொண்டவையாக அமைந்துள்ளன. இவரிடமிருந்த சங்கீதப் பயிற்சி இதற்கு வழிவகுத்தது எனலாம்.

நாடகத்தில் சிறந்த புலமைத்துவமுடைய சுவாமிநாதரை, **நாடகச் சுவாமிநாதர்** என்று சமூகம் அடையாளப்படுத்திச் சிறப்பித்தது.

நாடகங்கள் மாத்திரமன்றி ஊஞ்சல் பாடல்களும், பதிகங்கள் பலவும் பாடியுள்ளார். தொண்டைமானாற்று கோயிலின்மீது பாடிய பதிகங்கள், கொழும்பு முத்துவிநாயக சுவாமிமேல் பாடிய கலிவெண்பா மற்றும் ஊஞ்சல் என்பன அவற்றில் சிலவாகும்.

கோவைத்துறை சுவாமிநாதர் மற்றும் நாடகச் சுவாமிநாதர் என்று மக்கள் சுவாமிநாதரை அழைத்துவந்தனர் என்பது அவரின் புலமைத்துவத்துக்கு தக்க சான்றாகும்.

❍ ❍ ❍

## ஆதாரம்

### சுவாமிநாதர். — Chuvaminathar.

இவர் யாழ்ப்பாணம் மானிப்பாயிலே, வேளாளர் மரபிலே, செல்வாக்குற்ற குடும்பத்திலே, இற்றைக்கு முன்பின் கஉ০ வருடங்களின் முன் பிறந்தவர். இவர் தந்தையார் நாமம் அருணாசலம். இவர் தம்பியார் கொழும்பு இராசதானியிலே அதி பிரதாபத்தோடு வாழ்ந்து சலாபக் குத்தகை கொண்டதால் இலங்கை, இந்தியா எங்கும் பேரெடுப்புற்ற முத்துச்சாமியாபிள்ளை. இப்புலவரது புத்திரர் இலங்கைச் சட்டநிரூபண சபையில் அநேக ஆண்டுகளாகப் பிரதிநிதியாய் இருந்த எதிர்மன்னசிங்க முதலியார். இவர் சங்கீத சாஸ்திரத்தில் மிக்க பேர்பெற்றுக், கேட்பார் செவிகள் விருந்தருந்தச் சந்தமும் இன்பமுமாய்க் கோவைத்துறை படிக்கும் காரணத்தாற் கோவைத்துறைச் சுவாமிநாதர் என்றும், நாடகம் பாடுங் காரணத்தால் நாடகச் சுவாமிநாதர் என்றும் இரு மறுநாமங்கள் வாங்கினவர்.

***பாவலர் சரித்திர தீபகம் – ஆ. சதாசிவம்பிள்ளை (1886), கலாநிதி பொ. பூலோகசிங்கத்தின் ஆராய்ச்சிக்குறிப்புகளுடனான பதிப்பு (1979), பக் – 258***

# 9 கவிராசர்

**அ. முத்துக்குமார கவிராசர்**

**உடுவில்**

**கி.பி. 1780 – 1851**

உடுவிலைச் சேர்ந்த **அம்பலவாணப்பிள்ளை** என்பவரின் புதல்வராக முத்துக்குமாரர், 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்தார். சுன்னாகம் **அ. குமாரசுவாமிப் புலவர்**, இவரின் பௌத்திரர் ஆவார். மேலும் பதிப்புத்துறைக்கு இலக்கணம் வகுத்த ***சி.வை. தாமோதரம்பிள்ளை***யின் ஆசிரியராக முத்துக்குமார கவிராசர் விளங்கியுள்ளார். தாமோதரம்பிள்ளை, தன்னுடைய நூற் பதிப் புரைகள் அனைத்திலும் குருவணக்கத்தை முத்துக்குமார கவிராச ருக்குச் செலுத்தியுள்ளமையைக் காணலாம்.

முத்துக்குமாரர் கவிபாடுவதில் மிகுந்த திறமையுடையவராக இருந்துள்ளார். இவரின் கவிதைகளைக் கேட்டுணர்ந்த அறிஞர்கள் ***கவிராசர் / கவிராயர்*** என்று இவரை வழங்கி வந்துள்ளனர். சில இலக்கியப் பதிவுகள், ***கவிராசசேகரம்*** என்றும் பதிவுசெய்துள்ளன.

***கவிராயன்*** என்பது 'புலவர் வம்சத்தானுக்கு வழங்கும் பட்டப்பெயர்' என்றும் 'கவிசிரேட்டன்' என்றும் தமிழ் லெக்சிகன் பொருள்களைத் தருகிறது. கவிராயன் என்னும் பெயரே கவிராசன் என்றும் மருவியுள்ளது.

முத்துக்குமார கவிராசர், பல தனிப்பாடல்களைப் பாடியுள்ளபோதும் இவை ஏடுகளில் எழுதப்பட்டிருக்கவில்லை.

ஆனால் இவரின் பாடல்களின் சிறப்புத்தன்மையால் யாவரும் செவிவழி கேட்டு மனனம் பண்ணிக்கொண்டுள்ளார்கள். அவ்வாறு செவிவழியாகக் கடத்தப்பெற்று வந்த பாடல்களில் இருபத்து ஐந்தினை கவிராசரின் வம்சாவழிவந்த அ. குமாரசாமிப் புலவர் தொகுத்து ***முத்தக பஞ்ச விஞ்சதி*** என்னும் பெயரோடு புத்தக உருவத்தில் அச்சிட்டார்.

இச்செய்யுள்களில் பல விநோதமாக நாமாந்தரிதை என்கிற பிரேளிகை சித்திரகவி வகையைச் சேர்ந்தவை.

தனிப்பாடல்களுடன், ***ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம், ஐயனார் ஊஞ்சல், நடராசர் பதிகம்*** ஆகிய பிரபந்தங்களையும் முத்துக்குமார கவிராயர் பாடியுள்ளார்.

சேதுபுராண கதையொன்றினை அடிப்படையாகக் கொண்டு ***சகத்திரானீக நாடகம்*** என்னும் ஒரு நாடகத்தையும் எழுதியுள்ளார் என்னும் பதிவுகள் உள்ளபோதும் மேலதிக விபரங்களை அறிய முடியவில்லை.

கவி பாடுவதில் இராசாவாக விளங்கியுள்ளமையினாலேயே கவிராசர் என்று மக்கள் இவரை அடையாளப்படுத்தியுள்ளனர்.

**ஆதாரம்**

## முத்துக்குமார கவிராசர்

இவர் ஏறக்குறைய நூற்றுமுப்பது ஆண்டுகளுக்கு முன் உடுவிற்பதியிலே, வேளாளர் குலத்திலே சந்திர சேகர மாப்பாணர் மரபிலே அம்பலவாணபிள்ளை என்பவருக்குப் புதல்வராகப் பிறந்தார். சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் இவருக்குப் பௌத்திரர்.

இவர் கவிபாடும் வன்மையில் மிகச் சிறந்தவர். இவர் கவிகளைக் கேட்டுணர்ந்த கற்றோர் பலரும் இவரைக் கவிராசர் என்று வழங்கி வந்தார்கள்.

***ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் (1939), பக் –*** 44
***வித்துவசிரோமணி சி. கணேசையர்***

கவிராசர் என்றவுடன் முத்துக்குமாரக் கவிராசரே அனைவரின் மனங்களிலும் முன்நின்றாலும், கவிராசர் என்னும் அடையாளத்துடன் மேலும் சிலர் ஈழத்தில் இருந்துள்ளமையைக் காண முடிகின்றது.

ஈழத்தில் திருகோணமலையில் வாழ்ந்து ***கோணேசர் கல்வெட்டு*** என்னும் நூலை இயற்றிய புலவரை ***கவிராஜர்*** என்று இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. இவருடைய இயற்பெயர் அறியுமாறில்லை.

ஒல்லாந்தர் ஆட்சிசெய்த காலத்தில் வாழ்ந்த புலவர்களில் ஒருவராக ***வரதபண்டிதர்*** அமைகிறார். இவர் ***பண்டிதர்*** என்றும், தானாகவே பாடும் சக்தி கிடைக்கப் பெற்றமையால் ***வரகவி*** என்றும் பலராலும் அழைக்கப்பெற்றவர். வரகவி என்னும் அடையாளத்தோடு பலர் ஈழத்தில் வாழ்ந்துள்ளனர். ***வட்டுக்கோட்டை கணபதி ஐயர், வி.சின்னத்தம்பி புலவர், நாகமணிப் புலவர், கட்டுவனூர் விஸ்வநாதர்*** ஆகியோரும் வரகவி என்னும் சிறப்புடன் வாழ்ந்தவர்கள்.

***அரங்கநாதர்*** என்பவருக்கு மகனாகப் பிறந்த வரதர், பண்டிதர் மற்றும் வரகவி ஆகிய சிறப்புப் பெயர்களுடன் ***கவிராயர்*** என்னும் சிறப்புப் பெயரோடும் அழைக்கப்பெற்றுள்ளார் என்பதை இலக்கியப் பதிவுகள் எமக்கு அறியத்தருகின்றன. கவி பாடுவதில் சிறந்த புலமையுள்ள வரதகவிராயர், வாழவும் கெடவும் பாட வல்லவர் என்னும் பதிவுகள் உள்ளன.

தமிழ் இலக்கண இலக்கியங்கள் மட்டுமன்றி சோதிடமும் வைத்தியமும் கற்றுப் பாண்டித்தியம் பெற்றவர். வேதாந்த சித்தாந்த நூல்களிலும் சிறந்த பயிற்சி உடையவர். இவர் அச்சுவேலி என்னும் இடத்தில் வசித்தவர். இவர் இறந்தபின் பல ஆண்டுகளுக்கும் மேலாக இவர் வசித்த இடமானது **புலவனார் வளவு** என அழைக்கப்பெற்று வந்துள்ளது.

இவர் ***சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம்*** என்னும் புராண நூல்களை இயற்றியுள்ளார். இன்றுவரை ஈழத்திலுள்ள கோயில்களில் படித்துவருகின்ற ***பிள்ளையார்கதை***யை இயற்றியவரும் வரத பண்டிதரே. மேலும் ***அமுதசாகரம்*** என்னும் வைத்திய நூலையும் இயற்றியுள்ளார். இவற்றுக்கும் மேலாக ***கிள்ளைவிடுதூது*** என்னும் தூது இலக்கியம் பாடியுள்ளதாகவும் இலக்கியப் பதிவுகள் உள்ளன.

# வரதராச கவிராசர்

இயற்றிய

# சிவராத்திரி புராணம்

**ஆதாரம்**

கந்தபுராணம்போலவே சிவராத்திரி புராணம் எனும் பின்னொன்னைச் சுன்னாகத்தில் இருந்த வரதகவிராயர் பாடினர். அதில் எகடு பாக்களுள. நெல்லைநாதர்பாடின இதனை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை ா. ா. சிவசுப்பிரமணிய ஐயர் பல ஏட்டுப்பிரதிகளை ஆதாரமாய்க் கொண்டு திருத்திச் சென்னபட்டணத்தில் அச்சிடுவித்தனர்.

**பாவலர் சரித்திர தீபகம் (1886), பக்** – 201
**ஆ. சதாசிவம்பிள்ளை**

கவிராயர் வரிசையில், முத்துக்குமார கவிராசர், வரதக் கவிராசர் ஆகியோரைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்கவர் *19ஆம்* நூற்றாண்டைச் சேர்ந்த **கட்டுவனூர் விஸ்வநாதர்**. விஸ்வநாதர் என்னும் பெயருடன் **சுதுமலை விஸ்வநாதர்** மற்றும் **மல்லாகம் விஸ்வநாதர்** ஆகியோரும் *19ஆம்* நூற்றாண்டில் வாழ்ந்துள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

பெரும்புலவர் என்று பெயரெடுத்த **காசிநாதரின்** மகனாக விஸ்வ நாதர் பிறந்துள்ளார். **கட்டுவனூர்க் கவிராயர்** என்ற சிறப்புப் பெயருடன் விஸ்வநாதர் அழைக்கப்பெற்றுள்ளார். இதனுடன் **வரகவி, கட்டுவனூர் விஸ்வநாதர், சட்டம்பியார் விஸ்வநாதர், நாகக்கவி, விஸ்வப்புலவர்** ஆகியன இவர் கொண்டிருந்த பிறபெயர்களாகும்.

விஸ்வநாதக் கவிராயர், வீரபத்திர வசந்தன் நாடகம் உட்பட, வீரபத்திர நாடகக் கவிகள், மருதடி விநாயகர் துதி, கற்பக விநாயகர் துதி, கதிரைப் பதிகம், வள்ளியம்மானை, சுப்பிரமணியர் ஊஞ்சற் பதிகம், வீரபத்திரர் ஊஞ்சற் பதிகம், அந்தாதிமாலை, ஞான வைரவர் துதி, வீரபத்திரர் துதி ஆகியவற்றை இயற்றியுள்ளார்.

இவற்றில் சில வசாவிளான் இராசநாயத்தின் உதவியினால் தேடித் தொகுக்கப்பெற்று வெளியிடப்பெற்றுள்ளது. விஸ்வநாதர் முத்தமிழுடன் வைத்தியம், சோதிடம், மாந்திரிகம் ஆகியனவும் முறை யாகத் தெரிந்தவர். மக்களுக்கு பெருமளவில் உதவி புரிந்துள்ளார், எனும் பதிவுகள் உள்ளன.

### ஆதாரம்

கட்டுவனூர்க் கவிராயர் கட்டுவனூர் விசுவநாதர் என்றும், சட்டம்பியார் விசுவநாதர் என்றும், நாகக் கவி என்றும், விசுவப்புலவர் என்றும் ப ல வா ரு க வழங்கியவர். மயிலிட்டியை அடுத்த கட்டுவனூரில் உக்குடை என்னும் இடத்தில் வாழ்ந்த காசிநாதர் என்பாரின் காதல் மைந்தனுகத் தோன்றிய இவர், இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தார் என்ப.

***செந்தமிழ் வளர்த்த பாவலர்கள் – முதற் பாகம் (1989), பக் – 90***

***க. சி. குலரத்தினம்***

○ ○ ○

# 10 தர்க்ககுடாரதாலுதாரி

**திருஞானசம்பந்தப்பிள்ளை**
**நல்லூர்**
**19ஆம் நூற்றாண்டு**

நல்லூரைச் சேர்ந்த ***திருஞானசம்பந்தப்பிள்ளை***, ***ஆறுமுக நாவலரிடமும்*** அவரின் மருகரான ***பொன்னம்பலபிள்ளை***யிடமும் கல்வி கற்றவர். இலக்கணம், இலக்கியம், தர்க்கம், சித்தாந்த சாஸ்த்திரம் ஆகியவற்றை நன்கு கற்றவர்.

இவர் கும்பகோணத்திலும் சிதம்பரத்திலும் வசித்தவர். பலருக்குப் பாடம் சொன்னவர். ***தர்க்கா அமிர்த மொழிபெயர்ப்பு, வேதாகம வாததீபிகை, அரிகரதாரதம்மியம், நாராயண பரத்துவ நிரசனம்*** ஆகிய நூல்களைச் செய்தவர்.

தர்க்க சாஸ்திர ஆராய்ச்சியிலும், தர்க்கவாதம் செய் வதிலும் மிகுந்த விருப்பம் உடையவர். ஆதலினால் ***தர்க்கா அமிர்த மொழிபெயர்ப்பு, வேதாகம வாததீபிகை*** ஆகிய நூல்களையும் இவர் செய்துள்ளார். திருஞானசம்பந்தப்பிள்ளைக்கு காணப்பெற்ற இவ் வார்வம் மற்றும் புலமை காரணமாக இவரை அனைவரும் ***தர்க்க குடாரதாலுதாரி*** என அழைத்துள்ளனர்.

***தாலு*** என்றால் அண்ணம். ***தாரி*** என்றால் உடையவன். ***குடாரம்*** என்கிற சொல் கோடரியைக் குறிக்கின்றது. அதாவது தர்க்கம் செய்வதில் கோடரி போன்ற நாக்கை உடையவர் திருஞானசம் பந்தப்பிள்ளை என்ற பொருளைக் குறிக்கிறது. இதனால் இவரை ***தர்க்கக்கோடரி*** என்றும் அழைத்தனர்

❍ ❍ ❍

## ஆதாரம்

### திருஞானசம்பந்தப்பிள்ளை

இவர் ஏறக்குறைய ௯0 வருடங்களுக்குமுன்னே நல்லூரிலே வேளாளர் குலத்திலே பிறந்தவர். நாவலர்க்கும் வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளைக்கும் மாணவகர். இலக்கண இலக்கியங்களுந் தருக்கமுஞ் சித்தாந்த சாத்திரமுங் கற்றவர். தர்க்கசாத்திர ஆராய்ச்சியிலுந் தர்க்கவாதஞ்செய்வதிலு மிக விருப்பமுடையவர். அதுபற்றி இவர் தர்க்ககுடாரதாலுதாரி என எவராலு மழைக்கப்படுவர்.

**ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் (1939), பக்** – 105
**வித்துவசிரோமணி சி. கணேசையர்**

# 11 சுத்தாத்துவித சைவ சித்தாந்த பிரசாரகர்

**சு. சரவணமுத்துப்பிள்ளை**

ஊரெழு (பிற்காலத்தில் நல்லூர்)

1848 – 1916

***சுப்பிரமணியப்பிள்ளை*** என்பவருக்கு புத்திரராக ஊரெழுவில் ***சரவணமுத்துப்பிள்ளை*** பிறந்தார். ஆரம்பத்தில் புன்னாலைக்கட்டு வனைச் சேர்ந்த **கதிர்காம ஐயரிடமும்**, பின்னர் **முருகேச பண்டிதரிடமும்** கல்வி கற்றவர். இவருடன் சேர்ந்து **ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையும், அ. குமாரசுவாமிப் புலவரும்** முருகேசப் பண்டிதரிடம் கல்வி கற்றனர்.

***சைவ உதயபானு*** என்னும் பத்திரிகைக்கு அதிபராய் அதனை ஆறுவருட காலம் நடத்தியுள்ளார். பிற்காலத்தில் வேறுசில பத்திரிகைகளுக்கும் விஷயதானம் வழங்கியவர். இதனால் இவரை ***பத்திரிகாதிபர் சரவணமுத்து*** என மக்கள் அழைப்பது வழக்காயிற்று.

தெளிவாகத் தமிழிலே வசனநடை எழுதுவதிலும், கவி பாடுவதிலும், பிரசங்கம் செய்வதிலும் இவர் சிறந்து விளங்கினார். யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் புலவருள் இவரும் ஒருவராவார். இவர் ஆங்கில மொழியும் தெரிந்தவர்.

யாழ்ப்பாணத்தில் இவரது பிரசங்கம் நடைபெறாத சபைகளாக ஒருசில மாத்திரமே காணப்பெற்றன. கோயில்களிலும் புராண பிரசங்கம் செய்தவர். கொழும்பு சைவபரிபாலன சபையில் சிலகாலம் பிரசாரகராக இருந்தார். இந்தியா உட்பட சில நாடுகளுக்கும் சென்று பிரசங்கங்கள் செய்துள்ளார்.

மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைமைப் புலவரான **பாண்டித்துரைத் தேவரை** அக்கிராசனராகக் (தலைவராகக்) கொண்ட சபையிலும் பிரசங்கம் செய்து பாராட்டுப்பெற்றவர்.

சந்தான சித்தாந்த சாஸ்திரங்களில் மிகுந்த விருப்பமும் பயிற்சியும் உடையவர். இவை இவரின் பிரசங்கங்களில் வெளிப்பட்டு நிற்கும். இதன்காரணமாக இவரை ***சுத்தாத்துவித சைவசித்தாந்த பிரசாரகர்*** எனப் பலரும் புகழ்ந்து அழைப்பது வழக்காயிற்று. இதனைச் சுருக்கி ***பிரசாகர்*** என்று அழைத்த வழக்கமும் இருந்துள்ளது. இவரிடம் பலர் சித்தாந்த நூல்களை முறையாகக் கற்றுள்ளனர்.

சரவணமுத்துப்பிள்ளை போலி விடயங்களைத் தாக்கி கண்டனம் எழுதுவதிலும் வல்லவர். ***கு. கதிரைவேற்பிள்ளை*** தொகுத்த அகராதிப் பணிக்கும் உறுதுணையாக இருந்தவர். விரைந்து கவி பாடுவதிலும் சாமர்த்தியமுடையவர். இவர் இராமநாதபுரத்து மகாராசாவாகிய ***பாற்கரசேதுபதி*** மீது தேர்க்கவி என்கிற நுட்பமான சித்திரக்கவியும் பாடியுள்ளார்.

○ ○ ○

## ஆதாரம்

இவர் கற்ற காலத்திலே இவருடன் சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவரும், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை யும் கற்றனர். தெளிவாகத் தமிழிலே வசனநடை எழுது வதிலும் கவி பாடுவதிலும் பிரசங்கஞ் செய்வதிலும் இவர் சிறந்தவராக விளங்கினுர். ஆங்கிலமுந்தெரிந்தவர். சந்தான சித்தாந்த சாஸ்திரங்களிலும் மிக்க பயிற்சியுடையவர். இதனுலிவரைச் சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பிரசாரகர் எனப் பலரும் புகழ்ந்து பேசுவர்.

**ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் (1939), பக்** – 124
***வித்துவசிரோமணி சி. கணேசையர்***

# 12 சித்துப் புலவர்

**சிதம்பரப்பிள்ளை**

**சுன்னாகம்**

**18ஆம் நூற்றாண்டு**

**சிதம்பரப்பிள்ளை** பற்றிய பதிவுகள் சொற்பமாகவே கிடைக்கப்பெறுகின்றன. பற்பல தனிப்பாக்கள், பதிகங்கள், ஊஞ்சல் பாடல்களை இவர் இயற்றியுள்ளார். மயிலணி நரசிங்கர் மீதும் பாடல்களைப் பாடியுள்ளார்.

இவர் புலவர் மட்டுமன்றி, விஷ வைத்தியராகவும் விளங்கியுள்ளார். இவரின் விஷவைத்தியப் புலமை காரணமாக இவரை அனைவரும் ***சித்துப்புலவர்*** என அழைத்துள்ளார்கள். இவரின் இயற்பெயரான சிதம்பரப்பிள்ளை என்பதைவிட சித்துப்புலவர் என்னும் பெயரே இலக்கியப் பதிவுகளில் நிலை பெற்றுள்ளன.

○ ○ ○

**ஆதாரம்**

சித்துப்புலவர். — **Chiththup Pulavar.**

இவரது சுயநாமம் சிதம்பரப்பிள்ளை. இவர் உடுவிலைச் சேர்ந்த சுன்னுகக் குறிச்சியிலே, வேளாளர் வருணத்திலே, சுமார் நூறு வருடங்களின் முன் பிறந்தவர். இவர் புலவரன்றி விஷ வைத்தியருமாம். இவர் பற்பல தனிப்பாக்கள், பதிகங்கள், ஊஞ்சலிசைகளாதிய பாடினர்.

***பாவலர் சரித்திர தீபகம் – ஆ. சதாசிவம்பிள்ளை (1886), கலாநிதி பொ. பூலோகசிங்கத்தின் ஆராய்ச்சிக்குறிப்புகளுடனான பதிப்பு (1979), பக் – 203***

# 13 புலவன் கனகசபை

**வே. கனகசபைப்பிள்ளை**

**அளவெட்டி**

**கி.பி. 1829 – 1873**

புலமையுடையோர்களை அவர்களின் நாமங்களுடன் சேர்த்து புலவர் என்று பொதுப்படையாக அழைப்பது வழக்கம். இருப்பினும் அளவெட்டியைச் சேர்ந்த ***கனகசபை***யைப் பொறுத்த மட்டில் புலவர் என்னும் சிறப்புப் பெயர் தனித்துவமானது. இவரின் பாடும் திறமை நோக்கி இவர் வாழும் காலத்திலேயே இவரை **புலவன்** என்றும் **புலவன் *கனகசபை*** என்றும் ஊர் மக்கள் அழைத்துவந்துள்ளனர்.

இவருக்குச் சற்றுப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்த சுன்னாகம் **அ. குமாரசாமிப் புலவரும்** இத்தகையதொரு சிறப்பைப் பெற்றவர். குமாரசுவாமிப் புலவர், **புலவர்** என்றும் **புலவர் ஐயா** என்றும் வாழும் காலத்தில் பரவலாக அழைக்கப்பெற்றவர்.

**வேலுப்பிள்ளை**யின் மகனான கனகசபைப்பிள்ளை இளம் வயதிலேயே பாடும்திறன் பெற்றவர். பெற்றோர் சைவராயினும் இவர், சமயாசாரத்தாற் புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவர்.

தமிழ் இலக்கிய இலக்கணங்களில் பயிற்சியுடைய இவர் ஆங்கிலமும் தெரிந்தவர். மேலும் ஐரோப்பியமுறை வைத்தியமும் கற்றுக்கொண்டவர். இவருடைய தந்தை வேலுப்பிள்ளை, தமிழ் வைத்தியராய் இருந்தவர். தந்தையிடம் கனகசபைப்பிள்ளை அவர்கள் தமிழ் வைத்தியமும் கற்றுக்கொண்டவர். கனகசபைப் பிள்ளைக்கு தமிழ் வைத்தியம் அதி சித்தியாக அமையப்பெற்று பெருங் கீர்த்திபெற்றார்.

இப்பெரும் புலவனார், ***திருவாக்குப் புராணம்***, ஒரு சொல் பலபொருள் தொகுதி ***நிகண்டு***, கண்டி மன்னனின் புதல்வரான அழகர்சாமி மீது பாடிய **மடல் பிரபந்தம்**, **புலவராற்றுப்படை**, ஓர் **உலாப்** பிரபந்தம் எனப் பல பாடல்களைப் பாடியுள்ளார். சென்னையில் இருக்கும் காலத்தில் அகராதிப் பணியிலும் ஈடுபட்டவர்.

புலவன் கனகசபை இறந்ததையொட்டி *1873*ஆம் ஆண்டு உதயதாரகைப் பத்திரிகையில் ***ஆணல்ட் சதாசிவம்பிள்ளை*** பின்வருமாறு எழுதியுள்ளார்.

"ஆ! அளவையம்பதித் தமிழ்ப்புலவன் ராஜ ராஜ வே.கனக சபைப் பிள்ளையின் மரணத்தால் யாழ்ப்பாணம் ஓர் சிரேட்ட அறிஞன், புலவன், வைத்தியன், வாசாலன், இலக்கண இலக்கியன், கனவான், தனவானை இழந்ததென்று துன்புற்றுப் புலம்புகிறோம். ஆ! மரணமே! நீ பெருங் கொடியன்...."

*19*ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து ***குருக்கள் கோடரி*** என்னும் பிரபந்தம் பாடிய மானிப்பாயைச் சேர்ந்த விநாகன் என்பவரையும் ***புலவன் விநாயன்*** என்றே சாதாரண மக்கள் அழைத்துள்ளனர் என்பது கருத்தில் கொள்ளத்தக்கது. இவர் இறந்தபின்னரும் இவர் வாழ்ந்த இடம், ***புலவனார் வளவு*** என அழைக்கப்பெற்று வந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

❍ ❍ ❍

## ஆதாரம்

பாடுந்திறமை நோக்கி இவரைப் 'புலவன்' என்றும், 'புலவன் கனகசபை' என்றும் ஊரிலுள்ளார் பேசுவர். இவர் பாக்கள் பழையபாக்கள் போன்று மிகவும் சொற்சுவை பொருட்சுவை அமைந்தனவாகும். பல தனிப்பாக்களன்றித் திருவாக்குப் புராணம் என ஒருபுராணமும்பாடியுள்ளார். இதனைக் கிறிஸ்தவர்கள் மிகக் கொண்டாடுவர். இதில் 'களறுக' விருத்தப்பாக்கள் அமைந்துள்ளன. இதுவன்றி ஒரு சொற் பலபொருட் டொகுதியாக ஒரு நிகண்டும் பாடியுள்ளார்.

***ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் (1939), பக் – 62***
***வித்துவசிரோமணி சி. கணேசையர்***

# 14 பரசமய கோளரி

**சி. சங்கர பண்டிதர்**
**சுன்னாகம் – நீர்வேலி**
**கி.பி. 1829 – 1871**

**யா**ழ்ப்பாணத்திலிருந்த சமஸ்கிருத பண்டிதர்களுள் சிரேஷ்டராகக் கணிக்கப்பெறுவர் ***சங்கர பண்டிதர்***. இவர் ***சிவகுரு நாதர்*** என்பவருக்கு மகனாக சுன்னாகத்தில் பிறந்து பின்னர் நீர்வேலியில் வசித்தவர்.

***பண்டிதர், சைவசிகாமணி, வடமொழி தென்மொழிக் கடல் நிலைகண்டவர், சித்தாந்த சைவப்பிரசாரக சிரோரத்தினம்*** எனப் பலவாறு சங்கர பண்டிதர் போற்றப்பட்டுள்ளார். இவற்றுடன் சங்கர பண்டிதர், ***பரசமயகோளரி*** என்று அறிஞர் சமூகத்தால் பாராட்டப்பெற்றவர். ***பரசமயம்*** என்பது ***பிறசமயங்கள்*** என்பதையும் ***கோளரி*** என்பது ***ஆண்சிங்கம்*** என்பதையும் குறிக்கின்றன.

சங்கர பண்டிதர், கிறிஸ்தவ சமயம் உட்பட பிறசமயங் களுக்கு எதிராகக் கண்டனங்களையும் வாதங்களையும் முன்வைத் துள்ளார். இவரெழுதிய ***கிறிஸ்தவமத கண்டனம்*** கிறிஸ்தவ சமயத்த வருக்கு சவாலாக அமைந்த நூல்களில் ஒன்றாகும். இவற்றுடன் ***மிலேச்சமதவிகற்பம், சிவதூஷண கண்டனம்*** ஆகிய கண்டன நூல்களும் குறிப்பிடத்தக்கன.

இவற்றின் காரணமாக பிறசமயத்தோருக்கு அவர்களின் சமயங்களை எதிர்த்து நிற்கும் ஆண்சிங்கமாக நீர்வேலி சங்கர பண்டிதர் விளங்கியுள்ளார்.

மேற்குறித்த நூல்களுடன் ***அநுட்டானவிதி, சிரார்த்தவிதி, வருணாச்சிரம தர்மம், சத்தசங்கிரகம், முதலாம் சத்தசங்கிரகம், சமஸ்கிருத முதலாம் பாலபாடம், சமஸ்கிருத இரண்டாம் பாலபாடம், தாதுமாலை*** ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

இவர் பல நூல்களைப் பரிசோதித்து பதிப்பித்ததுடன் பல உரைகளையும் செய்துள்ளார். புராணபடனம், பிரசங்கங்கள் செய்வதுடன் பலருக்கு பாடம் கற்பித்துமுள்ளார்.

❍ ❍ ❍

## ஆதாரம்

பண்டிதர் சிறந்த வித்துவசிரோமணியாயிருந்து, நன் மாணாக்கர்களுக்குப் பலகலைபயிற்றியும், பரமதகண்டனமாகவும் சுவமதத் தாபனமாகவும் பலபிரசங்கங்கள் செய்தும் பல நூல்களி யற்றியும் தமது ஆயுட்காலம் முழுவதிலும் இருமொழிக்கும் வைதிக சைவத்துக்கும் பெருந்தொண்டு செய்து வந்தார்களா தலினாலே, "வடமொழி தென்மொழிக்கடல், நிலைகண்டவர்" என்றும், சித்தாந்த சைவப்பிரசாரக சிரோரத்தினம் என்றும், "சைவசிகாமணி" என்றும் "பரசமயகோளரி" என்றும், அறிஞர்களாற் பாராட்டப்படுகின்றார்.

**தி. செல்வமனோகரன் தொகுத்த**
**சிவசங்கர பண்டிதம் (2016), பக் –** 22
**(மேலது) ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் சரித்திரம் –**
**ச. குமாரசுவாமிக்குருக்கள் எழுதியது**

# 15 ஏகசந்தக்கிராகி

**நெல்லைநாத முதலியாரும் சேனாதிராய முதலியாரும்**

**இருபாலை**

**18ஆம் நூற்றாண்டு – 1840**

இருபாலை என்னும் ஊரைச் சேர்ந்த **நெல்லைநாத முதலியார்** ஞாபகசக்தியில் மிகவும் சிறந்து விளங்கியவர். இவர் எந்த விடயத்தையும் ஒருமுறை கேட்டவுடனேயே கிரகித்து மனதில் பதிவு செய்துகொள்ளத்தக்க திறமை உடையவர். இதனால் இவரை ***ஏகசந்தக்கிராகி*** என்று அனைவரும் போற்றினர். இவருடைய புதல்வராகிய **சேனாதிராய முதலியாரும்** தமது தந்தையைப் போன்றே ஏகசந்தக்கிராகியாக விளங்கினார்.

நெல்லைநாத முதலியார் பற்றிய பரவலான பதிவுகள் இல்லாதபோதும் சேனாதிராய முதலியார் பற்றிய தகவல்கள் எமக்குக் கிடைக்கப்பெறுகின்றன. **ஆறுமுகநாவலர், சரவணமுத்துப் புலவர், சம்பந்தப் புலவர், கார்த்திகேய ஐயர், பீதாம்பரப் புலவர், ஏகாம்பரப் புலவர், அம்பலவாண பண்டிதர், நாகநாத பண்டிதர்** உட்படப் பலருக்கு சேனாதிராய முதலியார் ஆசிரியராக இருந்துள்ளார். இவர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழ் விருத்தியடைந்து இருந்தமைக்கு இவரையே காரணமாகக் கூறுவர்.

நல்லூர் கந்தசாமிக் கோயிலில் முதன்முதலில் பிரசங்கம் செய்யத் தொடங்கியவர் சேனாதிராய முதலியாரே. இவரிடமிருந்த ஞாபகசக்தி காரணமாக 40 நாட்களில் **நன்னூல்** இலக்கண நூலை **கூழங்கைத் தம்பிரானிடம்** கற்றதாகக் கூறுவர்.

யாழ்ப்பாணத்தில் 1842ஆம் ஆண்டு அச்சிடப்பெற்ற தமிழ் அகராதிப் பணியில் முதல்வராகச் சேனாதிராயர் ஈடுபட்டதாகக் கூறுவர். யாழ்ப்பாணத்து நீதிமன்றத்தில் ஆரம்பகாலங்களில் மொழிபெயர்ப்பு துவிபாஷிகராகவும், பின்னர் நீதிபதியாகவும் பணியாற்றியுள்ளார்.

சேனாதிராய முதலியார், **நல்லை வெண்பா, நல்லை திரிபந்தாதி, நல்லைக் குறவஞ்சி, நல்லை கலிவெண்பா, நல்லை ஊஞ்சற் பதிகம், வண்ணை நீராவி விநாயகர்மீது யமகத் தொடையில் அமைந்த கலிவெண்பா, மாவைச் சுப்பிரமணிய கடவுள்மீது ஊஞ்சற் பதிகம்** ஆகிய பதிகங்களைப் பாடியுள்ளார்.

❍ ❍ ❍

## ஆதாரம்

வடதேயப்புலவர் ஒருவர் வண்ணைச் சிவன்கோவில் மண்டபத்தில் அரங்கேற்றிய பிரபந்தத்தை ஒரே முறையில் கேட்டவாறே பழம்பாடல் எனக் கூறி ஒப்புவித்த அவதானத் திறமைபற்றி நெல்லைநாத பண்டிதர் ஏகசந்தக்கிராகி எனப் போற்றப்பட்டனர் என்ப. சேனாதிராய முதலியாரும் அவதானத் திறமையில் மிக்கவராதலால் இச்சம்பவத்தை இவர்மீதேற்றி இவரையே ஏகசந்தக்கிராகி எனப் போற்றிருமுளர். (பாவலர் சரித்திர தீபகம்).

........... கூழங்கைத் தம்பிரான் தமது மாணவர்களுக்கு ஒரு விஷயத்தை ஒருமுறையேயன்றி இரண்டாம்முறை கூருத இயல்புடையவர். சேனாதிராய முதலியார் ஏகசந்தக்கிராகி யாதலால், இவர் ஒருவரே ஷை தம்பிரானிடம் கற்றவர்களுள்ளே சிறந்த புலமை உடையவராயினர்.

**க. முருகேசப்பிள்ளை எழுதிய சேனாதிராயரின் வாழ்க்கை வரலாறு**
**நல்லை வெண்பா (1942), பதிப்பு.**
**நூலாசிரியர் வரலாறு**

# 16 சின்னத்தம்பிப் புலவர்

**சின்னத்தம்பிப் புலவர்**

**நல்லூர்**

**கி.பி. 1716 – 1780**

சின்னத்தம்பிப் புலவர் என்னும் பெயருடன் பல புலவர்கள் ஈழத்தில் இருந்துள்ளார்கள். வீரகத்தி மணியகாரன் வழிவந்த ***தா. சின்னத்தம்பி உபாத்தியாயர்*** இணுவிலைச் சேர்ந்த ***சி. சின்னத்தம்பி*** ஆகியோர் குறிப்பிடத்தக்கோர். தெல்லிப்பளையில் **கனகராயன் பள்ளு** இலக்கியம் பாடிய ***சின்னக்குட்டிப் புலவர்*** என்னும் ஒருவர் இருந்துள்ளார். இவர்களின் இயற்பெயர் பிறிதொரு பெயராக இருந்திருக்க வாய்ப்புகள் அதிகம். சின்னத்தம்பி, சின்னக்குட்டி ஆகிய பெயர்கள் அனேகமாக சமூகம் வழங்கிய பெயர்களாகவே இருத்தல்வேண்டும்.

இவ்வரிசையில் ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த ***வி. சின்னத்தம்பிப் புலவர்*** சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். ***வி. சின்னத்தம்பிப்*** புலவர் பற்றிக் குறிப்பிடுகையில் யாழ்ப்பாண புலவர்களிலேயே திலகம்போல் விளங்கியவர் என்று பாவலர் சரித்திர தீபகம் எழுதிய ***ஆணல்ட் சதாசிவம்பிள்ளை*** குறிப்பிட்டுள்ளார். வில்லவராச முதலியாரின் மகனான ***செயதுங்க மாப்பாண முதலியாரு***க்கு சிறுவயதிலேயே புலமைவாய்க்கப் பெற்றிருந்தமையால் ***சின்னத்தம்பிப் புலவர்*** என அழைக்கப்பெற்றார் என்று ***தி. சதாசிவஐயர்*** தமது ஆய்வில் (1935) குறிப்பிட்டுள்ளார்.

வி. சின்னத்தம்பிப் புலவர் சிறுவனாக இருக்கும் காலத்திலேயே மிகுந்த புலமைவாய்க்கப்பெற்றிருந்தார் என்பதற்கு வலுச்சேர்க்கும் முகமாக பல கர்ணபரம்பரைக் கதைகள் காணக்கிடைக்கின்றன.

சிறுவனாக விளையாடிக்கொண்டிருந்த சின்னத்தம்பிப் புலவரிடம் வில்லவராய முதலியாரின் வீடு இருக்கும் இடத்தை புலவரொருவர் வினவியபோது, வீட்டின் இடத்தினை பாடலாகவே பாடியமை, தந்தையார் எழுதத் தொடங்கியிருந்த அந்தாதி பாடலினை சின்னத்தம்பிப் புலவர் பாடி முடித்தமை, வண்ணார்பண்ணை கொச்சிக் கணேசையர், கம்பராமாயணச் செய்யுள் ஒன்றுக்குப் பொருள்கூறச் சிரமங்காணும் தறுவாயில் அப்பாடலுக்கான பொருளை திறம்படக்கூறி கொச்சிக் கணேசையரிடம் நிலத்தினைப் பரிசாகப் பெற்றமை, எனப் பல கதைகள் சின்னத்தம்பிப் புலவர் இளமையில் புலமைபெற்றிருந்தார் என்பதற்கான செவிவழிக் கதைகள் ஆகும்.

***மறையந்தாதி, கல்வளையந்தாதி, கரவை வேலன் கோவை, பறாளைப் பள்ளு*** ஆகிய பிரபந்தங்கள் உட்பட பல தனிச்செய்யுள்களையும் சின்னத்தம்பிப் புலவர் பாடியுள்ளார்.

❍ ❍ ❍

## ஆதாரம்

இதனால் இவருக்குரிய சுயநாமமாகிய அரசாட்சிப் பட்டப் பெயர் **செயதுங்கமாப்பாண முதலியார்** என்பதாகல் வேண்டும் என்பதும் சின்னத்தம்பிப்புலவர் என்பது சிறுவயதிலேயே புலமை வாய்க்கப் பெற்றமையால் இவர்க்கு இட்டு வழங்கிய பெயராகல் வெண்டும் என்பதும் ஊகித்துக் கொள்ளத்தக்கன. இவருக்கு இந்த இரண்டு பெயரும் உண்டென்பதை இவராற் பாடப்பட்டதாக வழங்கும் ஒரு சீட்டுக் கவியின் பாகமாகிய,

*தரளவயல் சூழ்தருந் தென்காரை யம்பதிச்*
*சமரகோன் முதலி பேரன்*
*செகராசன் மதிமந்த்ரி யானசின்* ***னத்தம்பிச்***
**செயதுங்க** *னெழுது மோலை*

என்பதில் இவர் தம்மைச் **சின்னத்தம்பிச் செயதுங்கன்** எனக் குறிப்பிடுவதினாலு மறியலாம்.

***இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தொகுத்த நல்லூர் சின்னத்தம்பி புலவர் பிரபந்தங்கள் (பதிப்பாசிரியர் க. இரகுபரன்). (2005), பக் – 322***

***(மேலது) கரவைவேலன்கோவை (1935) – தி. சதாசிவஐயர் எழுதிய முகவுரையிலிருந்து***

# 17 பட்டதாரிப் பையன்

**வி. கனகசபைப்பிள்ளை**

**மல்லாகம்**

**1855 – 1906**

மல்லாகத்தைச் சேர்ந்த ***விசுவநாதப்பிள்ளை*** என்பவரின் மகனாக ***கனகசபைப்பிள்ளை*** பிறந்தார். தமிழ் மக்களின் தொன்மையையும் பண்பாட்டையும் முதன்முதலில் முறையாக ஆவணப்படுத்திய நூலான **1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்** என்னும் ஆங்கில நூலை இவர் 1904ஆம் ஆண்டு வெளியிட்டவர்.

***உ. வே. சாமிநாத ஐயரின்*** பதிப்புப் பணிக்கு கனகசபைப் பிள்ளையின் ஓலைச்சுவடிகள் பலதடவைகள் உதவிபுரிந்துள்ளன. இதுபற்றி உ.வே. சாமிநாத ஐயர் பதிவுசெய்துள்ளார்.

வி. கனகசபைப்பிள்ளை மிகவும் இளம் வயதிலேயே (தமது 17 வயதளவில்) சென்னைப் பல்கலைக்கழகத்தில் ***இளங்கலைப் பட்டம்*** பெற்றார். இதனால் இவரைப் ***பட்டதாரிப் பையன்*** (Boy Graduate) எனச் செல்லமாக அனைவரும் அழைத்தனர். பட்டதாரிப் பையன் எனவும் ***பீ.ஏ. தம்பி*** எனவும் அழைத்துள்ளனர் என்கிற பதிவுகள் உள்ளன. மிகவும் இளம் வயதிலேயே பட்டம் பெற்றமையினால் சமூகம் பட்டதாரிப் பையன் எனும் அங்கீகாரத்தை கனகசபைக்கு வழங்கியிருந்தது.

அப்பல்கலைக்கழகத்திலேயே, சிறிதுகாலம் தமிழ் மொழி பெயர்ப்பாளராக பணிபுரிந்தார். பின்னர், அஞ்சல்துறையில்

கண்காணிப்பாளராகச் சேர்ந்து பணிபுரிந்து, உயர் அதிகாரி ஆனார். சட்டப் படிப்பினையும் முடித்து மதுரையில் வழக்கறிஞ ராகத் தொழில் புரிந்துள்ளார்.

❍ ❍ ❍

## ஆதாரம்

இவர் சென்னை அரசாங்கக் கல்லூரியிலே சேர்ந்து கல்வி பயின்று மிக இளமையாயிருக்கும்போதே 'கலைமாணி'ப் பட்டம் பெற்றுக் கொண்டமையால் '<u>பட்டதாரிப் பையன்</u>' (Boy Graduate) எனக் கொண்டாடப்பட்டவர். சேர். பொன். இராமநாதன் அவர்கள் இவருடன் கற்ற ஒரு சாலை மாணவராவர். இவர் சட்டப் பரீட்சையிலும் தேறி மதுரையிலே சிறிது காலம் வழக்கறிஞராகவும் விளங்கினுர் என அறியக்கிடக்கின்றது.

**ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள் (1967), பக் –** 68
**மு. கணபதிப்பிள்ளை**

# 18 சின்னக் காளமேகம்

**சு. நமசிவாயம்**
**ஆவரங்கால்**
**19ஆம் நூற்றாண்டு**

ஆவரங்காலைச் சேர்ந்த ***இராமலிங்க முதலியாரின்*** மகன், ***விநாசித்தம்பி***. இவரின் மகன் ***கந்தப்பிள்ளை***. கந்தப்பிள்ளையின் மகனான ***சுப்பிரமணியத்தின்*** இரண்டாவது மகனாக ***நமசிவாயம்*** பிறந்துள்ளார். இவரை ***நல்லத்தம்பி*** என்றும் அழைப்பர்.

நமசிவாயப் புலவரின் இலக்கிய, இலக்கண, சங்கீதத் திறமையைக் கண்டு ஈழம் மற்றும் தமிழ்நாட்டு அறிஞர்கள் வெகுவாகப் போற்றியுள்ளனர். ***சிவசங்கர பண்டிதர்*** மற்றும் ***சிவசம்புப் புலவர்*** ஆகியோரிடம் நமச்சிவாயப் புலவர் கற்றவர்.

இவரைப் பற்றி பல சுவையான பதிவுகள் காணப்படுகின்றன. நமச்சிவாயப் புலவர் வாழும் காலத்திலே இவரின் கல்வி விவேகத்தைப் பற்றி அறியாதவன் யாழ்ப்பாணத்தில் இருப்பானாயின் அவனை நிர்மூடன் என்று சமூகம் கணித்துள்ளது. இவர் வாழும் காலத்தில் இவருடைய ஆசிரியரான ***சிவசம்புப் புலவரைத்*** தவிர, தீவிரமாய்ப் பாடல்களை இயற்றவும், வாக்கு வல்லபமாய் சபைகளில் துணிந்து பேசவும், எதிராளிகள் அஞ்சும்படி காளமேகப் புலவர்போன்று தீவிரமாக உத்தரங்கள் கொடுக்கவும் நமச்சிவாயப் புலவருக்கு ஒப்பானவர் இல்லை என்று பலராலும் பல சந்தர்ப்பங்களில் பேசப்பட்டதாகப் பதிவுகள் உள்ளன.

நல்லூர் கந்தசாமி கோயிலுக்கும் ***ஆறுமுக நாவலரு***க்கும் இடையில் நடைபெற்ற விவாதத்தில் நமச்சிவாயப் புலவர், நாவலர்

பக்கம் நின்று வாதங்களை முன்வைத்ததுடன் **வெற்றிவேலாயுதம்** என்கிற நூலையும் எழுதியுள்ளார். இவர் பாடிய சங்கீத கீர்த்தனைகளைச் சிறப்பித்து **ஈழமண்டல சதகத்திலே வே. கணபதிப்பிள்ளை** குறிப்பிட்டுள்ளார்.

'இம்'மென்னும்முன்னே பாடல்களைப் பாடியவர் புலவர் காளமேகம். இவரையொத்த ஈழத்து நமச்சிவாயப் புலவரை, **ஈழத்துத் காளமேகம்** என்றும் **சின்னக் காளமேகம்** என்றும் அழைத்ததோடு மட்டுமல்லாது, இவரின் மறைவின்போது சரமகவி ஒன்றிலே **சுபவாக்கியம்பிள்ளை** அவர்கள் இவரைக் காளமேகம் எனப் பதிவு செய்துள்ளார்.

❍ ❍ ❍

### சின்னக் காளமேகம்

இம்மென்னும் முன்னே பாடல்கள் பாடிய காளமேகம், பெருங்காளமேகம். ஈழத்துக் காளமேகம் அல்லது சின்னக்காளமேகம் என்னும் புலவர் ஒருவர் யாழ்ப்பாணத்து ஆவரங்காலில் வாழ்ந்தவர். இராமநாத முதலியார் வழியில் வந்த சுப்பிரமணியம் என்பார் வட்டுக்கோட்டையில் செமினறியில் பெரும் படிப்புப் படித்த காலத்தில் பாற்றசன் என்னும் பெயர் புனைந்திருந்தவர். கல்விப் பெருமையுள்ள இவர் கவிபாடும் தனியாற்றல் வாய்ந்தவர். இவரின் மைந்தர்களுள் நல்லதம்பி என வழங்கிய நமச்சிவாயப் புலவர். இவர் காலத்தில் பெரும் புலவராயிருந்ததோடு சிவசம்புப் புலவர், ஆறுமுகநாவலர் மதிக்க வாழ்ந்தவர். நாவலர் எழுதிய கண்டனக் கட்டுரைகளுக்குச் சார்பாக வெற்றிவேலாயுதம் என்னும் நூலை எழுதி வெளியிட்டவர். கண்டனப் பாக்கள் எடுத்த எடுப்பிலே பாடிக் குவித்த இவர் பெருமையை வியந்து இவரைக் காளமேகத்தோடு சேர்த்துப் பாடியவர் சுபவாக்கியம்பிள்ளை என்னும் புலவராவர்.

மெச்சு கவிக்காள மேகமோ வீணருளம்
அச்சமுறச் செய்யும் அரியேறோ — மெச்சொன்று
ராயப் பெருவலிகா லாவரங்கால் வாழ்நமச்சி
வாயப் புலவணிந்த மண்.

***மில்க்வெற் செய்தி – இதழ் – 75 (1982), பக் – 12***

### ஆதாரம்

ஸ்ரீ- சிவசம்புப்புலவரொழிய யாழ்ப்பாணத்திலே நாமறிய இருந்த இருக்கின்ற புலவருள் எவராயினும் தீவிரமாய்ப் பாவியற்றவும், வாக்குவல்லபமாய்த் துணிந்து சபையிற் பேசவும், சத்துருகுழுவஞ்சக் காளமேகம் போல் தீவிரயுத்தியோடுத்தரங்கொடுக்கவும், இவர்க்கொப்பாரா யொருவரிருக்கவில்லையென்று பலராலும் பலவமையங்களிற் பாராட்டிப் பேசப்பட்டவர். இவரால் சுப்பிரமணியசுவாமிமேற் பாடப்பெற்ற நூதன கீர்த்தனங்களை யாழ்ப்பாணத்திலே அறியாத பாடகரில்லை. இவருடைய கல்வி விவேகத்தைப்பற்றி யாழ்ப்பாணத்திலே அறியாதொருவனிருப்பானேல் அவனை நிர்மூடனென்க யாரும் பின்னிடார்.

***யாழ்ப்பாண வைபவ கௌமுதி (1918), பக் – 213***
***க. வேலுப்பிள்ளை***

# 19 கணிதப்புலி–யூகிளிட்

**மு. சிதம்பரப்பிள்ளை – வில்லியம் நெவின்ஸ்**

**சங்குவேலி – வட்டுக்கோட்டை**

**1820 – 1889**

சங்வேலியில் கி.பி. *1820ஆம்* ஆண்டு ***முத்துக்குமாரு***க்கு மகனாக ***சிதம்பிரப்பிள்ளை*** பிறந்தார். வட்டுக்கோட்டை மிஷனரியில் படித்த இவருக்கு ***வில்லியம் நெவின்ஸ்*** என்னும் பெயரும் உண்டு.

*1840ஆம்* ஆண்டு செமினரியில் கல்வியை முடித்துக்கொண்ட நெவின்ஸ், மானிப்பாய் அமெரிக்க மிஷன் பாடசாலையில் உதவி ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்னர் *1846ஆம்* ஆண்டு தொடக்கம் தாம் கற்ற வட்டுக்கோட்டை செமினரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து கணிதம், அளவையியல், தமிழிலக்கணம் என்னும் பாடங்களை மாணவர்களுக்குக் கற்பித்தார் என்று தெரியவருகிறது. இக்காலகட்டத்தில் செமினரியில் கற்ற மாணவர்களில் ***சி.வை. தாமோதரம்பிள்ளை*** குறிப்பிடத்தக்கவர். *1856ஆம்* ஆண்டு செமினரி மூடப்படும்வரை அங்கு ஆசிரியராகப் பணிபுரிந்த நெவின்ஸ், பின்னர் இந்தியாவுக்குச் சென்று சிலகாலம் பணிபுரிந்துள்ளார்.

இவர் எழுதிய நூல்களில் *1850ஆம்* ஆண்டு வெளியிடப்பெற்ற ***நியாய இலக்கணம்*** (Elements of Logic) முக்கியமானது. மேலைத்தேய தர்க்கக் கல்வியையும் இந்திய தர்க்கக் கல்வியையும் இணைத்து வெளிவந்த முதலாவது நூலாக இது கணிக்கப்பெறுகின்றது. மேலும் கூரிய கணித அறிவுகொண்ட மு. சிதம்பரப்பிள்ளை, பாடசாலைக் கணிதப் பகுதியில் செய்யப்படவேண்டிய சில திருத்தங்கள் பற்றி ***இலங்கை நேசன்*** பத்திரிகையில் எழுதியுள்ளார்.

இவர் மாணவராக இருந்த காலத்தில் கணிதத்தில் மிகவும் விவேகியாக இருந்த காரணத்தால் ***கணிதப்புலி*** என அழைக்கப் பெற்றுள்ளார். மேலும் கேத்திர கணிதத்தை மேலைநாட்டவரும் வியக்கும்வண்ணம் சுருக்க வழிகளில் செய்வதால் **யூகிளிட்** எனவும் அழைக்கப்பெற்றுள்ளார்.

❍ ❍ ❍

## ஆதாரம்

பிள்ளை அவர்கள் செமினரியில் மாணுக்கனுயிருந்த காலத்தில் கணித பாடத்தில் கடும் விவேகியாயிருந்த காரணத்தால் ''கணிதப்புலி'' எனவும் வழங்கி வந்தார். கேத்திர கணிதத்தில் எந்தக் கணக்கையும் வெள்ளையர் வியக்கும் வகையில் புதுவழியாலும் சுருக்க வழியாலும் செய்தும் நிரூபித்தும் வந்தாரெனவே பெரியவர்கள் இவரின் விவேகத்தை மெச்சி 'யூகிளிட்' என்று அழைத்து மகிழ்ந்தனர்.

**செந்தமிழ் வளர்த்த பாவலர்கள் – முதற் பாகம் (1989), பக் –** 123

**க. சி. குலரத்தினம்**

# 20 தோடஞ்ஞர் – Born Critic

**அ. குமாரசுவாமிப் புலவர்**

**சுன்னாகம்**

**1855 – 1922**

சுன்னாகத்தைச் சேர்ந்த ***அம்பலவாணப்பிள்ளை குமாரசுவாமிப் பிள்ளை புலவர்*** அவர்கள், ***முத்துக்குமாரக் கவிராயரின்*** பௌத்திரர் ஆவார். குமாரசுவாமிப் புலவர், **முருகேசப் பண்டிதரிடம்** கற்றவர். முருகேசப் பண்டிதர் வாதங்கள் செய்வதிலும் வழுக்களைக் கண்டுபிடிப்பதிலும் மிகுந்த சாமர்த்தியம் உள்ளவர். ***உ.வே. சாமிநாத ஐயர்*** அவர்கள் பதிப்பித்த சீவகசிந்தாமணிப் பதிப்பிலுள்ள வழுக்களைக் குறித்து ***சீவகசிந்தாமணி வழுப்பிரகரணம்*** என்னும் கண்டனத்தையும் வாதத்துக்கான அழைப்பையும் பகிரங்கமாக விடுத்தவர். சில வரலாற்று ஆசிரியர்கள், சீவகசிந்தாமணி வழுப்பிர கரணத்தை முருகேசப் பண்டிதரின் மாணவரான குமாரசுவாமிப் புலவர் மேற்கொண்டதாகவும் கூறுவர்.

முருகேசப் பண்டிதர் கொண்டிருந்த வழுக்களைக் கண்டுகொள்ளும் திறனானது அவரின் மாணவரான குமாரசுவாமிப் பிள்ளைக்கும் கடத்தப்பெற்றுள்ளது என்று கூறல்வேண்டும். குமாரசுவாமிப் புலவர் அவர்கள், இளமைக் காலம்தொட்டு கண்டனம் எழுதுவதிலும், முக்கியமாக வழுக்களைக் கண்டுகொள்வதிலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார். விடயதானங்களிலுள்ள குற்றங்களை - தோஷங்களைக் கண்டு அதனைக் களைவதற்கு வழிசெய்வதால் இவரை **தோடஞ்ஞர்** என்றும் Born Critic என்றும் அழைத்துள்ளனர்.

❍ ❍ ❍

"போலிப் புலவருடைய பிழைகளைக் கண்டிப்பதில் இவருக்கு நிகரானவரில்லை. பிழைகளை வெகுசீக்கிரத்திற் காண்பார். காண்பதும் வெகு சித்திரமாயிருக்கும். இது பற்றி இவரை "Born Critic" என்று சிலர் சொல்லுவர் (கணேசையர் — கு. புலவர் சரித்திர முகவுரை.)

**குமாரசுவாமிப் புலவர் வரலாறு – கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை (1970), பக் – 44**

## ஆதாரம்

மகாவித்துவ சிரோரத்தினமாய் விளங்கியவரும், சொற்குற்றம் பொருட்குற்றம் முதலிய வழுக்களை நுண்ணிதின் ஆராய்ந்து தூய்மை செய்வதில் இணையற்றவரும், அதனால் **தோடஞ்ஞர்** என்று பாராட்டப்பட்டவருமான சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், தம் மாணவரின் கசடுகளைப் போக்கி, அவர்களை இலக்கிய இலக்கண வரம்பில் நடத்துவதற்கு முதலிற் படிக்கும்படி விதிக்கும் புத்தகங்கள் இரண்டு. ஒன்று **மறைசை யந்தாதி**; சின்னத்தம்பிப் புலவரியற்றியது. மற்றையது **கலைசைச் சிலேடை வெண்பா.** மறைசையந்தாதியிலே புலவருக்கு ஆராமை அதிகம். அதில் வருஞ் சொற்கள் தொடர்களை அடிக்கடி சொல்லிச் சொல்லிச் சுவைப்பவர் புலவர். தோடஞ்ஞரான புலவர் அவர்கள் கொண்டாடுவதிலிருந்தே மறைசையந்தாதியின் தமிழ்மரபு வரம்பு எத்தகையது என்பது உணரத்தக்கது. (தோடம்—தோஷம், குற்றம். ஞர்-அறிபவர்; ஆராய்பவர்.)

**இலக்கியவழி – திருத்திய பதிப்பு (1994), பக் – vii**
**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

# ‘ஈழமும் தமிழும்’ தொடரில் வெளியான நூல்கள்




## 1. யாழ்ப்பாண மன்னர் நிறுவிய தமிழ்ச்சங்கம்


யாழ்ப்பாணப் பாரம்பரியத்தில் காணப்பெறும் இத்தகைய விடயங்களை அறிஞர்களினதும் மற்றோரினதும் கண்ணோட்டத்திற்கு எடுத்துவருவது நல்ல முயற்சியாகும். மூல ஆதாரங்கள் தேடியெடுக்கப்பட்டு துல்லியமாகவும் தெளிவாகவும் நூலில் அளிக்கப்பட்டுள்ளது.


**– பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை**

## 2. சைமன் காசிச்செட்டியின் அகராதி முயற்சிகள்

ஞானம் பாலச்சந்திரனின் இவ்வெளியீடு காசிச் செட்டியின் அகராதி முயற்சிகளையும் அத்துறையில் அவர் முன்னோடித் தமிழராய்த் திகழ்ந்தவாற்றையும் குவிமையப்படுத்துவதாய் இருந்தாலும், அவரது பல் துறைப் பங்களிப்புக்களின்பாலும் வாசகர் கவனத்தைத் திசைமுகப்படுத்துவதாய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**– பேராசிரியர் சி. தில்லைநாதன்**




## 3. கிரகசார எண்ணல் (கி.பி. 1506)

தமிழ் ஆய்வு, தமிழியல் ஆய்வாக பரிணமித்துள்ள இக்காலகட்டத்திலே, ஞா. பாலச்சந்திரன் தருகின்ற நூல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவர் ஈழத்து இலக்கிய வரலாற்றுக்குப் ‘புதிய ஒளி’ பாய்ச்சும் பணியில் ஈடுபட்டுள்ளார். கி.பி. 1506ஆம் ஆண்டு வெளியாகிய ‘கிரகசார எண்ணல்’ என்னும் வானசாஸ்திர நூல் இப்போதுதான் முதன்முறையாக எமது பார்வைக்குக் கிடைக்கின்றது.


**– பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

## 4. தாலவிலாசம்




ஈழத்தில் 18ஆம் நூற்றாண்டில் தோன்றிய தாலவிலாசம் என்னும் நூல் பற்றியதாக ஞானம் பாலச்சந்திரனின் இந்நூல் விளங்குகிறது. பலரால் அறியப்படாதிருந்த தால விலாசம் பற்றிய முழுத் தகவல்களையும் சேகரித்தது மாத்திரம் அன்றி, அவற்றை அக்குவேறு ஆணிவேறாக ஆய்வுசெய்து, அந்தநூல் பற்றிய பூரணமான பதிவினை ஆசிரியர் தந்துள்ளார்

**– பேராசிரியர் துரை. மனோகரன்**




## 5. மெல்ஹொ பாதிரியார் மொழிபெயர்த்த புதிய ஏற்பாடு (கி.பி. 1759)

இந்நூலிலே ஞானம் பாலச்சந்திரன் “தமிழ் அச்சுத்துறையினூடாகத் தமிழ் வரலாற்றை” அணுக முற்பட்டுள்ளார். இது தொடர்பாகப் பெருந்தொகை யான ஆவணங்களைப் பார்வையிட்டதுடன் அவற்றி லிருந்து பயனும் சுவையுமுடைய பல தகவல்களை நமக்குத் தருகிறார்.

வழக்கமாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரே ‘தமிழ் உரைநடையில் சந்திபிரித் தெழுதுதல்’, ‘தரிப்புக் குறிகளைப் பயன்படுத்தியமை’ ஆகிய இரண்டையும் தமிழ் உரைநடைக்கு அறிமுகம் செய்தார் என்று கூறுவது வழக்கம். ஆனால் ஞானம் பாலச்சந்திரன் பிலிப் டி மெல்ஹொ அறிமுகம் செய்தார் என்பதை சான்றுகளுடன் கூறியுள்ளார்.

**– பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

## 6. சித்திரக்கவித் திரட்டு (பக்கங்கள் 1022)




சித்திரக்கவியின் பன்முகப் பரிமாணங்களை அறிந்துகொள்ள விரும்பு வோருக்கும் மேற்கொண்டு ஆய்வுகளை முன்னெடுக்க விழைவோருக்கும் இத்தேட்டம் நல்விருந்தாகும்.

**– பேராசிரியர் சி. தில்லைநாதன்**

ஆசிரியரை ஓர் இலக்கியத் தொல்லாய்வாளர் (Literary Archaeologist) என்று கூறலாம்.

**– பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

தமிழியல் ஆய்வு வரலாற்றைப் பொறுத்தவரை அதற்கு ஒரு புதிய ஆய்வுத்துறை விரிவாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**– பேராசிரியர் நா. சுப்பிரமணியன்**

இச்சித்திரக்கவித் திரட்டு நமது முதுசங்களுள் ஒன்றாகக் கருதத்தக்கது.

**– பேராசிரியர் எம். ஏ. நு.்.மான்**

முத்திரை பதித்த பிரமாண்டமான தயாரிப்பு.

**– பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

தமிழ் இலக்கிய உலகில் பெரும் சாதனையாகும்.

**– பேராசிரியர் துரை மனோகரன்**

கவனிப்புக்குரித்தான, தொகுப்புநூல் – பதிப்புநூல் – ஆய்வுநூல்!

**– பேராசிரியர் செ. யோகராசா**

## குறிப்புகள்....

இவ்வாறான
ஓர் ஆய்வுத் தலைப்பைத்
தெரிவுசெய்தமை இந்நூலின்
தனிச்சிறப்பும் தனித்துவமும் ஆகும்.
ஞானம் பாலச்சந்திரன். ஈழத்துத்
தமிழ் இலக்கிய. இலக்கண. கணித.
சோதிட விற்பன்னர்களுக்கு
வழங்கப்பட்ட பட்டங்களையும்
அவை சமூகத்தால்
வழங்கப்பட்டதற்கான
காரணங்களையும் இந்நூலில்
ஆராய முற்பட்டுள்ளார்.
தமிழ்கூறும் நல்லுலகினால்
நன்கு அறியப்படாத பல
தமிழறிஞர்களின் பங்களிப்புகள்
இந்நூலிலே
சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.
ஞானம் பாலச்சந்திரன் போன்ற
ஆய்வாளர்களைப் பொதுவாக
எம்மத்தியில்
காண்பது அரிது.

பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

ISBN 978-955-8354-74-2
9 789558 354742